CHRD

மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின்

# மனித உரிமைகளுக்கான நவீன யுக்திகள்



பயிலுனர்களுக்கான சாதனம்

**மனித உரிமைகளுக்கான நவீன யுக்திகள் நிகழ்ச்சித் திட்டம்**

அனுசரணையாளர்

சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிலையம் (CVT)
ஐக்கிய அமெரிக்கா

மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின்

# மனித உரிமைகளுக்கான நவீன யுக்திகள்

## பயிலுனர்களுக்கான சாதனம்

மனித உரிமைகளுக்கான நவீன யுக்திகள் நிகழ்ச்சித் திட்டம்

அனுசரணையாளர்

சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்களுகான நிலையம் (CVT)
ஐக்கிய அமெரிக்கா

மனித உரிமைகளுக்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றிய
மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின்
ஸ்தாபக தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியும் சட்டத்தரணிகள் சங்கத்தின்
முன்னாள் தலைவருமான காலஞ் சென்ற **திரு டி.டபிள்யூ அபேயகோன்** அவர்களுக்கு
இம்மலரை காணிக்கையாக செலுத்துகின்றோம்.

## உள்ளடக்கம்...


1. முன்னுரை 03

2. மனித உரிமைக்கான பாதுகாவலர்கள் 05

3. வன்முறைகளுக்கெதிரான தொலைபேசி வலையமைப்பு 09

4. மகஜரின் பலம் 11

5. பாதிப்புக்குள்ளானவர்களை மனித உரிமைகளின் கண்காணிப்பாளர்களாக பயிற்றுவித்தல் 13

6. அரச பணிமனைகளை சீர்திருத்தல் 15

7. பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கான தீர்வுகள் 17

8. கொடூர சம்பவங்கள் தொடர்பான வரலாற்றுப் பதிவுகளை கிடைக்க கூடியவாறு செய்தல் 19

9. நினைவுகளை பாதுகாத்தல் 21

10. மானிடவியல் இராசாயன பகுப்பாய்வு 23

11. யுத்தத்தின் போது ஏற்பட்ட குற்றசெயல்களுக்கான சர்வதேச நீதி வழங்கல் 26

12. இராணுவத்தில் பணியாற்றிய சிறுவர்கள் மீண்டும் தமது வீடுகளுக்கு திரும்பி வருதலை ஆதரித்தல் 28

13. மீறல்களை பரிசீலனை செய்தல் 31

14. நஷ்டஈடு கோரிக்கைகள் 33

15. தண்டனைகளிலிருந்து தப்பமுயல்பவர்களுக்கெதிராக செயற்படுதல் 35

16. கடந்த காலத்திற்கான பொறுப்பை கையேற்றல் 37

17. எழுத்துரு செய்திகளை அனுப்புவதன் மூலம் வலையமைப்புகளை கட்டியெழுப்புதல் 39

18. பொலிஸ் படையில் சீர் திருத்தங்களை ஏற்படுத்துதல் 41

19. ஓர் ஐக்கியமான முன்னனியை கட்டியெழுப்புதல் 43

20. அடுத்த தலைமுறையினருக்கு கல்வியறிவூட்டல் 45

21. கிராமப்புறங்களும் சட்ட ஒழுங்கு முறைகளை பெற்றுக் கொள்ள வழிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் 47

22. மனித உரிமைகளுக்காக போராடுபவர்கள் மேலும் ஊக்கத்துடன் செயற்படுவதற்கு உதவுதல் 49

23. சித்திரவதைகள் பற்றியதான பதிவுகளை ஆவணப்படுத்தல் 51

24. கிராமப்புறங்களுக்கும் சட்டக்கல்வி 53

25. சமூக நீதியினை அறிவதற்கான புதிய வழி முறை 55

# முன்னுரை

மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் இந்நாட்டில் மனித உரிமைகளை பாதுகாப்பதிலும் முன்னேற்றுவதிலும் கடந்த பல வருடங்களாக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது. இதன் நடவடிக்கைகளில் ஓர் அம்சமாக மனித உரிமைகளை கையாளுவதில் பல்விதமான யுக்திகளை பிரயோகித்து வருகின்றது. மனித உரிமைகளும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் உயிர் நாடியாக இதன் வலைப்பின்னலில் அங்கம் வகிக்கும் அரச சார்பற்ற, சமூகம் சார்ந்த சிவில் அமைப்புகளை கருதுகின்றது. மனித உரிமைகளை பாதுகாப்பதிலும் அதனை முன்னேற்றுவதிலுமான கடந்த கால அனுபவங்களின் அடிப்படையில் கண்டறிந்த ஓர் உண்மை, சிவில் சமூகங்களின் ஆற்றலை வலுப்படுத்துவதன் மூலமே இந்நாட்டில் சரியான தாராள ஜனநாயகத்தை அஸ்திவாரமாக கொண்ட ஓர் நிலையான சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியும். ஜனநாயகம், மனித உரிமை, சட்ட ஆட்சி, சுதந்திரமான நீதித்துறை, மாற்று கருத்தை ஏற்று கொள்ளும் சகிப்பு தன்மை போன்ற தத்துவங்களை தன்னகத்தே கொண்ட ஓர் தாய் திருநாட்டை கட்டியெழுப்ப வேண்டிய ஓர் தார்மீக பொறுப்பு இந்நாட்டையும் மண்ணையும் நேசிக்கின்ற ஒவ்வொரு பிரஜையினதும் தலையாய கடமையாகும்.

மேற்கூறிய இலட்சியத்தை அடைய இந்நாட்டில் ஓர் துடிதுடிப்புள்ள சிவில் சமூகத்தை கட்டியெழுப்புவதற்கு இந்நவீன யுக்திகள் மிகவும் அத்தியாவசியமானதும் இன்றியமையாததோர் அம்சமுமாகும். இவற்றை நோக்கமாகக் கொண்டு மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் மனித உரிமைகளுக்கான நவீன யுக்திகளை மனித உரிமைகளுக்காக செயற்பட்டு வரும் செயற்பாட்டாளர்களுக்கு ஓர் வழிக்காட்டியாக அமையுமென இந்நிறுவனம் நம்புகின்றது.

ஐக்கிய அமெரிக்காவிலுள்ள சித்திரவதைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிலையத்தினால் (CVT) தொகுக்கப்பட்ட இருநூறு யுக்திகளில் முதற்கட்டமாக 25 யுக்திகளை தமிழில் மொழிபெயர்த்து வழங்குகின்றது.

இதன் மூலப்பிரதியானது பல வருடக்காலமாக உலகலாவிய ரீதியில் ஆய்வுகளை நடாத்தி ஆங்கிலதில் பூரணத்துவமாக திருத்தியமைக்கப்பட்ட மனித உரிமைகளுக்கான நவீன யுக்திகளை கொண்ட பயிலுனர்களுக்கான சாதனம் துருக்கியிலுள்ள அங்காரா நகரத்தில் சித்திரவதைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிலையத்தினால் நடாத்தப்பட்ட கருத்தரங்கில் அறிமுகம் செய்யப்பட்டது. அந்நிகழ்வில் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் பிரதிநிதித்துவம்படுத்தப்பட்டதன் விளைவாகவே மனித உரிமைகளுக்கான நவீன யுக்திகளை கொண்ட நிகழ்ச்சி திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்விருபத்தைந்து நவீன யுக்கிகளையும் தமிழில் மொழி பெயர்த்த எம் நிலையத்தில் கடமையாற்றிய செல்வி அகலியா சுந்தரன் அவர்கட்க்கும், இதை அச்சிடுவதற்கு நிதி உதவி வழங்கிய ஐக்கிய அமெரிக்காவிலுள்ள சித்திரவதைகளினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிலையத்திற்கும் (CVT), மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் தனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்து கொள்கின்றது.

**நீ. கந்தசாமி**
**செயலாளர்**
**மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம்**

**மனித உரிமைகளுக்கான பாதுகாவலர்கள் : சர்வதேச தொண்டர்கள் ஊடாக ஆபத்துக்குள்ளாகக் கூடிய மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கு பாதுகாப்பும், ஊக்கமும் வழங்குதல்.**

சர்வதேச சமாதான தொண்டர் குழுவானது (PBI) அரசாங்கத்தாலும், துணைப்படை அமைப்புக்களாலும் அச்சுறுத்தலுக்குள்ளான மனித உரிமைகள் செயற்பாட்டாளர்களுடன், சர்வதேச கண்காணிப்பாளர்களையும் இணைத்து அனுப்பி வைக்கின்றது. எனவே மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் துஸ்பிரயோகம் இடம் பெற்றுள்ளது தொடர்பாக சாட்சியமளிக்கும் போது கண்காணிப்பாளர்கள் நாட்டின் மேலதிகாரிகளுக்கும், அதேவேளை தம் சொந்த நாட்டின் அரசாங்கத்திற்கும் மற்றும் உலகத்திலுள்ள எனைய செயற்பாட்டடாளர்கள் அனைவருக்கும் இவை தொடர்பாக எச்சரிக்கை அறிவிப்பை வழங்குவார்கள். சர்வதேசத்திற்கு மறுமொழி சொல்ல வேண்டிய நிலை ஏற்படும் என்கிற விழிப்புணர்வு காரணமாக துஸ்பிரயோகக்காரர்கள் தம்முடைய திட்டமிட்ட தாக்குதல்களை நடத்துவதிலிருந்து தடுக்கப்படுகின்றனர். அதேவேளை இணைந்து சென்ற செயற்பாட்டாளருக்கு அவர்களுடைய மனித உரிமைகள் செயற்பாடுகளை தொடர்ச்சியாக விரிவடையச் செய்ய அதிகாரம் அளிக்கப்படுகின்றது. 1980 களின் முதலில் கௌத்தமலாவில் ஆரம்பிக்கப்பட்ட 'நிறுவனமயப்படுத்தப்பட்ட' இணைந்து செயற்படுதல் ஆலோசனையை முதலில் அறிமுகப்படுத்தியவர்களில் PBI குறிப்பிடத்தக்கது. PBI தற்போது கொலம்பியா, இந்தோனேசியா, மெக்சிக்கோ மற்றும் கௌத்தமாலா போன்ற நாடுகளில் 80க்கும் அதிகமான தமது தொண்டர்களின் செயற்பாடுகளை தளராது கொண்டு நடாத்துகின்றது.

இந்த யுக்தியில் அவதானிக்கக் கூடிய அம்சமாக தொண்டர்கள் விளங்குவதுடன் இதன் வெற்றியானது உலகத்திலுள்ள எனையவர்களின் செயற்பாடுகளிலேயே தங்கியுள்ளதுடன், அச்சுறுத்தலோ அல்லது பாதிப்போ ஏற்படுமிடத்து தொண்டர்கள் உடனடியாக சர்வதேசத்தின் கவனத்திற்கு கொண்டுவருதல் வேண்டும். இதன் முடிவில், தொண்டர்கள் அவர்களுடைய குடும்ப அங்கத்தவர்கள் மற்றும் நண்பர்களுக்கான வலையமைப்பை அவர்களுடைய வேலைக்குள் கொண்டு வருவதன் காரணமாக அடிக்கடி பரந்த செயற்பாட்டாளர்களுக்கான அனுபவங்களையும் மற்றும் கடந்தகால தொடர்புகளையும் தம்வசப்படுத்திக் கொள்கிறார்கள்.

*சர்வதேச இணைந்துசெல்லுதல்* ஆனாது மனித உரிமை செயற்பாட்டாளர்களுக்கும், தொண்டர்களுக்கும் கடினமானதாகவொன்றாக காணப்படும் எனெனில் இவர்களின் தனிப்பட்ட வாழ்வில் தொடர்ச்சியான அபாயங்கள், நெருக்கடி மற்றும் தடைகளை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். PBI யானது மிக உயர் பெறுமதி வாய்ந்த வலுவூட்டலையும், ஊக்கத்தையும் உள்ளூர் அடிமட்ட செயற்பாட்டாளர்களுக்கு வழங்கி வருகின்றது. இணைந்து போதல் நடவடிக்கை கேட்கப்படும் பட்சத்தில் மட்டுமே வழங்கப்படுகின்றது. மேலும் இணைந்து செல்லுதலில் உள்ள அவர்கள் தாமாக உள்ளக தொடர்புகளின் எந்த ஒரு அதிகாரத்திலும் ஈடுபடுவதில்லை.

இது பற்றி மேலும் அறிவதற்கு இவ்யுக்தி பற்றிய சிறுகையேடு எமது இணையத்தளமான www.newtactics.org யில்செயற்பாடுகளுக்கான கருவிகள் கீழ் தரப்பட்டுள்ளது. அத்துடன் நூலசிரியர்கள் Liam Mahony மற்றும் Louis Enrique Eguren எழுதப்பட்டதும் 1997 ல் Kumarian பிரசுரத்தால் வெளியிடப்பட்ட ***ஆயுத மற்ற பாதுகாவலர்கள்:மனித உரிமைகளை பாதகாப்பதற்கான சர்வதேச இணைந்து செல்லுதல்*** என்னும் நூலை பார்க்க.

இந்த யுக்தியானது யாதார்த்த உண்மையின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளதுடன் நாம் அனைவரும் நீதிக்கும் அரசாங்க அழுத்தங்களுக்கும் உட்பட்டவர்கள ஆவர். தேசிய தலைவர்கள் தேவையற்ற அவப்பேறுகளை உண்டாக்கும் நெருக்கடிகளை விரும்பமாட்டார்கள். கீழ்தரமான கொலைகாரர்களும் தமது தரங்கெட்ட செயற்பாடுகளை மற்றவர்கள் கவனிப்பதை விரும்புவதில்லை.

யாவரும் தமது குற்றச்செயல் நடவடிக்கையை ரகசியமாகவே வைத்திருக்க விரும்புவதுடன், அதற்கான சாட்சிகள் இருப்பதையும் விரும்பமாட்டார்கள். சர்வதேச சாட்சிகளின் முன்னால் நேரடியாக குற்றவாளிகளை முகம் கொடுக்க வைப்பதன் மூலமும், அதேவேளை தலைவர்களுக்கு உட்புற நெருக்கடிகளை வழங்குவதன் மூலமும் தாக்குதல்கள் தடுக்கப்படுகின்றது. அச்சுறுத்தலுக்கு உட்பட்ட செயற்பாட்டாளருக்கு அச்சுறுத்தல் ஏற்படும் சந்தர்ப்பங்களில் அவர்கள் அருகில் இருந்து சர்வதேச ஒத்துழைப்பை விரிவுபடுத்தி வழங்குவதன் மூலம் அவர்கள் தம்முடைய துணிகரமான செயற்பாடுகளிலிருந்து ஊக்குவிக்கப்படுவதுடன், பலப்படுத்தவும் படுகின்றார்கள்.

*சர்வதேச இணைந்து செல்லுதல்* யுக்தியானது எனைய சந்தர்ப்பங்களிலும் பயன்படுத்தப்படுகின்றது. அதாவது உடல் ரீதியான இடர்களுக்கு உட்படக் கூடியவர்களுக்கும், துஸ்பிரயோகங்களுக்கு காரணமான குற்றவாளிகளும் சர்வதேசத்தின் அபிப்பிராயங்களால் கட்டுப்படுத்தப்படும் சாத்தியம் காணப்படுகின்றது. இந்த யுக்தியை இலங்கையின் வன்முறைகளற்ற சமாதானப்படை, வெஸ்ட் பாங்கின் கிறிஸ்தவ சமாதான மேம்பாட்டுக்குழு, கௌத்தமாலாவின் தேசிய நிறுவனங்களினதும் மக்களதும் கூட்டமைப்பு, இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன சகல கிறிஸ்தவ திருச்சபைகளின் கூட்டமைப்பு, கொலம்பியாவின் நல்லிணக்கத்திற்கான கூட்டமைப்பு மற்றும் மெக்ஸிக்கோவின் சென்ர பிறே பார்டொலேமே டி லாஸ் கஸஸ் போன்ற குழுவினர்கள் பயன்படுத்துகின்றார்கள்.

இந்த ஆற்றல் எனைய சூழ்நிலைகளுக்கும் பயன்படுத்தக் கூடியவொன்றாகும். திருச்சபை ஊழியர்களின் அடையாள சக்தி அல்லது ஊடகவியாளர்கள். உதாரணமாக பதற்றம் மற்றும் வன்முறை சம்பவங்களை பாதுகாப்பான அல்லது அமைதியான சூழ்நிலைமைகள் மூலம் அடிக்கடி மாற்றி அமைக்க முடியும். ஏனெனில் குற்றவாளிகள் அவ்வாறான சூழ்நிலைமைகளில் தமது தவறான நடவடிக்கைகளை முன்நடாத்திச் செல்ல விரும்புவதில்லை. மேலும் ஹேயிட்டியிலுள்ள சுகாதார ஊழியர் சமூக சுகாதார செயற்பாடுகளின் பங்காளர்கள் (accompagnateurs) ஒவ்வொரு நாளும் எயிட்ஸ் மற்றும் கசநோயாளர்களை சென்று பார்வையிடுவதுடன் மருத்துவ மற்றும் உளரீதியான பங்களிப்பையும் வழங்குவதன் மூலம் நோய்கள் தொடர்பான அச்சத்தை போக்குவதுடன் அவர்களுடன் சாதாரணமாக எல்லோராலும் பழகமுடியும் என்பதை சமுதாயத்திற்கு எடுத்துக்காட்டுகின்றார்கள். இங்கும் அடையாளமும், சமூக செல்வாக்கும் பொறுப்பு வாய்ந்த மூன்றாம் தரப்பின் பிரன்னமும் நடத்தையை மாற்றவல்லதாக உள்ளது.

### எப்படி எங்களின் போராட்டத்திற்குள் சர்வதேசத்தின் கவனத்தை கொண்டுவர முடியும்?

**திட்டம் ஆ: ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்டவர்களை பாதுகாப்பதற்காக அவர்கள் சிறை வைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்ளல்**

செர்பியாவில் மிலேசெவிக் ஆட்சியின் போது இளம் செயற்பாட்டாளர்கள் குழுனரால் உருவாக்கப்பட்டதே எண்ணிக்கையை பாதுகாத்தல் என்ற சிந்தனையாகும். ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்படுதல் என்னும் அச்சுறுத்தலை வலுவற்ற தாக்குவதற்கு இரண்டாம் தடவையான ஆர்பாட்டத்தை ஏற்படுத்துவதன் மூலம் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்ட அங்கத்தவர்களை பாதுகாக்கின்றது. அத்துடன் நகைச்சுவை மற்றும் அரங்குகளையும் பயன்படுத்துவனூடாக அரச அதிகாரங்கள் தொடர்பான அச்சத்தையும் பொது மக்களிடையே குறைவடையச் செய்கின்றது.

**Otpor** ( செர்பியாவின் கிரோசியா மொழியில் **“எதிர்ப்பு”** என பொருள்படும்) ஆனது இரண்டாம் தடவையான ஆர்பாட்டத்தை உருவாக்குதல் அதாவது அவர்களுடைய திட்டம் -ஆ ஆர்ப்பாட்டத்தின் போது இடம்பெற்ற கைதுகள் தொடர்பாக உடனடியாக பொலிஸ் நிலையத்திற்கு வெளியில் நிற்பவர்களுக்கு பதிலளிக்கப்படவேண்டும். பொலிஸ் நிலையத்திற்கு வெளியில் மிக அதிகளவிலான மக்கள் கூட்டமும் ஊடகவியாளர்களும் கூடி நிற்பதன் காரணமாக ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்ட செயற்பாட்டாளர்களை பொலிஸார் துன்புறுத்தவோ அல்லது தடுத்து வைக்கவோ பெரிதும் விரும்பமாட்டார்கள். அதேவேளை செயற்பாட்டாளர்களது அச்சம் குறைவடைவதுடன் வெளியிலிருந்து கிடைக்கும் பலமான ஆதரவின் வலுவையும் உணர்ந்து கொள்வர்.

**Otpor** ஆனாது கைது இடம்பெற்றவுடன் தமது விரிவான வலையமைப்பின் தொடர்புகளிலுள்ளவர்களை ஒன்று திரட்டி ஒழுங்கமைத்து “திட்டம்- ஆ” ஐ நடைமுறைப்படுத்துகின்றது. அவையாவன:

1. கைது செய்யப்பட்ட செயற்பாட்டாளர் எந்த பொலிஸ் நிலையத்திற்கு கொண்டுசெல்லப்படுகின்றார் என்பதை மொபைல் போன் வைத்திருக்கும் அவதானிப்பாளர் கண்காணிப்பார்.
2. சட்டத்தரணிகள் உடனடியாக பொலிஸ் நிலையத்திற்கு சமூகமளித்து செயற்பாட்டாளரை விடுவிப்பதற்கான சமரச பேச்சுவார்த்தையில் ஈடுபடுவர்.
3. **Otpor** ரின் செயற்பாட்டாளர்கள் ஒரு மணித்தியாலத்திற்குள் பொலிஸ் நிலையம் மற்றும் நிறுவன காரியாலயம் முன்பாக ஒன்று கூடுவார்கள். குழுவினரை சந்தோஷப்படுத்தவும், அவர்களுக்கிடையில் அமைதியை பேணவும் மற்றும் ஈடுபாட்டுடன் செயற்படவும் விளையாட்டுகளிலும், பாடல்கள் பாடுவதிலும் ஈடுபடுபடுத்தப்படுவார்கள். கைதுசெய்யப்பட்டவர் விடுவிக்கப்படும் வரை அவர்கள் பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக தரித்து நிற்பார்கள்
4. ஊடக தொடர்பாளர்களும் ஆர்ப்பாட்டங்கள் தொடர்பான செய்திகளையும், விடுவிக்கப்பட்ட கைதிகள் தொடர்பான வாக்குமூலங்களை பெறுவதற்காக பொலிஸ் நிலையம் செல்லுவார்கள்.
5. எதிர்கட்சியினர் கைது தொடர்பாக கண்டனம் தெரிவிப்பதுடன் தமது அங்கத்தவர்களை பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பி வைப்பர்.
6. உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் சர்வதேச நிறுவனங்களிடம் கைது தொடர்பான கண்டங்களை தெரிவிக்கும் படி கேட்டுகொள்ளும்

கணிசமான நேரம் மற்றும் முயற்சிகள் மூலம் நம்பிக்கையானதும், விரிவானதும், வலிமைமிக்கதுமான வலையமைப்பை உருவாக்கியுள்ளதன் காரணமாக விரைவாக எல்லோரையும் ஒன்றுசேர்க்கக் கூடியதாகவுள்ளது. அத்துடன் யார் யாரை கூப்பிடமுடியும் என்பது பற்றியும், கைது இடம்பெற்ற பின்னர் ஒவ்வொருவரும் சரியாக என்ன செய்யவேண்டும் என்ற விரிவான திட்டம் வரையப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே உடனடியாகவே இரண்டாவது ஆர்ப்பாட்டம் ஆரம்பிக்கப்படுகின்றது. வலையமைப்பு தொடர்பான அநேகமான தகவல்கள் தனிப்பட்ட அங்கத்தவர்களின் மொபைல் போன்களில் பாதுகாக்கப்பட்டு வந்தன. இதனால் பொலிஸாரினால் தகவல்களை பறிமுதல் செய்யவோ அல்லது அழிக்கவோ முடியவில்லை.

இது பற்றி மேலும் அறிவதற்கு இவ் யுக்தி பற்றிய சிறுகையேடு எமது இணையத்தளமான www.newtactics.org யில் செயற்பாடுகளுக்கான கருவிகள் கீழ் தரப்பட்டுள்ளது.

**Otpor's** இன் "திட்டம்- ஆ" எல்லோரையும் கவரக்கூடிய ஒரு உதாரண யுக்தியாக திகழ்வதுடன் அதன் இலக்கு இந்த நூலின் எல்லா பகுதிகளிலும் விவரிக்கப்பட்டுள்ளது. மேலும் பொலிஸ் நிலையத்தினுள் இடம்பெறவுள்ள சித்திர வதையிலிருந்து செயற்பாட்டாளர்களை உடனடியாக பாதுகாத்துக் கொள்ளக் கூடிய ஒரு யுக்தியாக இருப்பதால் மக்கள் இதனை பயன்படுத்துகின்றனர். பொலிஸ் அதிகாரத்தை பலவீனப்படுத்துவதன் மூலம் மிலோவியின் சர்வதிகார ஆட்சியின் துஸ்பிரயோகங்களை மக்கள் நிறுத்தத் தலைப்பட்டனர். இது கைது செய்யப்பட்ட செயற்பாட்டாளர்களின் நம்பிக்கை உடைந்துபோகமல் மீள்உருவாக்க உதவி செய்தது. மேலும் கைது செய்யப்படலாம் என்ற அச்சத்திலிருந்து தொண்டர்களையும் மீட்டெடுக்க உதவியது. வெளிப்படையாக மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு ஆர்பாட்டங்கள் சர்வதிகார ஆட்சியின் துஸ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தியது மட்டுமின்றி ஜனநாயக எதிர்ப்பு இயக்கத்தையும் வளர்ச்சியடையச் செய்தது.

**Otpor's** வெற்றியானது எண்ணற்ற காரணிகளில் தங்கியுள்ளது. நாடானது கொடுங்கோல் சர்வதிகாரத்தின் கீழ் துன்பப்பட்டுகொண்டு இருந்தவேளை **Otpor's** இன் சட்டத்தரணிகள் சிறிதளவு பொலிஸ் செல்வாக்குடன் செற்பாட்டளார்களை சந்திக்க முயன்று கொண்டு இருந்தனர். அதேவேளை சர்வதேசத்தின் கருத்துக்களையும், ஒன்று திரண்டெழுந்த மக்கள் கூட்டத்தையும் கண்டு பொலிஸிசும், சர்வாதிகாதிபாரத்தின் ஆட்சியாளர்களும் கிலி கொண்டனர். முழுமையாக ஒரு மூடிய சமூகமாக இருந்தால் இவைகள் வெளியுலகத்திற்கு தெரிய சாத்தியமில்லாமல் போயிருக்கும்.

*கைது செய்யப்பட்ட அனைத்து செயற்பாட்டாளர்களும் கதாநாயகர்கள் ஆகிவிடுகின்றார்கள். ஏனெனில் பொலிஸ் நிலைய வாசலிலநூற்றுக்கு மேற்பட்ட மக்கள் அவர்களுக்காக ஆதரவு தெரிவித்து காத்துக் கிடக்கின்றார்கள். அவர்கள் இனிப் பயப்படபோவதில்லை. மிக அவசியமான செயற்பாட்டாளர் யார் எனவும், யார் கூடுதலாக கைது செய்யப்பட்ட செயற்பாட்டாளர் எனவும் போட்டியே அவர்களுக்கிடையில் ஆரம்பித்து விட்டது. நாங்கள் சர்வதிகாரத்தை பார்த்து சிரிக்கின்றோம். அத்துடன் முழு உலகமும் எங்களுக்கு என்ன நடந்தது என்பதை புரிந்து கொண்டுவிட்டது.*

சூரணா சுமிட்யாணிக்
Otpor செர்பியா

**உங்களுடைய திட்டம் ஆ என்ன?**

**வன்முறைகளுக்கெதிரான தொலைபேசி வலையமைப்பு: கையடக்கத் தொலைபேசிகளைப் பயன்படுத்துவதன் மூலம் தொடர்பாடல் வலையமைப்பை உருவாக்கி அதன் மூலம் வன்முறைகள் தோன்ற முன்னர் தடுத்தல்**

வட அயர்லாந்தில் கடுமையான முறுகல் நிலைமை இருப்பதை தெளிவாக பார்க்க கூடியதாக இருப்பதுடன் அரசியல் சார்பான கத்தோலிக்கர்களும், புரட்டஸ்தாந்து கட்சிக்கார்களும் பொதுவான உடன்பாட்டிற்கு ஒரு போதும் வரமாட்டர்கள் என்பதை அடிக்கடி நிரூபித்துள்ளார்கள். இருப்பினும் இருபக்கத்திலுள்ள இவர்களில் சிலர் வன்முறைகள் தீடிரென எழும்புவதை தடுத்து வருகின்றனர். இந்த யுக்தியானது இரண்டு சமூகங்களுக்கிடையிலான வன்முறைகளை தடுப்பதற்கு முன் வரக்கூடியதாகவும் அதேவேளை தேவையான தகவல்களை வழங்கக் கூடிய ஆற்றலுள்ள தலைவர்களை இனங்கண்டு அடையாளப்படுத்துகின்றது .

Interaction Belfast நிறுவனமானது (முன்னர் பிறிங்பில்ட் உள்ளக சமூக அபிவிருத்தி திட்டம் என எல்லோராலும் அறியப்பட்டது ஆகும்) கையடக்க தொலைபேசி வலையமைப்பை உருவாக்கியுள்ளதனூடாக பெல்பாஸ்ட்டின் எளிதில் மாற்றங்களுக்குட்படுகின்ற சுற்றுப்புறப் பகுதிகளுக்கு இடையில் தீடிரென எழும்புகின்ற வன்முறைகளிலிருந்து மக்களை காப்பாற்றுகின்றது.அதாவது கத்தோலிக்க மற்றும் புரட்டஸ்தாந்து சமூகங்களைச் சேர்ந்த தொண்டர்கள் அனைவருக்கும் கையடக்க தொலைபேசி வழங்கப்பட்டு வன்முறையை ஆரம்பிக்கும் சாத்தியப்பாட்டுடன் குழுக்கள் ஒன்று கூடும் பொழுது அல்லது வன்முறைகள் தொடர்பான வதந்திகள் பரவ ஆரம்பிக்கும் பொழுது எல்லைக்கு மறுபுறத்திலுள்ள அவர்களுக்கு சார்பானவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ளுகின்றது.

“எல்லை” என்பது ஒரு பகுதியானது கத்தோலிக்கர்கள் (தேசியவாதி/ குடியரசு ஆதரவாளர்) மற்றும் புரட்டஸ்தாந்து மதத்தவர்கள் வாழ்கிற (தொழிற் சங்க ஆதரவாளர் / அரச ஆதரவாளர்) சுற்றுப்பிரதேசங்களில் அடுத்தடுத்தாக உள்ளது. அத்துடன் இது பௌதிக சுற்றுசுவர்களால் பிரிக்கப்பட்டுள்ளது அதன் ஒரு அம்சமாகும். எல்லையோரகங்களிலுள்ள சுற்றுபிரதேசத்தை சேர்ந்தவர்கள் வடஅயர்லாந்தில் வாழ்கின்றவர்களிலும் பார்க்க பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கியவர்களாக இருப்பதுடன் சுவருக்கு அப்பால் என்ன நடக்கின்றதோ என்கிற சந்தேகமே பாதிப்புகளை ஏற்படுத்தக் கூடியதாக அல்லது வன்முறைகளை அதிகரிக்கக் கூடியதாக உள்ளது.

இரு பகுதிகளிலுள்ள தொண்டர்களும் கிழமைக்கு ஒரு தடவை சந்திப்பை மேற்கொள்வதுடன் தமது தொலைபேசி எப்பொழுதும் பாவனையிலிருக்குமாறு வைத்திருப்பர்.சம்பவங்கள் நடைபெறும் பொழுது அல்லது வன்முறைகள் தோன்றுவது போல் இருக்கும் நேரங்களில் உதாரணமாக விளையாட்டு நிகழ்வுகள் அல்லது கத்தோலிக்க மதத்தவரது பிரதேசங்களுடாக புரட்டஸ்தந்தவர்களது அணிவகுப்பு செல்லும் பொழுது வலையமைப்பின் திட்டமிடலானது முக்கிய பிரதேசங்களை முன்னரே கண்காணிக்க தொடங்குகின்றது. “விளையாட்டுத்தனமான அல்லது பொழுதுபோக்கு தன்மையுள்ள வன்முறைகள்” நிகழ்வுகளை தொண்டர்கள் தம்மால் பயனுள்ள முறையில் தலையீடு செய்து தடுத்து கொள்ள முடியும் என கண்டறிந்துள்ளனர்.அதாவது இளம் பிராயத்தினர் கிளர்ச்சியை துாண்டுபவர்களாகவும் அல்லது வதந்திகளுக்கு பதிலடி கொடுக்கக் கூடியவர்கள் அதாவது திட்டமிடப்பட்ட அல்லது துணைப்படை தன்மையான வன்முறைகள் நிகழ்வுகளை குறிப்பிடலாம்.

எல்லைப்புறங்களில் வன்முறைகளை மேற்கொள்ளும் கூட்டத்தினர் ஒன்று சேர்வதை அறிய நேரும் பொழுதோ அல்லது பார்க்க நேரும் பொழுதோ அல்லது மற்றைய பகுதிகளிலிருந்து வன்முறைகள் தோன்றப்போகின்றது என வதந்திகள் எழுப்படும் பொழுது தொண்டர்கள் எல்லையின் மறுபகுதியிலுள்ள தமக்கு சார்பானவர்களை தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளுவதன் காரணமாக தொண்டர்கள் சம்பவங்கள் வன்முறையாக தோற்றம் பெறுவதற்கு முன்னரே தமது பகுதியை சேர்ந்தவர்களுக்கிடையில் அமைதியான சூழ்நிலையை உருவாக்கி விடுகின்றார்கள்.

இவ் நிகழ்ச்சி திட்டம் தொடங்கிய காலத்திலிருந்து தொலைபேசி வலையமைப்பானது இருபக்கத்தவர்களையும் வன்முறைகளிலிருந்து காப்பாற்றியதுடன், இரு பக்கத்து எல்லைகளிலிருந்தும் வன்முறை செயற்பாடுகள் பற்றிய சரியான தகவல்களை சமூகத்தவர்களுக்கு வழங்கியுள்ளது. கிழமைக்கு ஒரு தடவை என்கிற தொண்டர்களின் இச் சந்திப்பானது பொதுஜனங்களின் முக்கிய குழுக்களை ஒன்றுசேர்ப்பதன் ஊடாக சமூகங்களுக்கிடையலான முறையான ஒரு கலந்துரையாடலை உருவாக்கியுள்ளது. இந்த தொடர்பு முறையானது முதிர்ச்சியடைந்த பின்னர் இவ்வலையமைப்பானது இரு பகுதியினரது பிரதேசத்தின் புதுவாழ்விற்கான நீண்ட கால செயற்பாட்டை உள்ளடக்கி அவர்கள் எதிர்நோக்கி வந்த பொதுவான பிரச்சனைகளில் கவனம் செலுத்துகின்றது.

கையடக்க தொலைபேசி தொழிநுட்பத்தின் பரந்தளவிலான பாவனையானது உடனடியாக நிகழக்கூடிய அல்லது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற துஸ்பிரயோகங்கள் தொடர்பாக என்றுமில்லாதாவாறு உடனடி மறுமொழிகளுக்கான சாத்தியப்பாடுகளை அதிகரித்துள்ளது. வட அயர்லாந்தில் தொலைபேசி மூலம் ஏற்படுத்தப்படும் இத்தொடர்பாடலானது முதலில் இரண்டு பகுதியினருக்கும் இடையில் வலுவான தொடர்புகள் இல்லையெனினும் நடைப்படுத்தக் கூடியவொன்றாக இருப்பதுடன் வன்முறைகளை முடிவுக்கு கொண்டுவர பெரும் பங்காற்றுகின்றது.

*எல்லைப்பகுதிகளில் இளம் வயதினர் ஒன்று கூடும் பொழுது எந்தளவிற்கும் வதந்திகள் அடிக்கடி பரவுகின்றது, பின்னர் வதந்திகள் தாமாகவே மற்றவர்களை கவருவதுடன் மறுபக்கத்து எல்லையிலும் குழுவினர்களை ஒன்றுசேரச் செய்கிறது. எனினும் உங்களால் மறுபக்கத்திலுவர்களுடன் தொலைத்தொடர்பை ஏற்படுத்துவதன் மூலம் உண்மையில் எதாவது நடைபெறவிருக்கின்றதா இல்லையா என்பதை விசாரித்தறிய முடிகின்றது. அதாவது இதனூடாக மீளவும் தத்தமது சொந்த குழுவினரிடம் சென்று அந்த வதந்திகளை இல்லாது செய்யமுடியும். வலையமைப்பு ஸ்தாபிக்க முன்பாக எங்களிடமிருந்த மறுபக்கத்து இளம்பிராயத்தவர்கள் "இதை அவர்கள் அங்கு செய்கின்றார்கள்", அல்லது "அவர்கள் இதை எங்களுக்கு செய்கின்றார்கள்" என குறிப்பிட்டு கோரிக்கைகளை முன்வைப்பர். அவ்வேளைகளில் எங்களுக்கு எந்த ஒரு வழியும் தெரியவில்லை. ஆனால் இப்பொழுது இவை எல்லாவற்றிக்கும் எதிரிடையாக வழிகள் எம்மிடம் இருக்கின்றது.*

**– பிரிங்பீல்ட் உள்ளக சமூகத்தின் அங்கத்தவர்**
**தொலைபேசி வலையமைப்பு அபிவிருத்தி திட்டம்**
**இன்று Interaction Belfast, வட அயர்லாந்து**

**மகஜரின் பலம்: மிகப் பெரியளவில் ஒங்கமைப்பட்ட மகஜரின் பலத்தின் மூலம் அழுத்தங்களை கொடுத்து அரசாங்கத்தை மாற்றங்களை ஏற்படுத்தச் செய்தல்**

அஜென்ரினாவிலுள்ள ஒரு குழுவானது சிறியளவில் அறியப்பட்டதும் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படாதிருக்கும் அரசியல் யாப்பு முன்னேற்பாடுகளை பற்றி பொது மக்களுக்கு கல்வியறிவூட்டவும், மாற்றங்களை செயற்படுத்தவும், அதேநேரம் சட்டங்களில் சீர்திருத்தங்களை கொண்டு வந்து நிறைவேற்ற பாராளுமன்றத்தை அறிவுறுத்துகின்றது.

2002 இல் Poder Ciudadano (பிரஜைகள் சக்தி) யானது மகஜரொன்றில் யாப்பு ஏற்பாடுகளின் படி கையெழுத்துக்களை சேகரித்தது. எனவே அஜென்ரினாவின் காங்கிரஸ் அதனை கடப்பாடுடன் கவனத்தில் கொள்ளவேண்டியிருந்தது. யாப்பு ஏற்பாட்டின் கோரிக்கையின் படி சமூக அங்கத்தவர்களால் மற்றும் நிறுவனங்களால் முன்வைக்கப்படுகின்ற சட்டத் தீர்மானங்களை காங்கிரஸ் கலந்தோசிக்க வேண்டும். அத்துடன் மிக நீண்டதான அந்த சட்ட இயற்றுயையானது அஜென்ரினாவிலுள்ள 24 மாவட்டங்களில் குறைந்தது 6 மாவட்டங்களது 1.5 வீதமான கையெழுத்துக்களை தாங்கியிருத்தல் வேண்டும்.

1989 இல் அஜென்ரினாவின் சிவில் உரிமைகளை பாதுகாப்பதை நோக்காக கொண்டு Poder Ciudadano நிறுவனமானது பிரஜைகள் குழுவினால் உருவாக்கப்பட்டது. இதன் மகஜரானது பல ஆண்டுகளுக்கு முன்பு அதாவது நாட்டின் பொருளாதாரம் சீர் குலைந்து போயிருந்த வேளையில் முக்கிய பிரச்சனைகளான பசி மற்றும் அரசாங்க அலுவலர்களுக்கான ஒய்வு பெறுதலின் மேலதிக நன்மைகள் போன்ற முக்கிய பிரச்சனைகளை கவனத்தில் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. இந்த மகஜர் பசியுடன் தொடர்புபட்டு பலவீனமான நிலையிலுள்ள கர்ப்பிணித்தாய்மார்களுக்கும், ஐந்து வயதிற்குட்பட்ட சிறுவர்களுக்கும் உணவு ஊட்டுவதை முன்மொழிகின்றது. அஜென்ரினாவில் பொருளாதாரம் சீரழிந்து போன காலத்திலிருந்து அரைவாசிக்கும் அதிகான சனத்தொகையினர் வறுமைக் கோட்டிற்கு கீழே வாழ்ந்து வந்தனர். வறுமையில் மிகப் பெரிய சனத்தொகையில் தொகையாக சிறுவர்கள் இருப்பதுடன், சிறிதளவு சமூக திட்டங்களே சிறுவர்களுக்கிடையில் பசியைப் போக்க முன்னெடுக்கப்பட்டது. இந்த மகஜரின் இலக்காக காங்கிரஸை வற்புறுத்தி இந்த பிரச்சனையை கவனத்தில் கொள்ள வைப்பதுடன் அதற்கான தீர்வுகளையும் முன்மொழிகின்றது.

Poder Ciudadano மகஜரை வடிவமைத்ததுடன், நாடு முழுவதும் 250 தொண்டர்களை வேலைக்கு அமர்த்தி அவர்களை முக்கியமான அறிவுறுத்தல்கள அடங்கிய தாள்களை கொண்டு பயிற்றுவிக்கின்றது. அத்தாளகளில் யார் கையொப்பமிடுவதற்கு தகுதியுடையவர்கள் என்பதை தெளிவு படுத்துவதுடன், நிரப்பபட்ட மகஜர் எங்கு அனுப்பப்பட வேண்டும் அத்துடன் கையொப்பமிடுபவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய முக்கியமான தகவல்கள் எவை என்பனவற்றை முக்கியமாக அறிவுறுத்துகின்றது. அநேகமான தொண்டர்கள் இணையத்தளத்தின் ஊடாகவும் திட்டமிடல் இணைப்பாளர் மூலமும் வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களாவர். தொண்டர்கள் பொது இடங்களில் அவர்களுடைய சமுகத்தவர்களை சந்திப்பதன் மூலம் கையெழுத்துக்களை சேகரித்தனர். அவை சந்தைகள், புத்தகக் கடைகள், மருந்துக் கடைகள், பத்திரிகை விற்பனை நிலையங்கள், தொலைத்தொடர்பு நிலையங்கள் போன்றனவாகும். Poder Ciudadano பல்வேறு நிறுவனங்களுடனும் ஊடகங்களுடனும் மற்றும் புகழ்மிக்க வானொலி நபர்களுடன் இணைந்துள்ளது. இவ் புகழ்மிக்க வானொலி நபர்கள் வானலையுடாக சேகரிக்கப்படுகின்ற கையெழுத்து அட்டவனைகள் உள்ள இடங்களை தெரிவிக்கின்றது அதேவேளை முக்கிய நாளேடுகள் புதிதாக சேகரிக்கப்பட்ட கையெழுத்துக்களின் எண்ணிக்கையை வாசகர்களுக்காக நாளாந்தம் கொண்டு செல்லும்.

அஜென்ரினாவில் பிரஜைகளால் இது தொடர்பான ஆரம்ப அறிமுகமானது மிக நல்ல அளவில் கிடைக்கப் பெற்றதுடன் அது Poder Ciudadano வினால் காங்கிரஸிக்கு கையளிக்கப்பட்டது. அந்த பிரேரனைகள் காங்கிரஸினால் சில மாற்றங்களுக்குட்படுத்தபபட்டு 2002 இன் இறுதியில் நிறைவேற்றப்பட்டது. உணவினை பெற்றுக்கொள்வதற்கான ஆரம்ப உரிமைத் திட்டமானது ஒரு மில்லியனுக்கும் அதிகமான கையெழுத்துக்களை சேகரித்ததுடன் காங்கிரஸ் அரசினால் கடப்பாட்டுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த பசிக்கான போராட்ட திட்டம் ஆரம்ப நிலையில் செய்து முடிக்கப்பட்டுள்ளதுடன் முதலாவது உணவு நிலையம் அண்மையில் திறக்கப்பட்டது.

Poder Ciudadano மிகப்பரந்தளவில் காணப்பட்ட அக்கறையின்மை திருத்தியமைத்து உண்மையான மாற்றத்தை கொண்டுவந்துள்ளது.மக்களுக்கு அரசிடம் இருந்த நம்பிக்கையின்மை அல்லது அரசின் பதிலளியத்தன்மையானது பிரஜைகளை அவர்களுடைய சொந்த முயற்சியின் மூலம் சட்டத்தில் மாற்றங்களை உண்டாக்கியுள்ளது. Poder Ciudadano மிகப் பலமாக கட்டியமைக்கப்பட்ட தொண்டர் வலையமைப்புகள், நட்புறவு நிறுவனங்கள், மற்றும் ஊடகங்கள் மூலம் மகஜர் தொடர்பான விடயத்தை அறியப்படுத்தி எண்ணற்றளவில் தேவையான கையொப்பங்களை சேகரித்துக் கொண்டது.

**பாதிப்புக்குள்ளவர்களை மனித உரிமைகளின் கண்காணிப்பாளர்களாக பயிற்றுவித்தல்: மனித உரிமைகள் மீறல்களால் பாதிப்புக்குள்ளவர்களுக்கு அவர்களுடைய உரிமைகளை பாதுகாக்கவும் கண்காணிப்பதற்கும் பயிற்களை வழங்கல்.**

மெக்ஸிக்கோவிலுள்ள ஒரு குழுவினர் மீறல்களை கண்காணிப்பதற்காக சுதேசிகளை பயிற்றுவிக்கின்றார்கள். ஆவணப்படுத்தல் முறையிலும், சட்டரீதியான பாதுகாப்புகளிலும் புதிய திறன்களை தயார் நிலையில்வைத்திருப்பதன் காரணமாக சமூகத்திலுள்ள அங்கத்தவர்கள் அவர்களுடைய முறைப்பாடுகளை அதிஉயர்மட்டத்திற்கு கொண்டு செல்லக் கூடியதாக இருக்கின்றது.

சியாப்பாஸ் சமுதாய பாதுகாவலர் வலையமைப்பு(Red de Defensores Comunitarios por los Derechos Humanos அல்லது Red ) ஆனது சுதேசிய சமுதாயத்தின் இளம் அங்கத்தவர்களுக்கு அவர்களுடைய உரிமைகளை பாதுகாப்பதற்கும், காண்காணிப்பதற்கும் பயிற்சிகளை வழங்குகின்றது.

சியாப்பாஸில் பரந்தளவிலான இராணுவத்தின் பிரசன்னமும் அதேவேளை மெக்ஸிக்கோ அரசாங்கத்திற்கும் சப்டிஸ்டாஸினருக்கும் இடையில் அதிகரித்த துணைப்படை தன்மை வாய்ந்த யுத்தத்தின் விளைவாக சட்டரீதியற்ற தடுத்து வைப்புகள்,சிவில் சமுகத்தினருக்கு இராணுவத்தினரால் வழங்கப்படும் தொல்லைகள் (குறிப்பாக சோதனை சாவடிகளில்), சட்டரீதியற்ற கொலைகள் மற்றும் தடுத்து வைப்பு அத்துடன் இராணுவத்தினாராலும் துணைப்படை குழுக்களாலும் பெண்களுக்கெதிராக மேற்கொள்ளப்படுகின்ற பாலியல் துஸ்பிரயோகங்கள் உள்ளடங்கலாக அதிகளவிலான மனித உரிமை மீறல்கள் இடம்பெற்று வந்தன.

1999 இல், RED ஆனது 7 சியாப்பாஸ் பிரதேசங்களையும் சமுதாயத்தையும் பிரதிநிதிப்படுத்தும் வகையில் 14 பேரை பயிற்றுவித்தது. 2001 இல் இரண்டாம் வகுப்பு பாதுகாவலர்கள் பயிற்சி பெறத் தொடங்கினார்கள். இந்த பாதுகாவலர்கள் அவர்களது சமூக அங்கத்தவர்களாலே நியமிக்கப்பட்டவர்கள் ஆவார் அத்துடன் சமூகத்தவர்களும் சேர்ந்து நடவடிக்கைகளில் ஊக்கத்துடன் தொழிற்பாட்டனர்.

பாதுகாவலர்களுக்கு மனித உரிமைகளின் கொள்கைகள், கோட்பாடுகள் உள்ளடக்கியதான மற்றும் நடைமுறைத்திறனுடன் தொடர்புபட்ட மனித உரிமை மீறல்களை ஆவணப்படுத்தல், அறிக்கை செய்தல் மற்றும் பாதுகாத்தல் போன்ற உத்தரவாதங்களை மாதந்த கருத்தரங்குகள் மூலம் பயிற்றுவிக்கின்றது.இந்த செயற்பாடுகளினூடாக மனித உரிமை மீறல்களை தோற்றுவிப்பது என்ன என்பது பற்றியும், வீடியோ, புகைப்படம் மற்றும் கணனிகள் போன்றவற்றை பயன்படுத்தி எவ்வாறு ஆவணப்படுத்துதல் போன்ற முறைகளையும் அவர்கள் கற்றுக்கொள்கின்றார்கள். அத்துடன் அவர்கள் மறுமொழி பகர்தலுக்கான பல்வேறு விதமான வழிவகைகளையும் கற்றுகொள்கின்றார்கள்.

நியாயமற்ற முறையில் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக தமது முறைப்பாடுகளை அரசாங்கத்திடம் முன்வைத்தும், பத்திரிகைகளுக்கும் மனித உரிமைகள் கண்காணிப்பு குழுக்களுக்கும் அது தொடர்பான தகவல்களை வழங்கி சட்ட ரீதியான பாதுகாப்பு அல்லது விடுதலைக்கு வேண்டுகின்றது.அவர்கள் கைது செய்யப்பட்டவர் இருக்கும் கண்டுபிடிக்க முயலுவதுடன், உரிமைகள் ஆபத்தான நிலைக்குட்படும் பொழுது ஆட்கொணர்வு மனுவிற்கான (ஒருவர் சட்டரீதியாக தடுத்து வைக்கப்பட்டவர் உயிருடன் இருக்கின்றரா என்பதை தீர்மானிப்பதற்காக நீதிபதிக்கு முன்னால் அவரை கொண்டு வருவதற்கான உரிமை) தேவையை முன்வைப்பர்.மனித உரிமை மீறல்கள் ஏற்படுகின்ற பொழுது குற்றச்சாட்டை யாரிடம் கையளிக்க வேண்டும், அதற்கு தேவையான சட்ட முன்னெச்சரிக்கையின் அவசியத்தை எப்படி ஒழுங்கமைக்க வேண்டும் என்பது அவர்களுக்கு தெரியும்.வழக்குகள் நீதிமன்றத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்னரும் அல்லது நீண்ட கால சட்டரீதியான தந்திரங்களை தேவைப்படுகின்ற பொழுதும் பாதுகாவலர்கள் சட்ட ஆலோசகர்களுடன் இணைந்து கூட்டாக செயற்படுவர்.

பாதுகாவலர்களுக்கு அவர்களுடைய நாட்டில் தம்முடைய சமூகத்திற்கு அவசியமான பல்வேறுபட்ட கடமைகளில் ஈடுபட்டுள்ளார்கள். அவர்கள் மனித உரிமை மீறல்களினால் பாதிக்கப்பட்டவர்களினதும், சாட்சிகளினதும் அத்தாட்சிகளை சேகரிப்பதுடன், மீறுதல்கள் தொடர்பான வீடியோ மற்றும் புகைப்பட அத்தாட்சிகளை சேகரிப்பதுடன், மீறுதல்கள் இடம்பெறும் பொழுது தலையீடுதலுக்கான பொறுத்தமான வழிகளையும் தீர்மானக்கின்றார்கள். அத்துடன் எனைய சமூக அங்கத்தவர்களுக்கு இந்த வேலையை பயிற்றுவிக்கின்றார்கள்.

இந்த அணுகுமுறையானது எண்ணற்ற வெற்றிகளுக்கு வழிகாட்டியுள்ளதுடன் சுதேச சமுதாயத்தின் சுயாட்சி உரிமையை அதிகரித்துள்ளதுடன், வெளிப்புற செயற்பாட்டாளர்களான அரச சார்பற்ற நிறுவனங்களில் தங்கியிருப்பதை தவிர்க்கின்றது.

Red இன் மாதிரியானது சமுதாயத்தையும், உள்ளூர் தலைவர்களையும் மனித உரிமைகளுக்கான ஒரு போராட்டத்தின் மையத்திற்குள் நிறுத்தியுள்ளதன் காரணமாக வெளியாட்கள் ஆலோசகர்களாக மட்டுமே கடமையாற்ற முடியும்.எந்த ஒரு பிரதேசத்திலும் மனித உரிமைகள் ஆதரவைப் பலப்படுத்த முயலுகின்ற நிறுவனங்களின் மூலமாக வலையமைப்பிலுள்ள சுதேச வாசிகள் அவர்களது சமுதாயத்தின் மனித உரிமைகளை சுதந்திரத்துடன் பாதுகாப்பதற்காக பயிற்றுவிக்கப்படுகின்றார்கள். பாதிக்கப்பட்டவர்களை பயிற்றுவிப்பதன் மூலம் மனித உரிமைகள் துஸ்பிரயோகங்களை கண்காணித்தலும் மற்றும் அவர்களுடைய உரிமைகளை பாதுகாத்தலும் என்கின்ற யுக்தி சுதேச சமுதாயத்தின் மனித உரிமைகள் விழிப்புணர்வையும், பாதுகாப்பையும் அதிகரிப்பதுடன் அந்த சமூகம் தனித்து தொழிற்படக்கூடிய ஆற்றலை கட்டியெழுப்புகின்றது.

The defensores *(பாதுகாவலர்கள்) சட்டரீதியான “முதல் உதவிகளை” வழங்குகின்றார்கள் அதாவது அவர்கள் சமூகத்திற்கான முதல் வரிசை பாதுகாப்பிற்காக பயிற்றுவிக்கப்படுகின்றார்கள். எது உரிமை மீறல், எதை ஆவணப்படுத்துதல் அவசியம், அதை எப்படி செய்யத்தொடங்குவது என்பது பற்றி அவர்களுக்கு தெரியும். இந்த யுக்தியின் விளைவாக நிரந்தரமான சுதேச குழுவின் நிலையான பிரதிநிதிகள் அவர்களாகவே சட்டசார்பான பாதுகாப்பை ஒழுங்கமைத்து நிறைவேற்றுகின்றார்கள்.அதேநேரம் மற்றவர்களையும் பயிற்றுவிக்கின்றார்கள்.*

**-மிக்கியுல் ஏன்சல் டி லொஸ் சன்டொஸ்**

Red de Defensores Comunitarios por los Derechos Humanos

மெக்ஸிக்கோ

**அரச பணிமனைகளை சீர்திருத்தல்:உடனுழைத்தல் தொடர்பு முறைகளை அரசாங்க அலுவலர்களுடன் கட்டியெழுப்புவதன் மூலமாக அதன் நிர்வாக முறைமைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி உதவுதல்**

ரஸ்ய நிறுவனம் தன்னுடைய தூண்டுதல் யுக்தியை பயன்படுத்தி அதற்குள்ளேயே மாற்றங்களை முன்னேடுத்து உதவுகின்றது.மற்றொரு வகையில் சொல்லுவதெனில் கடுமையாக எதிர்ப்பதை விட இனிமையான சொல், மென்மையான தூண்டுதல் மூலம் மாற்றங்களை கொண்டு வருதல் இலகுவானது.

பிரஜைகள் கண்காணிப்பு என்னும் நிறுவனமானது ஜனநாயக ரஸ்ய அலுவலர்களில் மனித உரிமைகளை ஆதரிப்பவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு மாற்றங்களையும், சந்தர்ப்பங்களையும் வழங்குவதன் மூலம் ரஸ்யாவின் ஜனநாயக செயற்பாடுகளை பலப்படுத்துகின்றது. ரஸ்யாவின் பிறப்புரிமைச் சட்டம் மற்றும் சர்வாதிபத்திய ஆட்சிமுறைகள் போன்றன ரஸ்யாவின் ஜனநாயக அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு பாரிய அளவில் சவால் விடுப்பனவாக உள்ளன.அரசாங்க அலுவலர்களுக்கு எப்படி பொதுஜனங்களுக்கு பதிலளிப்பது என்றும், ஜனநாயக நடைமுறையின் அவசியங்கள் பற்றியும் அனுபவங்கள் கிடையாது.

பிரஜைகள் கண்காணிப்பானது முன்னனியிலுள்ள அரச அலுவல்கள் மற்றும் உள்விவகார அமைச்சு, பொலிஸ் மற்றும் நீதித்துறை உள்ளடங்கலாக அவற்றின் செயற்பாடுகளை அவதானத்துடன கண்காணித்து வருகின்றது.அதன் பிறகுஅவர்கள் ஜனநாயக அரசாங்கத்தில் அதிக ஈடுபாட்டை வெளிப்படுத்தும் மற்றும் மனித உரிமைகளுக்கு ஆதரவுகளை வழங்குகிற அலுவலர்களை அடையாளம் கண்டுகொள்வதுடன் அதாவது பொதுஜனங்கள் தாமாகவே மாற்றங்களை வரவேற்பதில் நம்பிக்கையுள்ளவர்களாவும், அத்துடன் தனிப்பட்ட ஒவ்வொருவரையும் சந்திக்கும் பொழுது அவர்களுக்கு பொறுத்தமான முறையை பின்பற்றக் கூடியவர்களாகவும், ஆதரவை எப்பொழுதும் நல்குபவர்களாகவும், மதிப்பு கொடுப்பவர்களாகவும் இருப்பதையும் அடையாளம் கண்டுகொள்கிறது. சில நேரங்களில் இன் நிறுவனம் அரசியல் பணிமனை வேலைகளுக்கு பயன்தரக்கூடிய அல்லது மனித உரிமைகளுக்கு மதிப்பை அளிக்கக்கூடிய, மற்றும் ஜனநாயகத்திற்கு ஆதரவு தரக் கூடியதுமான சர்வதேச ஆவணங்களை பரிவர்த்தனை செய்வதில் ஈடுபடுகின்றது. மேலும் பிரஜைகள் கண்காணிப்பானது கருத்தரங்குகளுக்காக வெளிநாடுகளிலுள்ள அலுவலர்களை அழைத்து வருவதுடன், ரஸ்யாவின் அலுவலர்கள் வெளிநாட்டிலிருக்கும் தம்முடன் வேலை செய்த அலுவலர்களை சந்திப்பதற்கு ஆதரவு நல்குகின்றது. ரஸ்யாவின் ஆட்சிக்காலத்தில் ஒரு சில அலுவலர்களுக்கே வெளிநாடுகளுக்குச் சென்று சக ஊழியர்களின் ஜனநாயக வேலைகளைப் பற்றி கற்றுக்கொள்வதற்கு சந்தர்ப்பங்கள் கிடைத்தன. இதன் காரணமாக பிரஜைகள் கண்காணிப்பானது பயண மற்றும் பரிமாற்றல் சந்தர்ப்பங்களை பயன்படுத்தி அரசாங்க அலுவலர்களை பயிற்றுவித்துத்ததுடன் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கும் செயற்பாட்டுடன் உழைக்கவும் ஆர்வமூட்டுகின்றது.

இந்த குழுவானது இப்படியான சர்வதேச ஆவணங்கள் கிடைக்கப் பெறதலும், சர்வதேச சகஊழியர்களுடன் ஏற்படுத்தப்பட்ட தொடர்புகளானது நடைமுறை சாத்தியங்களை விளங்கிக்கொள்ள உதவுவதுடன், தரத்தையும் பேணுவதுடன் அரசாங்கத்திற்கும், பிரஜைகளுக்கும் இடையிலான உடனுழைப்பானது மனித உரிமைகளுக்கான செயற்பாடுகளை ஆதரிக்கும் என நம்புகின்றது.அதுமட்டுமின்றி இது அரசாங்க அலுவலர்களுக்கு உண்மையான தகவல்களை வழங்குவதுடன் அரசாங்கத்தையும், அவர்களுடைய நாட்டின் மனித உரிமைகளையும் முன்னேற்றுவதற்கான முன்னுதாரணமான வழிமுறைகளையும் அளிக்கின்றது.

இந்த முயற்சிகளின் பயனாக பிரஜைகள் கண்காணிப்பானது அரசாங்க அலுவலர்களுடனும், நிறுவனங்களுடன் எண்ணற்ற உடனுழைத்தல் தொடர்பு முறைகளை உருவாக்கியுள்ளது.

அத்துடன் அலுவலர்களின் பல்வேறுபட்ட துறைகளை அணுகி அவர்களை ஆதரித்து அவர்களது முயற்சிகளினூடாக திணைக்களங்களை அபிவிருத்தி செய்வதுடன், சிவில் சமூகத்தை பலப்படுத்த உதவுவதுடன் அரசாங்க நிறுவனங்களுக்கும் சமூகத்திற்குமிடையில் மிக அதிகளவிலான ஜனநாயக உறவுகளை உருவாக்கியுள்ளது.

இது பற்றி மேலும் அறிவதற்கு இவ்யுக்திகள் பற்றிய சிறுகையேடு எமது இணையத்தளமான www.newtactics.org யில் செயற்பாடுகளுக்கான கருவிகள் கீழ் தரப்பட்டுள்ளது.

பிரஜைகள் கண்காணிப்பானது பொது அலுவலர்கள் நாட்டின் முதல் பிரஜைகள் என்பதை நினைவுறுத்த முயல்வதுடன் யாப்பு உரிமைகளின் படி கட்டாயம் மதிக்கப்பட வேண்டியவர்கள் என்பதையும், அடுத்ததாக அவர்கள் அரசாங்க அலுவலர்கள் என்பதையும் வலியுறுத்துகின்றது. பிரஜைகள் கண்காணிப்பிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் அரசாங்க முறைமைகளில் கூட பொதுமக்களிடம் தொடர்பு கொள்ளவோ அல்லது ஜனநாயகத்தில் கடமையாற்றுவதற்கான பாராம்பரியமொன்று இல்லையெனினும் அவற்றை மாற்றுவதற்கான திறவுகோல்கள் உண்டு என்பதாகும். மற்றைய நிறுவனங்களும் இந்தமாதிரியான பயனுள்ள சந்தர்ப்பங்களை நமது நாட்டிலும் எற்படுத்திக்கொள்ள விரும்புவதுடன் அதற்கு உயர்மட்டத்திலான தனிப்பட்ட அரசியல் நிபுணத்துவ திறன் மற்றும் ஓரளவு திறனுள்ள வளங்களின் சேர்க்கையும் அவசியம் என்பதை அவர்கள் ஞாபகத்தில் வைத்துள்ளார்கள். இந்த அரசியல் நிபுணத்துவ திறன் மற்றும் வளங்கள் போன்றவையும் இந்த யுக்திக்கு முக்கியமான அம்சங்களாக இருப்பதுடன் மனித உரிமையை முன்னேற்றுவதற்கு வேண்டிய உதவியை நாடும் ஒருவருக்கு தொடர்ச்சியான ஆதரவையும் வழங்குகின்றது.

அதிகாரமிகுந்த மரபுமுறைகள் இலகுவில் அற்றுப்போவதில்லை. அவை சிலவேளைகளில் காலத்திற்கும் ஆதிக்கம் செலுத்தக் கூடியது மட்டுமன்றி எம்மை பின்தங்கியதான ஒரு நிலைமைக்கும் இட்டுச்செல்ல கூடியதாகும். உதராணமாக 2004 மார்ச்சில் பிரஜைகள் கண்காணிப்பும் மற்றும் ரஸ்யாவிலுள்ள பல்வேறு பிரதேசத்தைச் சேர்ந்த சமாதான நீதவான்களுடன் இணைந்து இரண்டு நாள் மாநாட்டின் ஊடாக வடமேற்கு ரஸ்யா மற்றும் எனைய பிரதேசங்களிலுள்ள நீதி மன்றங்களை அபிவிருத்தி செய்வதிலுள்ள பிரச்சனைகள் பற்றிய ஒரு கலந்துரையாடலை ஒழுங்குபடுத்தியது. நாங்கள் எங்களது அறிவுக்கு எட்டியவாறு துடிப்புடன் செயலாற்றிய இரண்டு உயர்நீதி மன்ற நீதவான்களையும் அத்துடன் செ‌ன் பீற்றரஸ்பேக்கின் நிர்வாகவியலாளரையும் மற்றும் எனைய பிரேதங்களிலிருக்கும் சனத்தொகை நிலையங்களையும் அழைத்தோம்.

மாநாட்டுக்கு இரண்டு கிழமை முன்னதாக எங்களுக்கு அறிவிக்கப்பட்டது என்னவெனில் உயர்நீதி மன்ற நீதவான்கள் எங்களது மாநாட்டில் நீதிவான்கள் பங்குபற்றுவதை தடைசெய்து விட்டார்கள் அல்லது அரசசார்பற்ற நிறுவனங்களால் அழைக்கப்படும் எந்தவொரு நிகழ்வுகளிலும் பங்குபற்றக் கூடாது என்பதாகும். ஆனால் உள்ளூர் நீதவான்கள் 1992 இல் தமக்கு வழங்கப்பட்ட சுதந்திரமான நிலைமைக்கு பொறுத்தமானவர்கள் என்பதை அவர்களாக நிரூபித்ததுடன், செ‌ன் பீற்றரஸ்பேக்கின் நகர நீதிமன்றத்தில் நடைபெற்ற மாநாட்டில் தமது ஆற்றல்களை முன்வைத்ததுடன், ஆரம்ப வேலைக்கான ஆதரவாளர்களாகவும் இருந்தனர். நீதிவான்கள் தைரியமாக முன்வந்து தமது உயர் ஸ்தானத்தை மக்களுக்கு வெளிப்படுத்தியன் காரணமாக எங்கள் முயற்சி வீணாகவில்லை என்பதையும் நீருப்பித்தனர்.

-Boris Pustinsev,
பிரஜைகள் கண்காணிப்பு, ரஸ்யா

**என்ன யுக்தியின் மூலம் எதிர்ப்புகளையும் (அல்லது எதிர்ப்புக்கு சாத்தியமானவைகள்) இணக்கத்திற்கு கொண்டு வரலாம்?**

**பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கான தீர்வுகள்: துஸ்பிரயோகத்திற்கான பதிவுகளை ஆவணப்படுத்துதல் மூலம் வேதனைகளிலிருந்து மீண்டு வருதலையும் நியாயத்தையும் மேம்படுத்தல்.**

கம்போடியாவிலுள்ள ஒரு குழு கம ருச்சின் இன அழிப்பு நடவடிக்கைக்கான துஸ்பிரயோகங்கள் தொடர்பான பதிவுகளை மக்களுக்கு கிடைக்கத்தக்க வகையில் ஆவணப்படுத்தியுள்ளதுடன் இன அழிப்பால் பாதிக்கப்பட்டவர்களதும் துஸ்பிரயோகங்களை மேற்கொண்டவர்களது நினைவுகளுக்கான பதிவுகளையும் பாதுகாக்கின்றது.

காம்போடியாவின் ஆவணப்படுத்தல் நிலையம் (DC-Cam) ஆனாது கம்போடியாவில் இடம் பெற்ற இன அழிப்பினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் குற்றவாளிகள் தொடர்பான பதிவுகளை சேகரிகப்பதன் மூலம் குடும்பத்தவர்களும் நண்பர்களும் காணமல் போனவர்களின் இறப்பு தொடர்பான சரியான முடிவுகளையும் கண்டுபிடிக்கஉதவுகின்றது. அதேவேளை DC-Cam ஆனாது இயலுமானவரை சட்டரீதியான அத்தாட்சிகளை சேகரிப்பதன் ஊடாக கம ரூச்தலைவர்களுக்கு எதிரான சட்ட ரீதியான வழக்குகளுக்கு பயன்படுத்தப்படுகின்றது.

DC-Cam ன் குடும்ப துப்பறியும் கோப்பு முறையானது பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கங்கள், குற்றவாளிகள் போன்ற இருவருக்குமே மறைந்து போன அவர்களுடைய அன்புக்குரியவர்களின் விபரங்களை தேட கம ரூச் ஆட்சியின் போது (1975–1979) பேணப்பட்ட தேடுதல் விபரப்பதிவுகள் ஊடாக உதவுகின்றது. DC-Cam னாது நான்கு தரவுத் தளங்களை கொண்டுள்ளதுடன் அதில் நூறாயிரத்திற்கும் மேற்பட்ட முக்கிய பக்கங்களையும், புகைப்படங்களையும், நேர்காணல்களையும் பட்டியல்படுத்தியுள்ளது. கம்போடியாவின் 170 மாவட்டங்களிலும், நாட்டின் ஏறத்தாள ஏனைய அனைத்து மாகாணங்களிலும் இடம்பெற்ற 19,466 புதைகுழிகள், 168 கைதிகள் மற்றும் 77 இனஅழிப்பு ஞாபச்சுவடுகள் போன்றவற்றை வரைதல் திட்டத்தின் மூலம் GPS தொழிநுட்பத்தை பயன்படுத்தி அடையாளப்படுத்தியுள்ளது.

கம ரூச்சினராலேயே உறவினர்கள் கொல்லப்பட்டனர் என்பதே அநேக ஆராயப்பட்ட முடிவுகள் ஆகும். இன்றும் குடும்பத்தவர்கள் முடிவுகளை கண்டு பிடிக்க முடிவதுடன், உண்மையில் என்ன நடந்தது என்பதை அறிவதற்கு உதவிகளும் மற்றும் இனஅழிப்பினால் ஏற்பட்ட மனஅதிர்வுகளிலிருந்து சமூகம் மீண்டு வர ஆரம்பித்துள்ளது. சிலவேளைகளில் இப் பதிவுகள் காணமல் போனவர்களின் சடலங்கள் இருக்கும் இடத்தை வெளிப்படுத்துவதால் பாதிக்கப்பட்டவரின் ஆத்மாவிற்கு வேண்டிய சமயச் சடங்கு செய்வதற்கு இடமளிக்கின்றது. ஏறத்தாள 80 வீதத்திற்கும் அதிகமான குடும்பங்கள் நிலையத்திற்கு வந்து தங்களுடைய அன்புக்குரியவர்களைப் பற்றி விசாரித்து அவர்களுக்கு என்ன நடந்தது எனபதை பற்றியவாது அறிந்து கொண்டு செல்லுகின்றனர்.

DC-Cam இன் இறுதி இலக்காக இனஅழிப்பிற்கான ஞாபகங்களை உயிர்ப்புடன் பேணிவருவதன் பலமான ஒரு எதிர்காலத்தை கட்டியெழுப்பவும், இந்த மாதிரியான ஒரு கொடூரச் செயல் இன்னொரு முறை நடை பெறமால் இருப்பதை தடுப்பதற்கும், கம்போடியா மக்கள் நியாயங்களை தேடிக்கொள்ளவும் உதவுகின்றது.

DC-Cam இன் இந்த யுக்தியானது கம்போடியாவில் பாரியளவில் துன்பத்தை அனுபவித்தும், மிக நீண்ட காலமாக துஸ்பிரயோகங்களால் பாதிப்படைந்த மக்களுக்கு மிகவும் பயனுள்ள ஒன்றாக இருந்து வருகின்றது.மிக நீண்ட காலமாக துஸ்பிரயோகங்களை எதிர்கொண்டு வரும் ஏனைய நாடுகளுக்கும் இந்த குழுவின் அனுபவம் மிகவும் பயனுள்ள ஒன்றாக இருக்கும்.

தகவல்களை வைப்பதற்கான ஒரு நிலையத்தை உருவாக்குவதற்கு குழுவானது குற்றவாளிகள் எதாவது ஆதரங்களை அல்லது ஆவணங்களை விட்டுச் சென்றுள்ளார்களா என்பதை கண்டுபிடிப்பதுடன் அது தொடர்பாக சடலங்களை தோண்டியெடுத்தல் மற்றும் இராசாயன பகுப்பாய்வு வேலைகளை மேற்கொள்ளுகின்றது. கம்போடியாவில் இன அழிப்பானது கல்வியறிவுள்ளவர்கள் பிரிவை இலக்கு வைத்ததன் காரணமாக் நீதி ஒழுங்குமுறைமையும் சீர்குலைத்தது.இதன் கருத்து முறைமைகளை மீள்கட்டியெழுப்புவதற்கு தகவல்கள மாத்திரமே பயன்பாட்டுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

**உம்முடைய சமூகத்தில் இடம்பெற்ற துஸ்பிரயோகங்கள் தொடர்பான வரலாறுகளை எப்படி நீங்கள் பதிந்து கொள்ளப் போகின்றீர்கள்?**
**இந்த வரலாறுகளை கொண்டு எப்படி மீண்டுவருதலையும் மேம்படுத்தலையும் மேற்கொள்ளப் போகின்றீர்கள்?**

**கொடூர சம்பவங்கள் தொடர்பான வரலாற்றுப் பதிவுகளை கிடைக்க கூடியவாறு செய்தல்: சட்ட உரிமைகள் என்னும் துணைவலுவைக் கொண்டு பாதிக்கப்பட்டவர்களுக்கான ஆவணங்களை பெற்று நியாயத்தை மேம்படுத்தல்**

பரகுவேயிலுள்ள The Centro de Documentation Y Archivo(ஆவணப்படுத்தலுக்கும் வரலாற்றுப் பதிவுகளுக்குமான நிலையம் அல்லது CDyA) யானது சட்ட நன்மைகளை பயன்படுத்தி முன்னாள் கைதிகளுக்கு ஆட்கொணரவிற்கான தரவுகளை வழங்குகின்றது. அதாவது அவர்களுடைய சொந்த வழக்குகள் தொடர்புபட்ட ஆவணங்களை கட்டுப்படுத்தும் உரிமையை வழங்குவதுடன் கொடூரங்களுக்கான வரலாற்றுப் பதிவுகளை உருவாக்குவதற்கும் உதவகின்றது.

35 வருட கால நாட்டின் சர்வதிகாரத்திற்கு பின்னர் CDyA யானது பொலிஸ் கோப்புக்களை பொதுமக்களுக்கு திறந்து விட்டது.

பரகுவேயின் யாப்பானது மற்றைய ஐந்து லத்தின் அமெரிக்க நாடுகள் போன்று ஆட்கொணர்வு தரவுகளின் உரிமைகளை உள்ளடக்கியுள்ளது. முன்னாள் கைதிகளுக்கு அவர்கள் பற்றியதும், அவர்களுடைய அனுபவங்கள் பற்றிய சேகரிக்கப்பட்ட தரவுகளை கட்டுப்படுத்துவதற்கு உரிமை இருக்கின்றது. முன்னாள் அரசியல் கைதியான மாட்டின் அல்மடா மகஜரை நிரப்பிய பின்னர் தனது சொந்த கோப்புக்களை பெற்றுக்கொள்வதற்காக உள்ளூர் நீதிபதியுடன் இணைந்து செயற்பட்ட பொழுது 1992 இல் லம்பறே என்னுமிடத்தில் பொலிஸ் நிலையத்தில் ஆயிரத்திற்கும் அதிகமான தடுத்து வைக்கப்பட்டவர்களின் கோப்புகளை கண்டுபிடித்தார்.

இந்த கைதிகள் ஆவணக்கோப்புகளானது, தடுப்பு அனுபவங்களை விபரமாகத் தருகின்றது அத்துடன் சித்திரவதை மற்றும் மனித உரிமை மீறல்களையும் உள்ளடக்குவதுடன் பலதரப்பட்ட லத்தின் அமெரிக்க சர்வாதிகாரங்களின் போது தடுத்து வைக்கப்பட்ட தனிப்பட்ட ஒவ்வொருவரின் கதைகளை உறுதிப்படுத்தவும் பயன்படுத்தக் கூடியவையாதுமாக இருப்பதுடன், பல்வேறு லத்தின் அமெரிக்க நாடுகளின் இராணுவ படையினர் மற்றும் முன்னாள் பொலிஸாசாருக் கெதிராக குற்றஞ்சாட்டுவதற்கான ஆதாரமாக இருப்பதுடன் காணமல் போன பிரஜைகளை உறுதிப்படுத்துவதற்காகவும் பயன்படுத்த முடிகின்றது.

பரகுவேயின் நீதிமன்றங்கள், மேல் நீதி மன்றம் உட்பட இறுதியில் எல்லா கோப்புக்களும் பொதுமக்கள் அனைவரும் கிடைக்க கூடியதாக எற்பாடு செய்யப்படுதல் வேண்டும் என ஆணை பிறப்பித்தது. வரலாற்றுப்பதிவு நிலையமானது இன்று CDyA கட்டுபாட்டில் உள்ளதுடன், ஆராய்ச்சியாளர்கள், விசாரணையாளர்கள், மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் பொது மக்களுக்காக திறந்து விடப்பட்டுள்ளது. CDyA கோப்புக்களை சட்ட வழக்குகளுக்கான அத்திவாரமாக பயன்படுத்துகின்றது. தீர்ப்பு மன்றங்களை ஒழுங்கமைத்து அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்ற தலைமை குற்றவாளிகளின் சித்திரவதை மற்றும் சட்டரீதியற்ற தடுத்து வைத்தல் தொடர்பான குற்றச்சாட்டுகளை முன்னேடுக்கின்றது. இருபது அலுவலர்கர்களுக்கு எதிராக வெற்றிகரமாக வழக்குத் தொடரப்பட்டது. இவ் வரலாற்று பதிவு நிலையமானது 1998 இல் பெரிய பிரித்தானியாவிலிருந்து ஸ்பேயினுக்கு கொண்டு வரப்பட்ட, நாடு கடத்தப்பட்ட குற்றவாளியான General Aususto Pinochet தாயகத்து ஆட்சியாளரிடமே ஒப்படைத்தலுக்கான வழக்கு தொடர்பாக சேகரித்து வருகின்றது.

CDyA யானது வரலாற்று பதிவு நிலையத்திலிருந்த 90 வீதமான ஆவணங்கள் மைக்ரோபிலீம் மற்றும் டியிற்றல் வடிவிலும் மாற்றியமைத்துவிட்டது. மேலும் இந்த குழுவானது UNESCO மரபுரிமைகள் பட்டியலிலும் தமது வரலாற்றுப் பதிவுகளை வைத்திருப்பதற்கு முயன்று வருகின்றது.

மனித உரிமைகள் துஸ்பிரயோகங்கம் தொடர்பான விபரங்களடங்கிய தகவல் கிடைக்கப்பெறுதலானது துஸ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு முக்கிய விளைவை ஏற்படுத்தியதுடன் அதே போன்று நீதி நிர்வாகத்திற்கு பின்னராக துஸ்பிரயோகங்களும் முடிவுக்கு கொண்டு வரப்பட்டன. ஆல்மடாவின் முயற்சியானது பரகுவேயில் அநேக கைதிகளின் அனுபவங்களை உறுதிப்படுத்தியதுடன் சட்ட வளங்களின் தெரிவினையும் ஏற்படுத்தியது.

பரகுவேயில் இந்த கோப்புகள் தற்செயலாக கண்டுபிடிக்கப்பட்டவை என்கிற பொழுதும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான கோப்புகளை திறப்பதை இலக்காக கொண்ட இந்த யுக்தியானது பல்வேறு அரசாங்கங்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றவொன்றாகும். ஜெர்மனியிலும் மற்றும் பல கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் உதராணமாக அரசாங்கங்கள் ரகசிய பொலிசாரின் பாதிக்கப்பட்டவர்களின் கோப்புகளை திறந்து விட்டுள்ளது. ஜெர்மனியின் கோப்புகளானது சுதந்திரமான ஒரு நிறுவனமான Gauck Authority பாரமரிக்கப்படுவதுடன் பாதிப்படைந்தவர்களுக்கு மட்டும் திறந்து விடப்பட்டுள்ளது. செக்கோஸ்லாவியா மற்றும் எனைய நாடுகளில் கோப்புக்களானது பாரபட்சமாக திறந்துவிடப்பட்டுள்ளதுடன், பாதிக்கப்பட்டவர்களால் பெற்றுக்கொள்ள முடியாதவைகளாகவும், சில கோப்புகள் அரசியல் சேவைகளின் நோக்கங்களுக்காக பிழையான விதத்தில் நழுவவிடப்பட்டுள்ளன.

இந்த யுக்தியின் அணுகுமுறை தொடர்பாக பல்வேறு விமர்சனங்கயும், பாடங்களும் கற்றறியப்பட்டுள்ளன. ஹவாட் சட்டக்கல்லூரியின் உண்மை ஆணைக்குமுவிற்கான மனித உரிமைகள் திட்டத்தைச் சேர்ந்த டினா ரொசன்பேர்க் உதாரணமாக குறிப்பிட்டதாவது ஜெர்மனி கோப்புகளை திறந்து விட்டது கோப்புகளின் ஒழுங்கின்மை தொடர்பான பிரச்சனைகளை முடிவு காண்பதற்காகவும் தகவல் பரிமாறியதாக குற்றஞ்சாட்டப்பட்ட நபர் உண்மையில் குற்றவாளியா என்பதை உறுதிப்படுத்தவாகும். அது ஒரு சுய பரிசோதனைக்கான ஒரு முறைமையாகும். ஆனால் அது செக் குடியரசின் விபரணத்தில் குறிப்பிடப்படவில்லை. அத்துடன் ஜெர்மனியில் தனக்கு தகவல் கொடுத்தவரை வெளிப்படுத்தும் உரிமை பாதிக்கப்பட்டவருக்கு உண்டு. மேலும் அது ஒரு பொதுமக்களுக்கான தகவல் இல்லை.

**குற்றவாளிகளை அடையாளப்படுத்துவதற்கும், துஸ்பிரயோகங்களை உறுதிப்படுத்துவதற்குமான தகவல்களை இலகுவில் பெற்றுக்கொள்வதற்காள என்ன மாதிரியான சட்டம் உங்கள் நாட்டில் பயன்பாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ளது?**

**நினைவுகளை பாதுகாத்தல்: ஒன்று திரட்டல் முயற்சியினூடாக வரலாற்று பதிவுக்கான தகவல்களை பல்வேறுபட்ட நிறுவனங்களுக்கிடையில் பாதுகாத்தலும், அவற்றை எல்லோருக்கும் பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் ஒரு முறைமையை ஒழுங்கமைத்தலும்.**

மனித உரிமை துஸ்பிரயோகங்கள் வெளியுலகிற்கு தெரிய வந்தவுடன் எல்லோராலும் அடிக்கடி கேட்கப்படும் ஒரு வாக்குறுதி "இனியும் இல்லை" என்பதாகும். ஆனால் துஸ்பிரயோகம் தொடர்பான ஞாபகங்கள், பாதிப்புக்குள்ளானவர்கள் மற்றும் துஸ்பிரயோகங்களுக்கெதிராக போராடியவர்கள் உயிருடன் இருக்கும் வரை மட்டுமே இந்த வாக்குறுதிகள் காப்பாற்றப்படும். துர்திஸ்டவசமாக பயனுள்ள தகவல்கள் எண்ணற்ற மனித உரிமைகள் ஸ்தாபனங்களில் கோப்புகளாக களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளதுடன் அவை வெளியுலகிற்கு அறியப்படாதவொன்றாக உள்ளது. அத்துடன் எனிவரும் காலங்களில் இந்த வரலாறுகள் மீளவும் ஏற்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்காக இவ் ஆவணங்களை பயன்படுத்த கூடியவர்களுக்கு அவை பெறமுடியாதவொன்றாக உள்ளது. Memoria Abiertaவானது அஜென்ரினாவிலுள்ள எட்டு மனித உரிமைகள் ஸ்தாபனங்களுடன் கூட்டுறவை ஏற்படுத்தியுள்ளதுடன் அவைகள் ஒன்றினைந்து திறந்த ஒரு தரவுத்தளத்தை எல்லோரும் அனுகக்கூடியவாறு உருவாக்கியுள்ளதுடன், இது கூட்டறவை தெளிவுபடுத்துவதுடன், நிரந்தரமான நினைவுளை பாதுகாக்கவும் உதவும் என அவர்கள் நம்புகின்றார்கள்.

Memoria Abierta என்ற நிறுவனம் அஜென்ரினாவில் இடம் பெற்ற அரச பயங்கரவாதத்தால் ஏற்பட்ட கொடூரங்களையும், பாதிக்கபட்டவர்கள் மற்றும் இதற்கெதிராக போராடியவர்களுக்களையும் அத்தாட்சிப்படுத்துவதற்காக ஒரு முறைமையை உருவாக்கி அதன் மூலம் வரலாற்று பதிவு ஆவணங்கள், புகைப்படங்கள் மற்றும் நேர்காணல்களையும் எல்லோரும் பெற்றுக்கொள்ள கூடியவாறான ஏற்பாட்டை செய்துள்ளது. இதன் மூலம் இணைய வசதியுள்ள யாரும் இணைய இணைப்பிலுள்ள கோப்புக்களுக்கான பட்டியலாக்கத்தை தேடிக்கொள்ள முடியும். இதன் உண்மையான ஆவணங்கள் அங்கத்துவ நிறுவனங்களின் அலுவலகங்களிலோ அல்லது Memoria Abierta அலுவலகத்திலோ காணப்படும். இந்த தரவுத்தளமானது எல்லா தகவல்களுக்கான தனிப்பட்ட சுட்டிகளை வழங்கியுள்ளமை எந்த ஒரு பயன்பாட்டாளருக்கு தேடுதலை இலகுபடுத்துகின்றது. அத்துடன் மூல ஆவணங்கள், புகைப்படங்கள், மற்றும் விடியோக்களின் இருப்பிடத்தை தெரிவிப்பதனால் ஆர்வமுள்ள ஆராய்ச்சியாளர்கள் அது வைத்திருக்கும் நிறுவனங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவை பற்றிய விபரங்களை பெறமுடியும். இத்திட்டமானது சிறப்பான ஒரு மென்பொருளை உருவாக்கியுள்ளதுடன் ஒரு திறந்த சாதன வடிவில் அதை அபிவிருத்தி செய்வதன் காரணமாக எல்லோரும் பயன்படுத்தக் கூடியவாறு இருப்பதுடன் மற்றையை நிறுவனங்களும் இதை ஒத்ததான தரவுத்தளத்தை உருவாக்க உதவுகின்றது.

The partimonia Documental (விபரண மரபுரிமை நிகழ்ச்சி திட்டம்)வரலாற்றுப் பதிவுகளானது ஐந்து பகுதிகளை கொண்டுள்ளது. அவையாவன: 1)விபரண மரபுரிமை திட்டமானது தனக்குள் அரச பயங்கரவாதம் தொடர்பான ஏறத்தாள 22,000 ஆவணங்களை உள்ளடக்கியுள்ளது. 2) நிலவரைபட விளக்க ஞாபக திட்டத்தில் ஸ்தல விபரங்கள், அரசியல் பயங்கரவாதம் தொடர்பான வரலாற்று இடங்கள் அவை தொடர்பான தேசவரைபடங்கள், ஆவணங்கள் மற்றும் வாய்மொழி அத்தாட்சிகள் போன்றனவும் அத்துடன் நாடு முழுவதும் சாதாரண இடங்களில் மறைத்து வைக்கப்பட்ட 340 ற்கும் அதிகமான சித்திரவதை முகாம்கள் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. 3)புகைப்படங்களுக்கான வரலாற்றுப்பதிவு திட்டமானது மனித உரிமைகள் சார்பான நிறுவனங்களது டிஜிட்டல் படங்களையும், ஊடகங்களினதும் தனிப்பட்டவர்களின் சேகரிப்புகளையும, உள்ளடக்கியுள்ளது. 4)வாய்மொழி மூலமான வரலாற்று பதிவு திட்டமானது அரச பயங்கரவாதத்தினால் எந்த ஒரு வகையிலும் பாதிப்படைந்த பொது மக்களது அனுபவங்களை 320 ற்கும் அதிகமான நேர்காணல் வடிவில் சுருக்கி வைத்துள்ளது. மற்றும் Memoria Abierta நிறுவனத்தின் சொந்த ஆவணங்கள் போன்றனவாகும்.

Memoria Abierta ஆனாது Abuelas de Plaza Mayo, Asamblea Permanente por los Derechos Humanos, Asociacion Bunena Memoria, Centro de Estudios Legales Sociales, Familiares de Desparecidos y Deteni dos por Razones Politicas, Foundacion Memoria Historica y Social Argentina, Madres de Plaza de Mayo-Linea Fundadora, and Servicio Paz Justicia போன்ற நிறுவனங்களை உள்ளடக்கியுள்ளதுடன் இந்த கூட்டுறவானது திட்டங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் ஆதரித்தல் என்பன ஊடாக சமூகத்தை ஊக்குவித்து, தனிப்பட்ட ஒவ்வொருவரும் இராணுவ சர்வாதிகார ஆட்சிக்காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களை ஞாபகத்தில் வைத்து கொள்வதற்குமாக உருவாக்கப்பட்டது. Memoria Abierta நிறுனவமானது தனது ஆதரவாளர்களின் திட்டத்தின் ஞாபங்களுக்கான இடத்தை உருவாக்குவதற்காக கலந்துரையாடல்களை மேம்படுத்துவதுடன், பொதுமக்கள் பிரதிபலிப்புக்கான இடவசதியை ஏற்படுத்தியும் கொடுக்கின்றனர். இந்த வரலாற்று பதிவுகள் எனிவரும் காலத்தில் முக்கிய சேர்க்கைகளுடன் ஞாபகங்களின் நூதன சாலையாக மாறும்.

பல்வேறு நிறுவனங்களது வரலாற்று பதிவுகளின் ஒன்றுதிரட்டல் செயற்பாட்டு யுக்தியானது எந்த ஒரு நாட்டிலும் எங்கு ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்கள் மனித உரிமைகள் சம்பந்தமான ஆவணங்களை சேகரிக்கின்றார்களோ அவர்களால் இதை பயன்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. இது "நினைவுகள்" திட்டத்தின் ஒரு பகுதியாக அமைவதுடன் மேலும் நடைபெற்றுவரும் துஸ்பிரயோகங்கள் தொடர்பாக கண்டுபிடித்து வருவதுடன் அத்தகவல்களை எல்லோரும் பெற்றுக்கொள்ளக் கூடியவகையில் இயங்கும் பல்வேறுபட்ட மனித உரிமைகள் நிறுவனங்கள் உள்ள நாடுகளில் இந்த யுக்தி பயனுள்ளதொன்றாகும்.

**மானிடவியல் இராசாயன பகுப்பாய்வு: இராசாயன பகுப்பாய்வு முறைகளை பயன்படுத்தி பாதிக்கப்பட்டவரின் உடலை அடையாளம் காணலும் மரணத்திற்கான காரணங்களை கண்டறிதலும்.**

சிலவேளைகளில் சட்ட வழக்குகளின் போது காகித ஆவணங்களின் சாட்சிகள் போதமலோ அல்லது இலகுவில் பெறமுடியாதவொன்றாகவோ இருக்கும் பட்சத்தில் இராசாயன பகுப்பாய்வு செயற்பாட்டின் ஊடாக சட்டநடவடிக்கைக்கான பதிவுகளை உருவாக்க முடிவதுடன் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தவர்கள் ஒரு இறுதியான முடிவுக்கு வருவதற்கு வேண்டிய தகவல்களையும் வழங்குகின்றது. இராசாயன பகுப்பாய்வு ஆனாது உணர்வுகளுக்கு புறம்பான வகையிலே துஸ்பிரயோகங்களுக்கான பதிவுகளை செய்கின்றது. எனெனில் இவற்றின் ஆதாரங்கள் விஞ்ஞான ரீதியிலானது ஆகும். அத்துடன் இவை அத்தாட்சிகள் மற்றும் மனித உரிமைகளின் மீறல்கள் பற்றிய எழுதப்பட்ட ஆவணங்களை விட அதிக சக்தி வாய்ந்தவொன்றாக இருக்கின்றது. புதைக்கப்பட்ட சடலங்களை வெளியே எடுப்பதன் ஊடாக குடும்பத்தவர்கள் தமது மரபு முறையிலான சமயச்சடங்குகளை நிறைவேற்றவும், துயரங்களை வெளிப்படுத்தவும், அத்துடன் துயரை ஏற்படுத்தக் கூடிய சம்பவமென்றாலும் தமது வாழ்க்கையை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவும் அனுமதிக்கின்றது.

கடந்த இரு தசாப்பதங்களுக்கு மேலாக Equipo Argentino de Antropologia Forense(அஜென்ரியாவின் இராசாயன பகுப்பாய்வு மானிடவியல் குழு அல்லது EAAF) ஆனாது அரச வன்முறைகளால் பாதிக்கப்பட்டவர்களின் சடலங்களை அடையாளம் கண்டு பிடித்து வந்துள்ளது. அஜென்ரினாவின் இராணுவ சர்வதிகார ஆட்சிக்காலங்களில் (1976-1983) 10,000 தொடக்கம் 30,000 வரையிலான மக்கள் கொல்லப்பட்டனர் அல்லது அரசினால் “காணமல் போனவர்கள்” ஆக ஆக்கப்பட்டனர். EAAF இன் இலக்கானது மூன்று மட்டங்களை கொண்டுள்ளது அவையாவன பலியானவர்களின் சடலங்களை அவருடைய குடும்பங்களுக்கு மீளளிப்பதன் மூலம் மனக்காயங்களை ஆற்றும் செயற்பாட்டிற்கு உதவுதல், அடுத்து அரச வன்முறைகளின் குற்றவாளிகளுக்கு எதிரான சட்ட வழக்குகளுக்குத் தேவையான ஆதாரங்களை வழங்குதல் அத்துடன் வன்முறைகளின் போது துயரங்களை அனுபவித்த நாடுகள் மற்றும் கடந்த காலங்கள் பற்றிய விசாரணை செய்ய வேண்டிய தேவையுள்ள நாடுகளைச் சேர்ந்த இராயான பகுப்பாய்வு குழுவினருக்கு பயிற்சியும் ஆதரவும் வழங்குதல் போன்றனவாகும்.

EAAF இன் நிரந்தரமான விசாரணை குழுவினர் காணமல் போனவர்கள் பற்றிய தகவல்கள் தொடர்பாக ஆராய்கின்றது. இந்த குழுவானது பொதுவாக தமது வழக்குகளின் ஆரம்ப கட்ட விசாரணையாக பலியானவர் எங்கு புதைக்கப்பட்டுள்ளார் என்பதை கண்டறிவதை நோக்கமாக கொண்டு உறவினர்கள், நண்பர்கள், மற்றும் எனைய முன்னாள் கைதிகள், சிறைச்சாலையில் கூட இருந்தவர்கள், மற்றும்அரசியல் செயற்பாட்டாளர்கள் போன்றவர்களுடன் கலந்துரையாடுவதன் மூலம் பலியானவரின் பௌதிக குணாதியங்கள், மற்றும் சம்பவம் இடம்பெற்ற காலம், மரணம் இடம் பெற்ற இடம் போன்றவை தொடர்பான தகவல்களை பெறுகின்றார்கள். அத்துடன் EAAF ஆனாது பொலிஸ் மற்றும் அரச பணிமனைப் பதிவுகளையும் ஆராய்கின்றது. எனெனில் இப்பதிவுகள் பாதிக்கப்பட்டவர் தொடர்பான பௌதிக விபரணம், கைவிரல் அடையாளம் மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கை போன்றவற்றை கொண்டிருப்பதாலாகும். எனினும் இவற்றை பொலிசாரின் வரலாற்றுப் பதிவெடுகளிலிருந்து பெற்றுக்கொள்வதற்கு நீதி மன்ற உத்தரவு கட்டாயம் பெறவேண்டிய தேவை ஏற்படும். இச் செயற்பாடானது தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படுவதற்கு குழுவினரால் எழுதப்பட்ட அல்லது வாய்மொழியான பத்து ஆவணங்கள் வழங்கப்படதல் வேண்டும்.

புதைக்கப்பட்ட சரியான இடம் கண்டறியப்பட்டவுடன் குழுவினர் பலியானவரின் குடும்பத்தவர்களை சந்திக்கின்றார்கள். மேலும் குடும்பத்தவர்களின் சம்மதமின்றி EAAF ஆனாது விசாரணைகளை தொடர்ந்து நடாத்திச் செல்ல முடியாது.

குடும்பத்தவர்களின் சம்மதம் கிடைத்தவுடன், சட்ட அதிகாரியிடமிருந்தோ அல்லது மனுதாரருக்கான சட்டத்தரணியிடமிருந்தோ அதிகார கையெழுத்தை பெற்றுக்கொண்டு புதைக்கப்பட்ட சடலத்தை தோண்டி எடுக்க ஆரம்பிக்கின்றது. குடும்பத்தவர்களும் சடலங்களை தோண்டி எடுக்கும் சிலபடிமுறை நடவடிக்கைகளின் போது பங்குகொள்ள அழைக்கப்படுகின்றனர். இக்குழுவானது தரமான புதைபொருள் தொழிநுட்பத்தை பயன்படுத்தி பலியானவரின் சடலத்தை தோண்டி எடுக்கின்றது. பின்னர் இப்பணியானது ஆய்வு கூடத்திலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றது. EAAF இன் விஞ்ஞானிகள் பல்வேறு முயற்சகளின் மூலம் சடலத்தையும் ஒன்றுதிரட்டிய தகவல்களையும் இணைத்துப்பார்த்து இறப்பிற்கான காரணத்தையும் வகைமுறையும் நிறுவுகின்றது.

இத்தகைய செயற்பாடுகளின் ஊடாக EAAF யானது பலியானவர்களின் 100 சடலங்களை அடையாளம் கண்டுள்ளதுடன் பலியானவர்கள் தொடர்பாக குடும்பத்தவர்கள் ஒரு சரியான முடிவை எடுக்க கூடியதாக இருந்ததுடன், தேசிய மற்றும் சர்வதேச தீர்ப்பு மன்றங்கள், உண்மை ஆணைக்குழு மற்றும் உள்ளூர் நீதி மன்றங்களுக்கு ஆதாரங்களை வழங்கி பங்களிப்புச் செய்துள்ளது. EAAF ஆனாது தன்னுடைய இந்த தொழிநுட்பத்தை உலகத்திலுள்ள ஏனைய குழுக்களுக்கும் பயிற்றுவிக்கின்றது. EAAF இன் அங்கத்தவர்கள் இது அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் கூட்டுறவை அதிகரிப்பதற்கான ஒரு முக்கியமான ஒரு செயற்பாடு என விவரிக்கின்றார்கள்.

EAAF யானது இறப்பு தொடர்பாக விசாரணை செய்கின்ற பொழுது குடும்பத்தவர்களுக்கும் சமூகத்திற்குமான செயல் அதிகாரத்தை கொடுக்கின்றது. அரச வன்முறைகளால் ஒதுக்கிவைக்கப்பட்டவர்களும், முரண்பாடுகள் தீர்க்கப்படும் பொழுது விலக்கி வைக்கப்பட்ட சமூகத்தவர்களுக்கு இது அவசியமானதாகும். EAAF ஆனாது இவற்றை அணுகுவதற்கு உண்மையான உழைப்பும், அரசியல் சுதந்திரமும் அவசியமென கருதுகின்றது. ஆனால் குழுவினர் பெற்றுக்கொண்ட அனுபவத்தின் படி இந்த யுக்தியானது கிட்டத்தட்ட 30 ற்கும் அதிமான நாடுகளுக்கு மாற்றம் செய்யப்படும் பொழுது அரசின் முழுமையான ஆதரவு இதற்கு அவசியமில்லை என்பதை தெளிவுபடுத்துகின்றது.

கௌத்தமாலாவிலுள்ள மற்றைய ஒரு குழுவானது சடலங்களை தோண்டி எடுக்கும் காலங்களில் சமூகத்தடன் ஒன்றுபட்டு கடமையாற்றுகிறது. எனினும் அது சமூக உளவியல் சேவையிலேயே சிறப்புக் கவனத்தை செலுத்துகின்றது. The Equipo de Estudios Comunitarios Accion Psycosocial (சமூக ஆராய்ச்சி மற்றும் சமூக உளவியல் செயற்பாட்டு குழு அல்லது ECAP) ஆனாது Fundacion de Antropologia Forense de Guatemala வுடன் சேர்ந்து கடமையாற்றுவதன் ஊடாக சமுகத்திற்கும் குடும்பத்தவர்களுக்கும் சடலங்களை தோண்டி எடுப்பதற்கும் முன்னதான காலப்பகுதியிலும், எடுக்கப்படும் காலங்களிலும், சடலம் தோண்டி எடுக்கப்பட்ட பின்னரும் தமது ஆதரவை வழங்குகின்றது.

ECAP ஆனாது குடும்பத்தவர்கள் தமது இழப்பு தொடர்பாக உணர்வுகளை பாதுகாப்பாக பகிரந்து கொள்ளவும், அவர்களால் எங்கு அவற்றினை பிரதிபலிக்க முடியும் என்பதையும், பயமின்றி அவர்கள் கதையை வெளிப்படுத்தவும், வன்முறையின் தொடர்ச்சியை எப்படி எதிர்கொள்வது பற்றி கற்றுக்கொள்ளவும், நடைமுறை சூழ்நிலைகளை புரிந்து கொள்ளவும் அதன் மூலம் எதிர்காலம் தொடர்பாக திட்டமிடுவதற்காகவும் ஆதரவாளர்கள் குழுக்களை ஒழுங்கமைக்கின்றது. அத்துடன் குடும்பத்தவர்கள் அவர்களது உறவினரை சட்டரீயாகவும் தமது மரபு முறைப்படி புதைப்பதற்கு தேவையான உதவிகளை பெற்றுக்கொள்கின்றார்கள். அத்துடன் இறந்தவருக்கும் வாழுகின்றவர்களுக்குமிடையிலான உறவின் ஞாபகங்களை பாதுகாக்கவும் உதவுகின்றார்கள்.

சடலங்களை தோண்டி எடுப்பதற்கு முன்னர் சில உளவியல் ஆலோசனைகள் வழங்கப்படுகின்றது. அதற்கு பின்னர் உளவியல் ஆலோசகர்கள் குடும்பத்தவர்களுடன் சேர்ந்து சடலம் தோண்டியெடுக்கப்பட வேண்டிய இடத்திற்கு செல்லுவதன் ஊடாக உறவினரின் இழப்பின் உண்மையை எதிர்கொள்வதற்கு அங்கத்தவர்கள் என்ற முறையில் ஆதரவாக இருக்கின்றார்கள். அத்துடன் குடும்பத்தவர்களுடன் இணைந்து கடமையாற்றுவதன் ஊடாக நடந்த சம்பவத்தை அவர்கள் புரிந்து கொள்ள உதவியாக இருக்கின்றார்கள். கௌதமலாவிலுள்ள அநேக கிராமப்பகுதிகள் பொதுவாக பரந்துபட்ட அரசியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்ட சமூகங்களாக உள்ளது. உளவியல் ஆலோசகர்கள் குழுக்களை உருவாக்குவதன் மூலம் வன்முறைகளின் தாக்கங்களை கண்டறிவதடன், எவ்வாறு சமூகத்தை முற்றாக சுகப்படுத்த முடியும் என்கிற கலந்துரையாடல்களை மேம்படுத்துகின்றார்கள். மேலும் சுகப்படுத்தலுக்கு பங்களிப்பதற்காக ECAP சமூகங்களுக்கு ஞாபகர்த்தங்களை சின்னங்களை உருவாக்கியும், கடந்தகால மனவதிர்ச்சியினை ஏனைய வழிகளின் மூலம் அடையாளம் கண்டு ஆதரவும் வழங்குகின்றார்கள். இந்த திட்டங்கள் எல்லாம் சமூகத்தால் பகிரப்பட்ட நிகழ்கால, எதிர்கால வரலாறுகளின் மேல் தீவீர விழிப்புணர்வையும், அவர்களுடைய உரிமைகளை மீள பெற்றுக்கொள்வதற்காக உணர்வுகளுடன் கூடிய சாவல்களையும் உள்ளடக்கி மேம்படுத்துகின்றது.

*குடும்பத்தவர்களின் அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்கிற தகவலை கொண்டு செல்லும் தருணம் மிகவும் கடினமானதொன்றாகும். இது அவர்களுடைய அன்புக்கு பாத்திரமானவரின் தேடுகையை ஒரு முடிவுக்கு கொண்டு வருகின்றதுதெனினும் இந்த உண்மையை அவர்களால் எப்பொழுதுமே தாங்கிக்கொள்ள முடிவதில்லை. நாங்கள் குடும்பத்தவர்களுடன் ஒரு உறவுமுறையை ஏற்படுத்தி அவர்கள் இந்த செய்தியை கேட்கும் நிலைக்கு தயாராகும் வரை அவர்களுடன் உரையாடுகிறோம். அத்துடன் அவர்கள் என்னத்தை பார்க்கப் போகின்றார்கள் என்பதை தெளிவுபடுத்தி, அவர்கள் என்னத்தை எதிர்பார்க்கலாம் என்பதையும், அத்துடன் அவர்களை கேள்விகள் கேட்பதற்கு ஊக்குவிப்பதுடன் அல்லது இந்த செயற்பாட்டில் பங்கு பெற வைக்கிறோம்.*

**-லூயிஸ் பொன்டோபிரைடர்**
**EAAF தலைவர், அஜென்ரினா.**

**இரசாயன பகுப்பாய்வு முறைமை அல்லது ஏனைய தொழிநுட்பங்களை பயன்படுத்தி எவ்வாறு மனித உரிமை மீறல்களை உங்களால் ஆவணப்படுத்த இயலும்?**

**யுத்தத்தின் போது ஏற்பட்ட குற்றசெயல்களுக்கான சர்வதேச நீதி வழங்கல்: யுத்த காலங்களில் பாலியல் ரீதியிலான குற்றங்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சர்வதேச தீர்ப்பு மன்றங்களின் ஊடாக விழிப்புணர்வை ஏற்படுத்தலும், நட்டஈட்டை பெற்றுக் கொடுத்தலும்**

ஆசியாவின் வலையமைப்பானது தசாப்தங்களுக்கு முன் இடம் பெற்ற துஸ்பிரயோகங்கள் தொடர்பான நினைவுகளை பாதுகாக்கவும், நட்டஈட்டை கோரவும் சர்வதேச தீர்ப்புமன்றத்தை ஒழுங்கமைத்தது.

யப்பானின் பெண்களுக்கு எதிரான வன்முறைகளின் யுத்த கால வலையமைப்பு (VAWW-NET) நிறுவனமானது யுத்த காலங்களில் பாலியல் ரீதியான குற்றச் செயல்களால் பாதிப்படைந்தவர்களுக்காக தீர்ப்பு மன்றங்களை உருவாக்கி அங்கீகரிப்பதனூடாக நியாயத்தை தேடிக்கொடுக்கின்றது. யாப்பானிய அரசாங்கம் “இன்ப நிலையங்கள்”என்ற வலையமைப்பு மூலம் பாலியல் ரீதியான அடிமைத்தன முறைமையை உருவாக்கியிருந்தது. மேலும் விபாசார விடுதிகள் இராணுவத்தினாரால் கட்டுப்படுத்தப்பட்டு வந்தது. இந்த அமைப்பிற்குள் மதிப்பிட்டளவில் 400,000 பெண்கள் மற்றும் சிறுமிகள் பலவந்தமாக கொண்டு செல்லப்பட்டனர். திரைமறைவில் இடம்பெற்ற இந்த அட்டுழியங்கள் கிட்டத்தட்ட 50 வருடங்களாக யாராலும் அறியப்படாதவொன்றாக இருந்தது.

1998 இல் VAWW-NETஆனாது சர்வதேச பெண்களுக்கான போர்க் கால குற்றச் செயல்களுக்கான தீர்ப்பு மன்றத்தை ஸ்தாபிப்பதற்கு திட்டமிட்டது. பாதிக்கப்பட்டவர்களின் தாய் நாடுகளிலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும், யப்பான் மற்றும் சர்வதேச சமூகங்களையும் உள்ளடக்கி சர்வதேச ஒழுங்கமைப்புச் சபையானது (IOC) உருவாக்கப்பட்டது. 2000 ஆம் டிசம்பர் மாதம் டொக்கியோவில் IOC யானது சாஸனத்தை எற்படுத்தியனூடாக விதிகளையும் ஒழுங்குகளையும் தீர்ப்பு மன்றத்திற்காக உருவாக்கி சட்ட வழக்குகளை தயாரித்தது. இத்தீர்ப்பு மன்றத்தில் பத்து நாடுகளைச் சேர்ந்த வழக்கு தொடுக்கும் குழுவினர் குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர்.அதில் தென்கொரியா மற்றும் வடகொரியாவின் இணைந்து வைத்த குற்றச்சாட்டுகளும் உட்படுத்தப்பட்டிருந்தது. புவியல்ரீதியில் சரிசமமான நிலையுடையதும் மற்றும் பல்வேறு விதமான சட்ட கருத்துக்களைக் கொண்ட நான்கு நீதிபதிகளின் குழுவானது சட்ட நடவடிக்கைகளுக்கு தலைமை தாங்கினர். தீர்ப்பு மன்றமானது தப்பி வந்தவர்களின் அதாவது மங்கல வழக்கில் “மகிழ்வூட்டும் பெண்கள்” என அழைக்கப்படுவர்களதும், அதேவேளை முன்னாள் இராணுவ வீரர்கள் இருவரிடமும் இருந்தும் அத்தாட்சிகளை நேரடியாகவும் ஒளி ஒலிப்பதிவு நாடாக்களின் மூலம் பெற்றுக்கொண்டனர்.நிபுணர் குழுக்களும் யப்பானிய இராணுவத்தின் கட்டமைப்பு பற்றி பரீசிலனை செய்தது. நீதிபதிகள் குழுவானது அலுவலக ஆவணங்கள், பதிவுக்குறிப்புகள், நாட்குறிப்பேடுகள், மற்றும் சட்டச் சுருக்கங்கள் போன்றவற்றை மதிப்பாய்வு செய்தனர். தீர்ப்புமன்றக் கூட்டத்தின் வழக்குநடவடிக்கைகளின் போது 1,000 ற்கும் அதிகமான பார்வையாளர்கள் மற்றும் சர்வதேச ஊடக அங்கத்தவர்களினாலும் நிரம்பி வழிந்தது. மூன்று நாட்களின் பின்னர் தீர்ப்பு மன்றமானது உண்மையின் ஆரம்ப நிலையையும் மற்றும் சட்டம் போன்றவற்றையும் கண்டறிந்து வெளியீட்டதுடன், அவற்றினை ஈடுசெய்வதற்காக நட்டஈடு வழங்குவதற்கான ஆலோசனைகளையும் வழங்கியது.

தீர்ப்பு மன்றமானது யுத்தகாலங்களில் ஏற்படுத்தப்பட்ட பாலியல்ரீதியான குற்றச் செயல்கள் தொடர்பான வரலாற்றுப் பதிவுகளை உருவாக்கியுள்ளதுடன் உலகலாளவிய ரீதியில் விழிப்புணர்வையும் அதிகரித்துள்ளது.1995 இல் யப்பானிய அரசும், யாப்பானிய பிரஜைகளும் சேர்ந்து ஆசிய பெண்களுக்கான நிதியம் (AWF) ஒன்றை உருவாக்கி அதன் மூலம் தமது மன்னிப்பையும், ஆழ்ந்த கவலையையும் தெரிவித்ததுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடுகளையும் வழங்குகியது. பாதிக்கப்பட்டவர்களுக்காக 483 மில்லியன் யென் (கிட்டத்தட்ட அமெரிக்க டொலர்களில் 4 மில்லியன் நிதியானது சேரிக்கப்பட்டு தப்பிப்பிழைத்தவர்களுக்கு வழங்கப்பட்டது.

பாதிக்கப்பட்டவர்கள், ஆதரவாளர்கள் சிலரது பார்வையில் யப்பானிய அரசாங்கம் நேரடியாக நட்டஈடுகளை செலுத்துவதை தவிர்ப்பதற்காக AWF வை ஒரு கருவியாக பயன்படுத்துகின்றது. பாதிக்கப்பட்ட சிலர் இந்த தனியார் நிதியத்திலிருந்து நட்டஈட்டை பெற்றுக்கொள்ள மறுத்துவிட்டனர்.

யப்பானில் இடம்பெற்று வந்ததும் சர்வதேச சமூகம் முகம் கொடுப்பதற்கே கடினமானதுமான இந்த சட்டத்திற்குப் புறம்பான கட்டுப்பாட்டு நிலைமைகளின் தசாப்பத கால மௌனத்தினை தீர்ப்பு மன்றமானது முடிவுக்கு கொண்டு வந்துள்ளது. "*மகிழ்வூட்டும் பெண்களது*" வேதனைகளை உலகத்தின் கவனத்திற்கு கொண்டு வந்ததது மட்டுமின்றி பாதிக்கப்பட்டவர்களுக்கான தனியார் நிதிகளை உடனடியாக செயற்படுத்தியது. அப்படி இல்லையென்றாலும் யப்பானிய அரசாங்கம் தானாகவே நட்டஈட்டை நேரடியாக வழங்குவதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ள வைத்ததில் வெற்றியடைந்துள்ளது.

இந்த மாதிரியான தீர்ப்பு மன்றங்கள் தமக்கே உரியதான முறைகளினூடாக இதை ஒத்ததான எனைய பிரச்சனைகளுக்கான மௌனத்தை கலைப்பதற்கு பயன்படுத்த முடியும். அதாவது இதன் அளவு சிறியதெனினும் சர்வதேச முயற்சிகளுக்கு ஊடாக பலத்தை பிரயோகிக்கமுடியும் உதாரணமாக பாதிக்கப்பட்டவர்களுக்காக நிதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் அல்லது சர்வதேச இயக்கங்களுடாக பாலமொன்றை கட்டியெழுப்புதல்.

இந்த மாதிரியான பரீட்சார்த்த சட்டம்சார் நடவடிக்கைகளை நாட்டிற்கு வெளியில் துஸ்பிரயோகங்கள் இடம் பெறும் பகுதிகளில் பயன்படுத்த முடியும். ஐக்கிய அமெரிக்காவில் மின்னசொட்டவின் மனித உரிமைகள் ஆதரவாளர்கள் கமரூச்சினருக்காக ஒழுங்கமைத்த பரீட்சார்த்த தீர்ப்பு மன்றத்தால் உள்ளூர் கம்போடியா சமூகத்தின் அங்கத்தவர்கள் கம்போடியா நாட்டில் இடம்பெற்ற இன அழிப்புக்களுக்காக பரீசிலிக்கப்பட்டார்கள். இது கம்போடியா இனத்தவர்களுக்கு அவர்களுடைய கதைகளை சொல்ல ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியது. அத்துடன் மின்னசொட்டவின் உள்ளூர் வாசிகளுக்கு தமது சமூகத்திற்கு வருகின்ற புதிய மக்கள் பற்றி அறிந்து கொள்ளவும் மற்றும் அவர்கள் எப்படி ஆபத்துகளிலிருந்து தப்பிப் பிழைத்தார்கள் என்றும் அறியவும் முடிந்தது. இந்த திட்டத்தின் பகுதியாக ஒலி ஒளிநாடா வாய்வழி வரலாறுகள் உருவாக்கப்பட்டதுடன் அது நிரந்தரமான ஒரு ஆவண சேர்கையாக மின்னசொட்ட வரலாற்று நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

**பல்வேறுபட்ட நாடுகளின் ஆதரவுகளை ஒழுங்கமைத்து எப்படி உங்களது போராட்டங்களை வெளிப்படுத்த முடியும்?**

**இராணுவத்தில் பணியாற்றிய சிறுவர்கள் மீண்டும் தமது வீடுகளுக்கு திரும்பி வருதலை ஆதரித்தல்: பாரம்பரிய மற்றும் மேலைத்தேய சிகிச்சை முறைகளை ஒன்று சேர்த்துப்பதன் மூலம் இராணுவத்தில் பணியாற்றிய சிறுவர்களை அவர்களுடைய முன்னைய சமூதாய அமைப்புடன் திரும்ப ஒன்றிணைத்தல்.**

இராணுவத்தில் பணியாற்றிய சிறுவர்கள் பாதிப்புக்குள்ளானவர்களாக இருப்பதுடன் அவர்களே துஸ்பிரரோயகங்களை மேற்கொள்பவர்களாகவும் இருக்கின்றார்கள். இச்சிறுவர்களில் சிலர் தம்முடைய சமூகத்திற்கெதிராகவோ அல்லது தமது குடும்பத்திற்கு எதிராகவோ அழுத்தம் கொடுக்கப்படுவதன் மூலம் கொடூரமான குற்றங்களை புரிவதற்கு தூண்டப்படுகின்றார்கள். இது அவர்களுக்கு பயங்கரமான ஒரு உளவியல் ரீதியான பாதிப்பை ஏற்படுத்துவதுடன், அவர்கள் மீளவும் தமது குடும்பத்தினருடன் அல்லது சமூகத்தினருடன் மீண்டும் சேரந்து வாழும் நிலையை பாரியளவில் பாதிக்கின்ற ஒரு பிரச்சனையாக இருக்கின்றது. மோசாம்பிக்கிலுள்ள ஒரு குழு யுக்தியொன்றை பயன்படுத்தியது. அவ் யுக்திக்கு பாரியளவிலான ஒத்துழைப்பு தேவைப்பட்டதுடன், இராணுவத்தில் பணியாற்றிய சிறுவர்களுக்கிடையில் நம்பிக்கையை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தையும் கொண்டிருந்தது. சமுதாயத்தவர்கள், பாரம்பரிய தலைவர்கள் மற்றும் சிகிச்சை வழங்குபவர்கள் எல்லோரையும் உள்ளடக்கியதான சிகிச்சை வழங்கல் செயற்பாட்டின் ஆதரவிலேயே சிறுவர்களை அவர்களுடைய சமூகத்துடன் திரும்ப இணைக்க முடிவதுடன், சமூக வாழ்க்கைக்குள் அவர்களை திரும்ப கொண்டு வரவும் முடிக்கின்றது.

மோசாம்பிக்கிலுள்ள Recontruindo a Esperanca (நம்பிக்கையை மீள் கட்டியமைத்தல்) என்ற நிறுவனமானது ஆனாது பராம்பரிய சிகிச்சை மற்றும் மேலைத்தேய உளவியல் சிகிச்சை முறைகளை ஒன்று சேர்த்து முன்னாள் இராணுவ சிறார்களை மீள் இணைக்கின்றது. மோசம்பிக்கில் அழிவை ஏற்படுத்திய சிவில் யுத்தத்தின் போது ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுவர்கள் இரு தரப்புக்களாலும் இராணுவ படையினராக பயன்படுத்தப்பட்டனர். நம்பிக்கையை மீள்கட்டியமைத்தல் நிறுவனத்தின உளவியாளளரான லூாக்கிறேசியா வம்பா, கருத்து தெரிவிக்கையில். “இராணுவத்தில் பணியாற்றிய சிறுவர்கள் கற்பனை செய்து பார்க்க முடியாத பயங்கரமான சூழ்நிலைமைகளில் வாழ்ந்ததுடன், அவர்களுடைய சமூகத்தில் பின்பற்றப்பட்டு வந்த நம்பிக்கைகள் மற்றும் கலாச்சார பார்வைகளின் ஊடாக பெற்ற அனுபவங்கள் வாயிலாகவே செயற்பட்டுள்ளார்கள். தனிப்பட்டவர்கள் புனர்வாழ்வு மற்றும் சமூகத்துடன் மீள்ஒன்றிணைத்தல் என்கிற இரண்டையும் வெற்றி கொள்வதெனில் அவர்களுடைய சிகிச்சைகான செயன்முறைகளும் இந்த மாதிரியான கலாசார மற்றும் நம்பிக்கைகள் என்கிற பார்வைகள் ஊடாகவே செயற்படுத்தப்படுதல் அவசியமாகும். இந்நிறுவனமானது பாராம்பரிய சிகிச்சை முறைகளையோ அல்லது சிறப்புமிக்க மேலைத்தேய உளவியல் சிகிச்சை முறைகளையோ தனித் தனியாக வழங்குவதால் சிறுவர்களுக்கான அல்லது சமூகத்திற்கான பிரச்சனைகளின் தேவையை தீர்க்க போதுமானதல்ல என்பதை கண்டுகொண்டது.

நம்பிக்கையை மீள் கட்டியமைத்தல் நிறுவனமானது இராணுவத்தில் பணியாற்றி திரும்பி வந்த சிறுவர்களினால் சமூகம் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சனைகளை அடையாளம் கண்டுகொள்வதற்காகவும் சமூக வளங்களை அடையாளம் கண்டுகொள்வதற்காகவும், முதலில் ஒரு ஆராய்ச்சியை மேற்கொண்டது. இதன் மூலம் சமூதாயத்தின் அங்கத்தவர்கள் தேவைகள் ஏற்படும் பொழுது முதலில் பாராம்பரிய சிகிச்சை முறையை பின்பற்றுகின்றவர்களையே சந்திக்கின்றனர் என கண்டறியந்தது. நம்பிக்கையை மீள் கட்டியமைத்தல் நிறுவனத்தின் உளவியாளர்கள் சமூக தலைவர்களுடன் இணைந்து அவர்களின் ஆதரவுடன் பாராம்பரிய சிகிச்சை முறையை வழங்குபவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துகின்றனர்.

உளவியாளர்கள் அந்த சமூகத்தினருக்கிடையலான புரிந்துணர்வு மற்றும் மீள்இணைத்தல் அபிவிருத்திச் செயற்பாடுகளில் பாராம்பரிய சிசிச்சை முறைகளின் பங்கு என்னவென்பதையும், அத்துடன் குடும்பத்தவர்களை அணுகுவதன் ஊடாக சிறுவர்களுக்கு அவசியமானது என்னவென்பதை அவதானிக்கின்றார்கள். முதலில் குடும்பத்தவர்கள் வெளியாட்களை நம்பத் தயங்குவதுடன், மீளவும் தமது பிள்ளைகளை அவர்களிடமிருந்து பிரித்துகொண்டு சென்று விடுவார்கள் என கலவரமடைகின்றார்கள். அத்துடன் உளவியாளர்கள் உள்ளூர் தலைவர்களை சந்திப்பதன் ஊடாக மனஅதிர்ச்சி நோய்யினால் ஏற்படும் விளைவுகள் பற்றி விவரிப்பதுடன், இராணுவத்தில் பணியாற்றிவிட்டு திரும்பவந்த சிறுவர்களில் இந்த மாதிரியான பிரச்சனைகள் காணப்படுகின்றதா என்பதை வினவி அறிந்து கொள்வதுடன், அந்த மாதிரியான பிரச்சனைகள் இருந்தால் அவற்றிற்கு தம்மால் சிகிச்சை வழங்க முடியும் எனவும் தெரிவிக்கின்றார்கள். அந்த மாதிரியான பிரச்சனைகள் தொடர்கின்றன என தலைவர்களால் அறிவிக்கப்படும் பட்சத்தில் உளவியாளர்கள் பாராம்பரிய சிகிச்சை முறையை வழங்குபவர்களுடன் ஒன்று சேர்ந்து பணிபுரிய சிபாரிசு செய்யப்படுகின்றார்கள்.

உள்ளூர் தலைவர்கள் உளவியாளர்களுடன் சேர்ந்து வருகை தருவதுடாக பாராம்பரிய சிகிச்சை முறையை வழங்குபவர்களுடன் கூட்டுறவை ஏற்படுத்திக்கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கின்றது.உளவியாளர்களும், பாராம்பரிய சிசிச்சை முறையை வழங்குபவர்களும் அவர்களுடைய இந்த மாதிரியான அணுகு முறையானது தமக்கிடையில் ஒரு முழுமையை தருவதாக உணர்ந்துகொள்கின்றார்கள். நம்பிக்கையை மீள் கட்டியமைத்தல் நிறுவனமானது சமூகத்தினருக்கிடையில் ஒரு நம்பிக்கையை கட்டியெழுப்புவது அவசியம் என்கின்ற காரணத்தால் சமூகத்துடன் இணைந்து செயற்படுவதனூடாக அவசியமாக காணப்படுகின்ற முன்னுரிமைகளையும் மற்றும் தேவையான உதவிகளை பெற்றுக்கொள்வதையும் அடையாளம் கண்டுகொள்வதுடன் சமூக வளங்களையும் இணைக்கின்றது. உதாரணமாக வீடமைப்பு, கல்வி மற்றும் விவசாய கருவிகள்.

இந்த ஒன்றுக்கொன்று சார்பான அணுகுமுறையானது அதாவது பாராம்பரிய சிசிச்சை முறையை வழங்குபவர்களையும் உளவியாளர்களையும் ஒன்றாக இணைந்து கடமை செய்கின்ற தொடர்புமுறை சிகிச்சையால் சிறுவர்களை ஒருவருடன் ஒருவர் தொடர்பு படுத்தி கூடியவரையிலான சிறந்த ஒரு வெற்றியை பெற்றுக் கொள்ள முடிகின்றது.

இது பற்றி மேலும் அறிவதற்கு இவ்யுக்தி பற்றிய சிறுகையேடு எமது இணையத்தளமான www.newtactics.org யில் செயற்பாடுகளுக்கான கருவிகள் கீழ் தரப்பட்டுள்ளது.

பல்வேறு சிக்கலான பிரச்சனைகளை உடைய முன்னாள் இராணுவ சிறுவர்களை கொண்ட மொசாம்பி சமூதாயத்திற்கு இது ஒரு உயர்வான விடயமல்ல கவலைக்குரிய ஒன்றாகும். இந்த யுக்தியானது யுத்தத்தால் தப்பிப்பிழைத்தவர்களை மீள் இணைப்பதற்கு தொழிற்படட்டு வருகின்ற எனைய சமூகங்களுக்கும் பொறுத்தமானதொன்றாகும். சமூகத்திலே துஸ்பிரயோகத்தில் ஈடுபட்டவரும், துஸ்பிரயோகததால் பாதிக்கப்பட்டவரும் ஒன்றாகச் சேர்ந்து வாழ வேண்டிய அவசியம் ஏற்படுகின்ற ஒரு சமுதாயத்தின் தலைவர்களும், பாராம்பரிய சிகிச்சை முறையை வழங்குபவர்களும் மிக முக்கியமான பங்கை ஆற்றுகின்றனர். சிகிச்சையின் போது சமூகமானது துஸ்பிரயோகத்திற்கான குற்றவாளிகள் தீமையானவர்கள், அவர்களால் சமூகத்துடன் மீள் இணைந்து நல்ல முறையில் அல்லது அர்த்தம் தரும் வகையில் வாழ முடியாது என்கிற தீர்மானங்களிலிருந்து வெளிவருதல் அவசியமாகும்.
மேலும் வளங்கள் அரிதாக காணப்படுகின்ற பொழுது இந்த யுக்தியை நடைமுறைப்படுத்தல் என்பது தடையாகவே இருக்கும்.அதாவது குறிப்பாக சமூதாய அங்கத்தவர்கள் வளங்களை துஸ்பிரயோகத்திற்கு காரணமானவர்களுக்கு வழங்குவதிலும் பார்க்க பாதிக்கப்பட்டவருக்கு வழங்கி உதவலாம் என்று உணருகின்ற தருணத்தில் ஆகும்.

*நாங்கள் சமூதாயத்தின் முதல் பெண்மணியுடன் சேர்ந்து ஒவ்வொரு பாராம்பரிய சிகிச்சை முறையை கையாள்பவர்களையும் சந்தித்தோம்.முதல் பெண்மணியே சிசிச்சை வழங்குபவர்களின் வீடுகளுக்கு செல்லுவதற்கு ஒரு நூழைவாயிலாக இருந்தார். அவரே முதலில் உரையாடலில் ஈடுபடுபவராக இருந்ததுடன் எமது விருப்பத்தை அவர்களுடன் பகிர்ந்து கொண்டார் . "இவர்கள் வைத்தியர்கள்" என்று அவர் எம்மை அறிமுகம் செய்வதுடன், நாங்கள் உதவி செய்யவே இங்கு வந்துள்ளோம் என்பதையும் "இவர்களை நான் இப்பொழுது உங்களிடம் அழைத்து வந்ததன் நோக்கம் நான் நினைக்கிறேன் அவர்களிடம் எதோவொன்று எங்களுக்கு தருவதற்கு இருக்கின்றது என்பதனாலேயே ஆகும்." அதன் பின்னர் சிகிச்சையாளர்கள் தாம் எவ்வாறு சிறுவர்களுக்கு சிகிச்சை செய்கின்றார்கள் என்பதை சொல்லுவார்கள். அதேவேளை நாங்களும் கல்விக்கான எங்களது சொந்த ஒழுக்க முறைகள் எவ்வாறு சிறுவர்களையும், சமூகத்தையும் மிகப்பெரிய அளவில் கவனத்தில் கொள்கின்றது என்பது பற்றி அவர்களுக்கு விவரிப்போம்.இதன் பின்னர் நாங்கள் ஒன்றாக கடமையாற்ற முடியும் என்பதை உணர்ந்தோம்.பாராம்பரிய சிசிக்கையாளர்கள் சிறுவர்களுக்கிடையில் காணப்பட்ட தீய பழக்கங்களை முதலில் துடையெறிந்த பின்னர் எங்களிடம் அவர்களை தருவார்கள். அதன் பின்னர் அவர்களை நல்ல ஆண், பெண் பிரஜைகளாக கட்டியெழுப்ப நாம் உதவுகின்றோம்.*

**-லூாக்கிரேசியா வம்பா, நம்பிக்கையை மீள்கட்டியெழுப்புதல், மோசாம்பிக்**

**மீறல்களை பரிசீலனை செய்தல்: பராபட்சங்களை பரிசீலனை மூலம் இனங்காணல்**

துஷ்பிரயோகமானது மறைக்கப்பட்டோ அல்லது சமூக அங்கத்தவர்களால் ஏற்றுகொள்ளப்பட்டிருப்பின் பாதிப்புக்கு உள்ளனவருக்கு மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளது என்பதை நிரூப்பிப்பது கடினமான ஒரு விடயமாகிவிடும். கங்ஹேரியிலுள்ள குழுவொன்று பரீசிலைனை முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் பராபட்சம் இடம்பெற்றதற்கான சாட்சிகளை கிடைக்கக் கூடியவாறு செய்வதுடன், பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக சட்டரீதியான வழக்குகளை தொடுக்கின்றது.

ஐக்கிய அமெரிக்க நிறுவனங்களினால் பயன்படுத்தப்பட்ட வீடு அமைத்தலில் பராபட்சம் என்னும் முறையை ஒட்டி தேசிய மற்றும் சிறு பான்மை இனத்திற்கான சட்ட பாதுகாப்பு அலுவலகமானது (NEKI) பாராபட்சம் பற்றிய குற்றச்சாட்டு எழும்பும் பொழுது இந்த பரிசோதனை முறையை பயன்படுத்தி ஆதாரங்களை சேகரிக்கின்றது. 2002 இல் பாராபட்ச வழக்குகளின் ஆவணப்படுத்தலானது பெறுமதி வாய்ந்த ஒரு நுணுக்கமாக கங்கேரியன் நீதி மன்றத்தால் முதலில் ஏற்றுக்கொண்டது.

ரோமா அமைப்பைச் சார்ந்த ஒரு சிறுபான்மை குழுவினர் ஐரோப்பாவின் பல்வேறு நாடுகளிலும் வசித்து வருகின்றனர். அவர்கள் அருவெறுப்பான குற்றச்செயல்கலளுக்கு அடிக்கடி இலக்கக்கப்படுகின்றவர்களாகவும், அத்துடன் ஹங்கெரியிலுள்ள அதிகரித்த குற்றச்செயல்களுக்கும், வேலையில்லாப் பிரச்சனைகளுக்கும் அடிக்கடி குற்றஞ் சாட்டப்படுகின்றவர்களாகவும் இருக்கின்றார்கள். அத்துடன் இவர்கள் பாரபட்ச நிலைமைகளுக்கு முகம் கொடுப்பவர்களாகவும் வேலையை பெற்றுக்கொள்ளவோ, பொதுக்குடியமைப்பிலிருந்து சேவைகளை பெற்றுக்கொள்ளவோ முடியாதவர்களாக இருக்கின்றார்கள். அத்துடன் தொடர்ந்தும் இவர்களுக்கெதிரான பாராபட்ச முறையானது அடிக்கடி சூழ்ச்சித்திறனுடன் நடாத்தி செல்லப்படுகின்றது. இதற்கான நேரடியான சாட்சி என்பது அரிதாகவே உள்ளது.

NEKI யானது பரிசீலனை முறையை பயன்படுத்தி பராபட்சம் இடம்பெற்றதை நீருபித்துப்பதுடன், நேரடியான ஆதாரங்களை பெற்றுக்கொள்கின்றது. இந்த குழு மக்களை அடையாளம் கண்டு, அவர்களை பயிற்றுவித்து, அவர்களை பரிசோதகர்களாக வெளியில் அனுப்பி பராபட்ச அனுபவங்களை பெற்றவர்களின் கோரிக்கைக்களுக்கான செயற்பாட்டை திரும்ப செய்கின்றது. அத்துடன் இவர்கள் ஒவ்வொரு பரிசோதகரும் நம்பத்தகுந்தவராகவும், உண்மை நிலைமையை அவதானிக்க கூடியவராகவும் மற்றும் பராபட்சத்தால் பாதிக்கப்பட்டவர் அல்லது பாதிக்கப்பட்டவரது சுயவிரங்களுடன் கூடியளவு ஒத்ததாகவும் இருப்பதை கவனிக்கின்றது. NEKI யாது புலானய்வு செய்பவர் தெரிவு செய்யப்படும் பொழுது தனிப்பட்ட ஒவ்வொருவரும் சட்ட வழக்குகளில் நம்பத்தகுந்த சாட்சிகளாக இருப்பார்களா என்பதையும், இப்படிப்பட்ட வழக்குகளானது பல வருடங்களுக்களுக்கு தொடர்ந்து செல்லக் கூடியதாக இருப்பதால் பரிசீலனை மேற்கொள்பவர் தொடர்ந்து தொடர்பில் மிக நீண்ட காலத்திற்கு இருக்கக் கூடியவராக இருத்தலையும் கவனத்தில் கொள்கின்றது.

NEKI யின் முறைப்பாடுகளை பெற்றுக்கொள்ளும் பொழுது அலுவலக அங்கத்தவர்கள் வழக்கு பற்றிய மதிப்பீடு செய்வதுடன், பின்னர் அதைத் தொடர்ந்து செய்வதா என்பதை தீர்மானிப்பதுடன், பாராபட்ஸம் இடம்பெற்றதாக குறிப்பிடப்பட்ட இடத்திற்கு பரிசோதகர்களை அனுப்புவர். குற்றச்சாட்டுகளானது ஊழியர்கள் தொடர்பு பட்டதாயின் உதாரணமாக ஒரே குணதியாங்கள், தராதரங்களை கொண்ட ஒரு ரொமா இனத்தவரையும், ரொமா இனத்தவர் அல்லாதவரையும் பரிசீலனையில் ஈடுபடுத்துவார்கள். அவர்கள் இருவருக்குமிடையில் இனரீதியான பாகுபாடு மாத்திரமே முக்கிய அம்சமாக இருக்கும். அவர்களை மிகச்சிறிய இடைவெளியில் ஒரே நாளில் வேலைக்காக விண்ணப்பிப்பதுடன், அவற்றை ஒப்பீடு செய்து தெளிவு படுத்திக் கொள்ளும் நோக்குடன் பரிசோதகர்கள் ஒப்பீடு நடவடிக்கைகளை மேற்கொள்வர்.

பரிசோதகர்கள் பரிசோதனையின் பின்னர் உடனடியாக தமது அனுபவங்களை திட்டத்தில் பதிவு செய்வார்கள். அதாவது நேர்முகம் காணலின் போது வினப்பட்ட வினாக்கள் தொடர்பான விபரங்கள், விண்ணப்பதாரி நடாத்தப்படும் விதம் மற்றும் வேலை விவரிக்கப்பட்ட விதம் போன்றவை உதாரணம் சம்பளம் மற்றும் எனைய நன்மைகள் பற்றிய விபரங்கள். அதன் பின்னர் பரிசோதனைகளின் இணைப்பாளர் (நிறுவனம் அல்லது சட்டத்தரணி) வித்தியாசமான விதத்தில் நடாத்தபட்டனரா என்பதை மதிப்பாய்வு செய்வார். இந்த தகவல்களோ பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆதரமாக சட்டவழக்குகளில் பயன்படுத்தப்படுகின்றது.

2002 இல் NEKI பதினைந்து தடவை இந்த பரிசீலனை யுக்தியை பயன்படுத்தியது. அதில் மூன்று வழக்குகளில் பரிசீலனையை பூர்த்தி செய்தல் சாத்தியமற்றதாகி விட்டது. 12 பரிசீலனைகளில் 5 பாரபட்சத்திற்காக ஒழுங்கு முறையான சாட்சியத்தை தரவில்லை. மிகுதி எழு மாத்திரம் பாராபட்ச நடவடிக்கைகான சாட்சிகளாக இருப்பதுடன் சட்டசார் நடவடிக்கைக்கு போதுமானதாக இருக்கின்றது.

இது பற்றி மேலும் அறிவதற்கு யுக்தி பற்றிய சிறுகையேடு எமது இணையத்தளமான www.newtactics.org யில்செயற்பாடுகளுக்கான கருவிகள் கீழ் தரப்பட்டுள்ளது.

ஐக்கிய அமெரிக்க நிறுவனங்களிடமிருந்து பின்பற்றப்பட்ட இந்த வேலையானது, எல்லோராலும் எளிதில் பின்பற்றக் கூடியது என்பதை தெளிவுபடுத்துவதுடன் மனித உரிமை பிரச்சனை தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் இந்த முறைகள் தொடர்பாக கற்றுக்கொள்ளுவதற்கு பிரதேசத்தின் எனைய குழுவினரும் NEKI ஐ அணுகின்றார்கள். உதாரணமாக உரிமைகள் செயற்பாட்டிற்கான தடைகள். இந்த பரிசீலனை முறையை எனைய பல்வேறுபட்ட நிறுவனங்களிங்களின் வேலை நடைமுறைப்படுத்தலின் போதும் பயன்படுத்தலாம். உதாரணமாக பொலிஸ் திணைக்களம் அல்லது வியாபாரம் போன்றனவாகும்.

**நஷ்டஈடு கோரிக்கைகள்: பொலிஸ், இராணுவம் மற்றும் ஆயுதக்குழுக்களின் துஸ்பிரயோகத்தால் பாதிப்புக்குள்ளனவர்களுக்கு நஷ்டஈடு வழங்குமாறு அரசாங்கத்தை அறிவுறுத்தல்.**

இந்தியாவின் தேசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவானது மனித உரிமைகளுக்கான துஸ்பிரயோகங்களின் முறையீடுகளை விசாரணை செய்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈடு வழங்குமாறு உள்ளூர் அரசாங்கத்திற்கு சிபாரிசுகளை வழங்குகின்றது.

இந்தியாவின் மனித உரிமைகள் ஆணைக்குழுவானது பொலிசாரினால் மேற்கொள்ளப்பட்ட துஸ்பிரயோகங்கள் பற்றிய உறுதியான முறைப்பாடுகளின் மூலம் நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி நட்டஈட்டை வழங்கவும், குற்றவாளிக்கு பொறுத்தமான தண்டனைகளை வழங்கவும் அரசாங்கத்தை வேண்டுகோள் விடுக்கின்றது.

மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தின் (1993) பகுதியாக ஸ்தாபிக்கப்பட்ட ஆணைக்குழுவிற்கு பொது ஊழியர்களால் இழைக்கப்பட்ட மனித உரிமைகள் மீறல்கள் அதாவது அலட்சியமாக இருந்து மீறல்களை பாதுகாத்தல் அல்லது தீயசெயல்களுக்கு உடந்தையாக இருத்தல் போன்றன பற்றி விசாரணை செய்யவும், பரிந்துரைகளை வழங்கவும் அதிகாரம் உள்ளது. அதிகமான முறைப்பாடுகள் பொலிசாருக்கு எதிராகவே பெறப்படுகின்றன. இருப்பினும் ஆணைக்குழுவானது ஆயுதக்குழுக்கள் அல்லது இராணுவத்தினாரால் துஸ்பிரயோகத்திற்கு உட்பட்டவர்களுக்கும் நட்டஈடுகளை சிபாரிசு செய்கின்றது.

துஸ்பிரயோகத்திற்கான முறைப்பாடுகளானது செயற்பாட்டாளர்களிடமிருந்தும்; ஊடாக சாதனங்களிலிருந்தும் அதேவேளை பாதிக்கப்பட்டவர்களிடமிருந்தோ அல்லது அவர்களுடைய உறவினர்களிடமிருந்தோ பெறப்படுகின்றது.முறைப்பாடுகள் ஆனாது பொதுவாக உடல்ரீதியான துஸ்பிரயோகம், தனிப்பட்டவர்கள் அல்லது குடும்பங்களுக்கான தொந்தரவுகள், பெண்களுக்கான சிகிச்சைக்கான செயற்பாடுகளில் கவனமின்றி இருந்ததால் எற்பட்ட தவறுகள், காவலில் இருக்கும் பொழுது அலட்சியப்படுத்தப்பட்டமை, சட்டரீதியற்ற தடுத்து வைப்பு அல்லது சித்திரவதை போன்றவற்றை உள்ளடக்குகின்றது.அத்துடன் ஆணைக்குழுவானது சிறுவர் தொழிலாளர்கள், அடிமைத் தொழிலாளர்கள் மற்றும் சமூகத்தில் எளிதில் பாதிக்கக் கூடிய அங்கத்தவர்களுக்கு ஏற்படுகின்ற உரிமை மீறல்கள் தொடர்பான முறைப்பாடுகளையும் பெற்றுக்கொள்கின்றது. உதாரணமாக சிறுவர்கள், பெண்கள், ஊனமுற்றவர்கள், குறிப்பிட்ட ஜாதி மற்றும் கோத்திரங்கள், அகதிகள், சிறுபான்மையோர் மற்றும் எனையோர்கள் போன்றன.

முறைப்பாடுகள் கிடைக்கின்ற பொழுது ஆணைக்குழுவானது விசாரணைக்கான அறிக்கைகாக அழைப்பு விடுகின்றது அல்லது அதன் விசாரணைகளுக்கான பிரிவுகள் ஊடாக நேரடியாக விசாரணைக்கான வழக்குகளை பார்வையிடுகின்றது.வழக்கின் உண்மை நிலை உறுதி செய்யப்பட்டிருப்பின், ஆணைக்குழுவானது மாநில அரசாங்கங்களுக்கு மீறுதல்கள் இடம்பெற்றது தொடர்பான அறிக்கைகளை சமர்ப்பிகின்றது. இந்த அறிக்கையானது பாதிக்கப்பட்டவர்களுக்கான நிதி நட்டஈட்டு சிபாரிசுகளையும், குற்றவாளிக்கெதிரான ஒழுக்க நடவடிக்கையையும் உள்ளடக்குகின்றது. நட்டஈட்டு தொகையை திரும்பவும் இலகுவில் பெற்றுக் கொள்வதற்காக குற்றத்தை புரிந்த அரசாங்க சேவையாளரிடமிருந்தே நட்டஈட்டு பணத்தை அறவிடுகின்றது.

ஆணைக்குழுவானது அதனுடைய வருடாந்த அறிக்கையிலும் *மனித உரிமைகள்* என்கிற அதன் மாதந்த செய்தி மடலிலும் வழக்குகள் தொடர்பான விபரங்கள் வெளியிடப்படுகின்றது.ஊடகங்களும் பெரிய வழக்குகள் பற்றி பிரசுரம் செய்கின்றது.

நட்டஈடு பொதியானது கணிசமான ஒரு பெறுமதியை கொண்டிருப்பின் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களுடைய குடும்பத்தவர்களுக்கும் தமது வாழ்க்கையை மீளமைத்துக் கொள்வதற்கு உதவிபுரிகின்றது. மேலும் இவ்யுக்தியானது மற்றைய சீர்திருத்தங்களிலிருந்து விலகிசெல்லமால் இருப்பதில் கவனமும் அக்கறையும் செலுத்துதலை உறுதிப்படுத்தப்படுதல் அவசியமாகும். இவை கடினமானவைகள் எனினும் இந்த ஆணைக்குழுவின் அவர்களுடைய தொடர் நடவடிக்கை முயற்சியின் நன்மைகள் பற்றிய விழிப்புணர்வை அலுவலகர்கள் பெற்றுக் கொள்வதுடன் அதன் மூலம் எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய துஸ்பிரயோகங்களை தடுக்கக்கூடிய சாத்தியப்பாடுகளை உருவாக்குகின்றது.

இந்தமாதிரியான ஆணைக்குழுவின் உருவாக்குவதற்கு அரசாங்க அலுவலகங்களினதும் சமுதாயத்தினரதும் எல்லைகடந்த கணிசமான ஆதரவும் அவசியம். அல்லது பாதிக்கப்பட்டவர்களும், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களும் பயமின்றி சரியான தண்டனையை வழங்குவதற்கு வேண்டிய உதவியை நாட பொதுவிளம்பர இயக்கங்கள் அவசியமாக ஒன்றாக இருந்து உத்தரவாதம் அளிக்கின்றது.

**எமக்கு ஏற்பட்ட பாதிப்புக்களுக்கு எப்படி அரசாங்க நிறுவனங்களையும் அதன் கட்டமைப்பையும் பயன்படுத்தி எமக்கு வேண்டிய ஆதரவு மற்றும் அக்கறை, உத்தரவாதம் போன்றவற்றை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும்?**

**தண்டனைகளிலிருந்து தப்பமுயல்பவர்களுக்கெதிராக செயற்படுதல்:பொதுஜன வாக்கெடுப்பு மற்றும் மகஜரின் சக்தியின் மூலம் தண்டனைகள் தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தல்.**

சிலவேளைகளில் சட்டமியற்றலும் அரசாங்க யுக்திகளும் இருக்கின்ற பொழுதும் பொதுஜனங்கள் அதுபற்றி அறியாதவர்களாகவும் அவற்றை எவ்வாறு பயன்படுத்து என்பது பற்றி தெரியாதவர்களாகவும் உள்ளனர். உருகுவேயிலுள்ள ஒரு குழுவினர் சிறப்புமிக்க வகையில் ஒரு பொதுஜன முயற்சியை ஒழுங்குபடுத்தினர். அது உருகுவேயிலுள்ள இராணுவத்திலிருந்து துஸ்பிரயோகங்களை மேற்கொண்டவர்களை குற்றங்களுக்கான தண்டனை பெறுதலிலிருந்து இருந்து தப்பிவிக்கும் ஒழுங்குகளை நிகழவிடாமல் தடுப்பதை இலக்காக கொண்டுதாகும்.

அரசாங்க யாப்பு முன்னேற்பாடுகள் ஒருநாளும் செயற்பாட்டு நடைமுறைகளுக்கு ஏற்றவாறு பயன்படுத்தப்படுவதில்லை. உருகுவேயிலுள்ள Comision Nacional Pro-Referndum (CNR) ஆனாது ஒரு பொதுஜன வாக்கெடுப்பை ஒழுங்குபடுத்தியது. எனவே பொதுமக்கள் கூட்டாக ஒரு தீர்மானத்திற்கு வாக்களிப்பதன் மூலம் இராணுவத்தினாரால் வேலைக்கமர்த்தப்பட்ட மனித உரிமை துஸ்பிரயோகக்காரர்களுக்கு தண்டனையை வழங்க முடியும். பொதுஜன வாக்கெடுப்பை வைப்பதற்கு அரசாங்கத்திற்கு மகஜரை அனுப்பவேண்டும் என்பதனால் CNR க்கு ஒரு வருடத்திற்குள் தண்டனை சட்ட நிறைவேற்றத்திற்கு வாக்கெடுக்க தகுதியுள்ள 25 வீதத்திற்கு அதிகமான பிரஜைகளது கையெழுத்தை பெறவேண்டிய தேவை இருந்தது.

சனத்தொகையில் கால்வாசிப்பேரின் கையொழுத்துக்களை ஒன்றுதிரட்டுவதற்கு அவசியமாக இருந்தவை எண்ணற்ற நிறுவனங்கள் அதே போன்று பாரியளவிலான தொண்டர்களின் பங்களிப்புமாகும். மேலும் இதில் அதிகளவில் பங்குபற்றியவர்கள் பெண்கள் இயங்கங்களில் இருந்து வந்தவர்கள் ஆகும். பங்கு கொள்பவர்களை ஒழுங்கமைப்பதென்பது சிக்கலை ஏற்படுத்தும் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த சவாலாக இருந்தது. உதாரணமாக தேசிய இயக்கத்தின் கையெழுத்து சேகரிக்கும் நீண்ட காலப்பகுதியில் ஒழுங்குபடுத்துனர்கள் தமது கடின உழைப்பின் ஊடாக 9000 brigadistas அல்லது தொண்டர் கையெழுத்து சேகரிப்பாளர்களை ஒன்று சேர்த்தனர். இது பெரியதொரு பொறுப்பேற்கும் பணியாக இருந்ததுடன், அவர்கள் கணனிகளையும் விரிந்த பக்கங்களையும் பயன்படுத்தியே கையெழுத்துக்களை அட்டவனைப்படுத்தினர்.

எல்லாக் கையெழுத்தும் சேகரிக்கப்பட்ட பின்னர் அவை அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டது.CNR வெளிப்படையாகவே தமது உறுதிப்பாட்டை வாக்கெடுப்பு மதிப்பீட்டு சபை முன்னால் சமர்ப்பித்தினர். கையெழுத்து சேகரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் செயற்பாடுகளின் காலப்பகுதியில் CNR ஆனாது பாரிய சட்டதிட்டங்கள் மற்றும் ஊடகங்களின் எதிர்ப்புகளுடன் போரடுவதற்கு அடிமட்ட மக்களின் ஒழுங்கமைப்பை பயன்படுத்தியது.அவர்கள் துண்டுபிரசுரங்களை வழங்கியும், பதாகைகள் தொங்கவிட்டும்,சுவரொட்டிகள் மூலமும்,ஊர்வலங்களை நடாத்தியும் இசை விழாக்கள் மூலமும், சைக்கிள் மரதன் ஓட்டங்களையும் ஏற்பாடு செய்தது.

பொதுஜன வாக்கெடுப்பு சிறிதளவு தோல்வியடைந்தாலும் கூட, CNR இன் வேலையானது புதிய உபாயத்தின் மூலம் உருகுவேயில் ஜனநாயக முறையை உருவாக்கியது. மூன்றிலொரு பங்கு உருகுவேயியன் மக்களை brigadistas தனிப்பட்ட ரீதியில் போரட்ட காலங்களில் சந்தித்ததுடன் மற்றும் எட்டுக்கும் அதிகமான பிரபல பொதுஜன வாக்கெடுப்பு முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டன. CNR இன் brigadistas மற்றும் தலைவர்களும் தொடர்ந்து அரசியலில் தமது பங்களிப்பை ஆற்றி வருகின்றனர்.

CNR ஆனாது தனது இறுதியான இலக்கான தண்டனையிலிருந்து தப்பித்தலை தடுக்கும் செயற்பாட்டை சட்டங்களிலிருந்து மாற்றியமைக்கும் முயற்சியில் பெரிய வெற்றியை அடைந்து கொள்ள முடியாவிட்டாலும் முன்னொரு பொழுதும் நிகழ்ந்திராதவகையில் இவ் யுக்தியின் ஊடாக உருகுவேயின் சிவில் சமூகத்தை ஒழுங்கமைத்ததுடன் தண்டனை பெறுதலிலிந்து தப்பிக்கும் செயற்பாட்டை தேசிய பிரச்சனையாக மாற்றிவிட்டது. brigadistas இன் சென்று பார்வையிடுதல் செயற்பாடானது குறிப்பிடத்தக்க வகையில் எண்ணற்ற மக்களுக்கிடையில் சட்டம் தொடர்பான உண்மையான விழிப்புணர்வை ஏற்படுத்தியதுடன் அதிக எண்ணிக்கையானனோர் இந்த பிரச்சனைகள் தொடர்பாக ஊடகங்களின் மூலமும் அறிந்து கொள்வதற்கு உதவியது.

உருகுவேயிலுள்ள சட்ட முன்னேற்பாடு போன்று சிறிய அளவில் பயன்படுத்தப்பட்ட பொதுஜன வாக்கெடுப்பின் அதிகாரமானது எல்லா நாடுகளிலும் பெற்றுக்கொள்ள முடியாதவொன்றாகும். மகஜர் தொடர்பாக கையெழுத்து தொடர்ந்து சேகரிக்கப்பட முடியும் எனினும் பொதுமக்கள் விழிப்புணர்வை பெற்றுக் கொள்ள அது சந்தர்ப்பமாக அமைவதுடன் பொது மக்கள் அரசாங்கத்தின் கொள்கைளில் திருப்தி அடையவில்லை என்பதை அரசங்கத்திற்கு அறிக்கையிடுகின்ற ஒன்றாக விளங்குகின்றது..

**கடந்த காலத்திற்கான பொறுப்பை கையேற்றல்: சமுகத்திலிருந்து ஒதுக்கப்பட்ட குழுவினருக்கு பொது வளங்கள் இலகுவில் கிடைக்கக் கூடியவாறு செய்தல்**

நீருப்பித்தல், சாத்தியமிருப்பின் துஸ்பிரயோகத்தில் ஈடுபட்டவர்களை தண்டித்தல் என்பதே சமத்துவத்தின் ஒரு பகுதியாகும். மனித உரிமைகள் துஸ்பிரயோகங்களுக்கான பரிகாரம் தேடுதலுக்கு சில குழுக்கள் பாதிக்கப்பட்டவர்களுக்காக நட்டஈடுகளை தேடுகின்றது. இந்த வகையான நடவடிக்கை வடிவங்களில் நிதி நட்டஈடு மற்றும் பறிமுதல் செய்யப்பட்ட சொத்து மீள்வழங்கப்படுகின்றது.

வெற்றி பெறுவதற்காக குழுக்கள் நடைமுறையிலுள்ள அரசாங்கத்திற்கு அடிக்கடி அழுத்தம் கொடுத்து அவர்களுக்கும் துஸ்பிரயோகங்களில் பங்குள்ளது என்பதை ஏற்றுக்கொள்ளச் செய்வதுடன், பாதிக்கப்பட்டவர்களுக்கான நட்டஈட்டை வழங்கும் பொறுப்பை எற்றுக்கொள்ளச் செய்கிறது அல்லது அவர்களுக்கான சிகிச்சை முறைகளை பெற்றுக்கொள்ள உதவுகிறது.

ரொமேனியாவிலுள்ள ICAR Foundation ஆனாது அரசாங்கத்திற்கு அழுத்தங்களை கொடுப்பதன் மூலம் உதவிகளை வழங்க செய்கிறது. அதாவது முதலில் பௌதீக சொத்துக்களான சித்திரவதைகளுக்கான சிகிச்சை நிலையங்களை ஏற்படுத்தவும், இரண்டாவது இலவச மருத்துவத்திற்கான உரிமைகளை வழங்கவும், மற்றும் சித்திரவதையிலிருந்து மீண்டு வந்தவர்களுக்கான சிறப்புக் கவனிப்பு மற்றும் சேவைக்கான சிறப்புக் காப்புறுதி முழுத்தொகையை பெற ஏற்பாடு செய்கின்றது.

ICAR யின் இந்த யுக்தியானது அரசாங்கத்தின் மனோநிலையை மாற்றியமைக்கும் ஒரு திட்டமாக தொழிற்பட்டு வளமான எதிர்காலத்தை கட்டியெழுப்பவேண்டும் என்பதற்காக நாட்டின் கடந்த காலத்தை பொறுப்பேற்க வைக்கின்றது. ரொமெனியாவின் கம்யூனிஸ் ஆட்சிக் காலத்தில் எண்ணற்ற சித்திரவதைகளை மேற்கொண்டவர்கள் தண்டனைகளிலிருந்து தப்பித்ததுடன் அதில் சிலர் சமூகத்தில் செல்வாக்குமிக்க நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள்.பாதிப்படைந்தவர்கள் முகம் கொடுக்கின்ற சமூகத்தின் முக்கிய காரணிகள் கடந்த காலத்தையும் அதனால் பாதிப்படைந்தவர்களையும் மறக்க முயல்வதுடன், அதாவது சரியாக சொல்வதெனில் கடந்தகால அனுபவங்களிலிருந்து கற்றுக் கொண்டவற்றின் மூலம் ஜனநாயத்திலும், மனித உரிமைகளிலும் சிவில் சமூகத்தின் ஆழமான பங்களிப்பை கட்டியழுப்ப முயல்கிறது.

முதலில் ICAR முன்னாள் அரசியல் கைதிகளின் ரொமேனிய கூட்டமைப்புடன் இணைந்து கடமையாற்றுவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களின் நம்பிக்கையைப் பெற முயல்கின்றது. பின்னர் குழுக்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய தேவைகளை அடையாளம் கண்டு கொள்கிறது. அதாவது சிறப்பான மருத்துவ கவனிப்பை பெற்றுக்கொள்ளவும், நிதி மற்றும் சட்டம் சார் உதவிகள் போன்றனவாகும். இந்த மாதிரியான தேவைகளை பெற்றுக்கொள்வதற்கு ICAR யினால் இலக்கு வைத்தவர்களில் சிலர், சிவில் ஊழியர்கள், மருத்துவ துறை நிபுணர்கள், மற்றும் நகர அலுவல்கள், நகரசபை மற்றும் அரசியல் நிறுவனங்களான சுகாதார அமைச்சு, போன்றனவாகும்.மேலும் நிபுணத்துவ சேவைகளை உருவாக்குவதற்கு ஏனைய சிறிய சிவில் சமூக நிறுவனங்கள், ஊடகங்கள் மற்றும் டென்மார்க்கிலுள்ள சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களுக்கான சர்வதேச புனர்வாழ்வு சபை போன்றவர்களுடன் கூட்டிணைந்துள்ளது.

இதற்கு பத்தாண்டுகள் எடுத்தது, எனினும் ICAR Foundation ஆனாது ரொமேனிய அரசாங்கத்தின் மனதை மாற்றியமைத்து முன்னைய ஆட்சிமுறைகளின் செயல்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான அதன் பொறுப்பை ஏற்றுகொள்ளவைத்தது.

இது பற்றி மேலும் அறிவதற்கு யுக்தி பற்றிய சிறுகையேடு எமது இணையத்தளமான www.newtactics.org யில்செயற்பாடுகளுக்கான கருவிகள் கீழ் தரப்பட்டுள்ளது.

ICAR யின் வெற்றியானது அரிதிற் பெறப்பட்டது என்பதுடன் அந்த வெற்றியின் பெரும் பங்கு அந்த நேரத்தில் ஏற்பட்ட ரொமேனியாவின் அரசியல் மாற்றங்களிலேயே சார்ந்துள்ளது. இந்த அரசியல் சந்தர்ப்பங்களை அடையாளம் கண்டு அதன் தொடர்புகளை பயன்படுத்தி இலாபங்களை பெற்றுக்கொண்டது. புதிய சட்டங்கள் மற்றும் அண்மையில் திறந்த சமூதாய அமைப்பு போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் பழிவாங்கப்படுவார்கள் என்கிற பயமின்றி ஒழுங்கமைக்க அனுமதிக்கின்றது. இவ் யுக்தியானது இரு வேறுபட்ட நோக்கங்களுக்காக பணியாற்றுகிறது அதாவது நட்டஈடுகளை பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குதல் மற்றும் அரசாங்கம் தண்டனைகளிலிருந்து தப்பித்துக் கொள்ளும் நிலையையும் ஒரு முடிவுக்கு கொண்டு வருகிறது.

**பாதிக்கப்பட்டவர்களுக்கு சேவைகளை வழங்குவதில் வளங்களை மூதலீடு செய்ய அரசாங்கத்திற்கு எவ்வாறு அழுத்தம் கொடுப்பீர்?**

**எழுத்துரு செய்திகளை அனுப்புவதன் மூலம் வலையமைப்புகளை கட்டியெழுப்புதல்: எழுத்துரு செய்தி அனுப்புதல் முறையைப் பயன்படுத்தி மனித உரிமைகள் செயற்பாட்டு தொகுதியை கட்டியெழுப்புதல்**

நவீன தொழிநுட்பத்தைக் கொண்டு மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்க முடிவதுடன் அதனூடாக அதிகளவிலான எண்ணிக்கையான மக்களை புதிதாக தொடர்புபடுத்த முடிகின்றது. குறிப்பாக இளம்பிராயத்தினரை மனித உரிமைகள் இயங்கங்களில் ஈடுபடுத்த முடிகின்றது.

நெதர்லாந்தின் சர்வதேச மன்னிப்புச் சபை எழுத்துரு தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் ஊடாக புதிய அங்கத்தவர்களை கவர்ந்து கொள்கிறது அதாவது குறிப்பாக இளம் வயதினரை எனெனில் தமது நிறுவனத்தால் நடாத்தப்படுகின்ற சித்திரவதைக்கெதிரான போராட்ட நடவடிக்கைக்கான விழிப்புணர்வை கட்டியெழுப்பவும், தீடிரென்று ஏற்படும் மேல் முறையீடுகளுக்கான உடனடியான பதிலளித்தல் முறையை மக்களிடையே ஊக்குவிப்பதற்குமாகும். 500ற்கும் அதிகமான புதிய அங்கத்தவர்கள் எழுத்துரு தகவலுக்கான நேரடியான பதிலை அளிப்பதற்காக வேலைக்கமர்த்தப்பட்டுள்ளதுடன் 5000 த்திற்கும் அதிகமானவர்கள் அவசர நடவடிக்கைக்கான மேல் முறையீடுகளுக்கு எழுத்துரு தகவல்கள் ஊடாக மறுமொழி பகர்கின்றார்கள்.
.
இந்த யுக்தியானது 2001 இல் சர்வதேச மன்னிப்புச் சபையின் சித்திரவதைக் கெதிரான இயக்கத்தின் கட்டமைப்பிற்குள் உருவாக்கப்பட்டது. சித்திரவதையிலிருந்து யாரேனும் ஒருவரைக் காப்பாற்ற வேண்டிய தேவை ஏற்படும் பொழுது உடனடியாக சர்வதேச மன்னிப்புச் சபையின் டச் பிரிவினர் அது தொடர்பாக ஆயிரத்திற்கும் அதிமான பங்குபற்றுபவர்களின் கையடக்கத் தொலைபேசிகளுக்கு எழுத்துரு தகவலை அனுப்பி வைக்கின்றது.இதில் பங்குபற்றுபவர்கள் தொண்டர்களாக அமர்த்தப்பட்டவர்களும், இவ் இயக்க நடவடிக்கையின் எழுத்துரு தகவல்களுக்கான இலவச சந்தாவைப் பெற்றவர்களாகும்.மேலும் மேல் முறையீடுகளுக்கு ஒரு மணித்தியாலத்திற்குள் பதிலளிப்பவர்களாகவும் இருக்கின்றார்கள். மன்னிப்புச் சபையானது ஆயிரத்திற்கும் அதிகமான எதிர்ப்பு "கையெழுத்துக்களை" வழக்குகளுக்கு எதிராகவோ, சித்திரவதை அச்சுறுத்தல்களுக்கெதிராகவோ சேகரித்துள்ளது. இந்நிறுவனமானது பின்னர் இந்த எதிர்ப்புக்களை பக்ஸ் மூலமாகவோ அல்லது மின்னஞ்சலூடாகவோ உரிய அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கின்றது.

டூனிசன் மனிதன் அவசர செயற்பாட்டின் நன்மைகளை பெற்றுக்கொண்ட ஒரு குடிமகன் என்பதுடன் அவர் மூலம் நேதர்லாந்தின் சர்வதேச மன்னிப்புச்சபையானது சனிக்கிழமை இரவுகளில் ஒரு பிரபல தொலைக்காட்சி நிகழ்ச்சி என்னும் ஒரு யுக்தியை அறிமுகப்படுத்தியது. இந் நிகழ்ச்சி 2.5 மில்லியன் மக்களைப் போய் சேரக் கூடியவொன்றாகும்.இதைப் பார்வையிடுபவர்கள் 160 சொற்களைக் கொண்ட எழுத்துருத் தகவலுக்கான அவசர செயற்பாட்டிற்கான சுருக்கத்தை படிப்பர். அதற்கு பதிலளிப்பதற்கு மக்கள் ஆம் (Ja) என்கின்ற பதிலை மாத்திரம் "4777" என்கின்ற இலக்கத்தினுடாக பதிலளிப்பர். ஒரு நிமிடத்திற்கு பின்னர் இதில் கலந்து கொண்டவர்கள் அடுத்த எழுத்துருத் தகவலை பெற்றுக்கொள்வர். அதில் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டிருப்பதுடன் மேலும் எத்தனை பேர் எதிர்ப்பிற்கு ஆதரவாக பதில்களை முன்பு அனுப்பியுள்ளனர் என்கிற விபரத்தையும் அது தெரிவிக்கும். அதன் பின்னர் இயக்கத்தின் முடிவுகள் என்ன என்பதை அதாவது பாதுகாப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட நபர் தொடர்பான தகவலை எழுத்துரு தகவல் வடிவில் அனுப்பும்.

இருப்பினும் அவசரகால செயற்பாட்டு வழக்குகளின் போது மக்களால் சூழ்நிலைமை அம்சங்களில் ஏற்படுத்தப்படும் முன்னேற்றங்களின் பொறுப்புக்களை மன்னிப்புச் சபையினர் அரிதாகவே உரிமை கொண்டாடுகின்றனர். கிட்டத்தட்ட மூன்றிலொரு பங்கு வெற்றிகரமான முடிவுகளை கொண்ட வழக்குகளாகும்.

அதாவது மரணதண்டனை விதிப்பு மாற்றியமைக்கப்படுகின்றது, காணமல் போனவர்கள் கண்டுபிடிக்கப்படுகின்றார்கள், தடுத்து வைக்கப்பட்டவர்கள் இருக்குமிடம் தெரிவிக்கப்படுகின்றது, சித்திரவதைக்கு உள்ளாகும் தன்மைகள் குறைக்கப்படுகின்றது.பயங்கர நோய்வாய்ப்பட சாத்தியமுள்ள கைதிகள் மருத்துவ கவனிப்பு பெற்று குணமடைகின்றார்கள்.

மேலும் இந்த இயக்கமானது ஆயிரத்திற்கும் அதிகமான இளம் வயதினரை அவசர நடவடிக்கைக்கான சர்வதேவ வலையமைப்பில் இணைந்து கொள்ள தூண்டுதலை எற்படுத்துகின்றது.

மன்னிப்புச் சபையின் எல்லா இயக்கங்களும் உலகத்தில் எவரேனும் உதவி தேவைப்படும் ஒருவருக்கு நேரடியான கவனிப்பிற்கான மறுமொழியை தருகின்றது. எளிமையான செயற்பாட்டை பயன்படுத்தி மிக அதிக எண்ணிக்கையான மக்கள் பங்குகொள்ள வைப்பதன் ஊடாக தாம் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்துவதை அவர்கள் உணர்கின்றார்கள். இந்த இயக்கம் பொதுமக்களுக்கு அறிவூட்டுவதுடன், மனித உரிமைகள் பற்றிய அதாவது துஸ்பிரயோகம் மற்றும் சித்திரவதைகள் பற்றிய உலகரீதியான விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்துகின்றது. எழுத்துரு தகவல் இயக்கமானது விரைவான பதிலளிப்பை வழங்குவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுகின்றது. அதேவேளை மன்னிப்புச் சபையின் கல்வியானது அரசியலமைப்பில் புதிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

எழுத்துரு தகவல் இயக்கமானது புதிய இளம் வயது அங்கத்தவர்களை கவர்ந்துள்ளதுதன் காரணம் மன்னிப்புச் சபை செய்த நடவடிக்கை முறையைப் போன்று எனையவர்களால் செய்ய முடியவில்லை என்பதாகும். இளம் வயதினர் அடிக்கடி எண்ணற்ற அளவில் கையடக்க தொலைபேசி பாவனையில் ஈடுபடுபவர்கள். எனவே இந்த மாதிரியான இளைஞர்களை தான் மன்னிப்புச் சபை அணுகுகின்றது. இளைஞர் கலாசாரத்தின் பிரபல கருவியை தானும் பயன்படுத்துகின்றது. மன்னிப்புச் சபையானது புதிய இளம் செயற்பாட்டாளர்களை கவர்வதுடன் தமது இயக்கம் நீண்ட காலத்திற்கு தொடர்ந்து இயங்குவதற்கான பலத்தையும் பெற்றுள்ளது.

**பொலிஸ் படையில் சீர் திருத்தங்களை ஏற்படுத்துதல்: பொலிஸ் அதிகாரிகளுக்கு மனித உரிமைகளை பாதுகாப்பதில் அவர்களுடைய பங்களிப்பு என்ன என்பது பற்றி கல்வியறிவூட்டல்**

பிறேசிலில் ஒரு குழுவானது பொலிஸ் அலுவலர்களுக்கு அவர்கள் கடமை ஆற்றிவருகின்ற சமூகத்திற்குமிடையிலான உறவுகளில் திருத்தங்களை கொண்டுவருவதற்கு பூரணமான ஒரு பயிற்சியை வழங்கி ஊக்குவிக்கின்றது.

The Cetro de Assessoramento a Programas deEducacao para a Cidadania (CAPEC, அல்லது பிரஜைகளுக்கு அறிவூரை வழங்கும் கல்வி திட்டங்கள்) ஆனாது பிறேசிலிலுள்ள பொலிஸாருக்கு மனித உரிமைகளை பாதுகாப்பதில் அவர்களின் முக்கிய பங்கு என்ன என்பதை புரிந்து கொள்ள பயிற்சிகளை வழங்கி உதவிபுகின்றது. இந்த பயிற்சியானது பலவிதமான கற்கைநெறிகளை உள்ளடக்குவதுடன் எல்லா பிரஜைகளுக்குமான மனித உரிமைகள் பற்றி வலியுறுத்துவதுடன், பொலிஸ் அலுவலர்கள் பற்றியும் குறிப்பிடுகின்றது. இந்த செயற்பாட்டினூடாக பொலிசாருக்குரிய கடமைகள திருத்தியமைக்கப்படுவதுடன் முக்கியமாக சமூகத்தினருடனான தொடர்புகள் மற்றும் சிறப்பாக பொதுமக்களுக்கான கடமைகளும் மேம்படுத்தப்படுகின்றது.

பிறேசிலில் பொலிசாரின் மனித தன்மையற்ற தன்மைகளும் சித்திரவதைகளும் மிக பரந்தளவில் இருந்தன. இப்படிப்பட்ட பிரச்சனைகளை இணைத்து பார்க்கும் பொழுது பொலிஸ் அலுவலர்கள் குறைந்த வேதனம் பெறுபவர்களாக இருந்ததுடன் ஊழல்களும் மிகத் தீவிரமானதாக இடம் பெற்றன. CAPEC ஆனாது "கூட்டுறவான பாதுகாப்பை" உருவாக்குதலை இலக்காக கொண்டு பொதுசன பாதுகாப்பு முயற்சியை திட்டமிடுவதுடன், சமூக அங்கத்தவர்களுடன் இணைத்து ஒழுங்கமைக்கப்பட்டு அதனூடாக கடமைகள் பங்கிடப்படுவதால் பிரஜைகளின் தேவைக்கேற்ப பொலிசாரால் சிறப்பாக பதிலளிக்க முடிகின்றது.

இந்த பயிற்சியின் கற்கை நெறியானது இரண்டு மூன்று நாட்களுக்கான குறிப்புகளை கொண்டு ஆறுமாத காலத்திற்கும் அதிகமான காலங்களுக்கு நடாத்தப்படுகின்றது. இதன் காரணமாக இவை தகவல்கள் மக்களை கூடிய மட்டும் போய்ச் சேர்கின்றது. CAPEC யானது பொலிஸ் திணைக்களங்களுக்கு பயிற்சியின் முடிவில் வேலைக்கு மீளச் சென்று தமது அனுபவங்களை பகிர்ந்து கொள்ளக் கூடிய அலுவலர்களை இப் பயிற்சிக்கு சிபாரிசு செய்யச் சொல்லி வேண்டுகோள் விடுகின்றது. அலுவலர்களுடன் இணைந்து சமுதாய அங்கத்தவர்களும் இக் கற்கை நெறியில் பங்கு பற்றுகின்றார்கள்.

CAPEC யின் பயிற்சிநெறியானது சமுதாயத்தில் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகளின் பங்கானது எவ்வளவு முக்கியமான ஒன்றுவென்பதையும், அவர்களுடைய கடமையானது எவ்வாறு தனிப்பட்ட ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும், சமூகத்திலும் செல்வாக்கு செலுத்துகின்றது என்பதை குறித்து கவனத்தில் கொண்டு செயற்படுகின்றது. அலுவலர்கள் எவ்வாறு எனைய மனித உயிர்களுடன் தாம் தொடர்பு பட்டவர்கள் என்பதை தாங்களாகவே கண்டறிந்து நம்பி உணர்கின்றார்கள். அத்துடன் அவர்கள் "கூட்டுறவான பாதுகாப்பின் பல நன்மைகளுடன், பயன்மிகக காவல் பணிபற்றியும், அலுவலர்களுடைய பாதுகாப்பு நிலைமைகள் உள்ளடக்கிய கல்வியை பெறுகின்றார்கள்.

பயிற்றுவிப்பாளர்கள் பல்வேறு விதமான கதைகள், விபரணங்கள் போன்றவற்றை பயன்படுத்துவதுடன் மாணவர்களுடைய அனுபவங்களிலிருந்து உதாரணங்களை தேர்ந்தேடுத்தும் கவனத்துடன் கற்பிப்பது மட்டுமே, ஆனால் விமர்சன செயல்பாடுகளில் ஈடுபடுவதில்லை. இந்த கலந்துரையாடல்களின் மூலம் அலுவலர்கள் அவர்களால் எப்படி சமுதாயத்தின் மனித உரிமைகளை மேம்படுத்த முடியும் என்பதின் பெறுமதியை கற்றல் நடவடிக்கையின் போது உணர்கின்றார்கள்.

CAPEC யின் பயிற்சியானது பிரேசிலிலுள்ள 25 ற்கும் அதிகமான அரசியல் பிரிவுகளில் செயற்படுத்தப்பட்டதுடன் 30,000 ற்கும் அதிகமானவர்கள் பங்குபற்றினார்கள். குறிப்பாக சிவில் பொலிஸ், இராணுவ பொலிசார், கூட்டமைப்பு பொலிசார், வீதி நெடுஞ்சாலை பொலிசார் மற்றும் மாநகர காப்பாளர்கள் போன்றோர் பங்குபற்றினார்கள். CAPEC யானது கூட்டமைப்பு அரசாங்கத்துடனும் அரச மற்றும் நகர ஆட்சிகளுடன் இணைந்து கடமையாற்றியுள்ளது.

CAPEC யின் யுக்தியானது எல்லோரது கவனத்தையும் பெறக்கூடியவொன்றாகும். எனெனில் குற்றங்களில் ஈடுபடும் அல்லது துஸ்பிரயோகங்களை அனுமதிக்கும் கூட்டத்தினரை மனித உரிமைகளின் செயற்பாட்டாளர்களாக மாற்றியமைக்கின்றது. இந்த அணுகு முறையானது பிரேசிலில் பலமிக்க மனித உரிமைகள் கலாச்சாரத்திற்கு பங்களிப்பது மட்டுமல்லாது நேரடியாக இடம்பெற்று வருகின்ற துஸ்பிரயோகங்களை குறைத்து ஒரு சுமுகமான சூழ்நிலையை உருவாகுவதுடன் பொலிசாரும் சமுதாயத்தினரும் ஒன்றிணைந்து பிரச்சனைகளுக்கு முகம் தீர்க்கமான முடிவினை பெறமுடிகின்றது.

*அலுவலர்கள் அவர்களுடைய சமூகத்தினருடன் கூட்டிணையும் பொழுது அவர்கள் கற்பிப்பாவராக மாற்றமடைகின்றார்கள் குறிப்பாக இது சில கதாநாயகர்களை அல்லது சிறந்த உதாரண மனிதனை கொண்ட இளம் பாராயத்தினர் அல்லது சிறுவர்களிடையே இடம்பெறுகின்றது.*

*மக்காபா நகரத்தில் ஒருபிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவம் மனதை உருக்கும் சம்பவம்.இந்த பிரதேசமானது மிகவும் அபாயம் நிறைந்த இடமாக இருந்தது.ஏனெனில் உள்ளூர் மக்கள் இளம் குற்றவாளிகளால் துன்புறுத்தப்பட்டு வந்தனர்.இராணுவ பொலிஸ் தலைமை அலுவலர் இங்கு கடமையை ஏற்றுக்கொண்டர். அவர் இந்த கூட்டத்தின் தலைவர் யார் என்பதை கண்டுபிடித்து அவன் தன்னை வந்து சந்தித்து உரையாடும் படிக்கு தகவல் ஒன்றை அனுப்பினார். இறுதியில் இளம் பிராயத்தவன் வந்தான் அலுவலகர் ஒரு அன்பில் முதிர்ந்தவராக, ஒரு ஆசிரியராக மற்றும் மிகச்சிறந்த எடுத்துக்காட்டான மனிதராக அவனுடன் ஒரு இணக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார்.*

*இது சாத்தியம் எனெனில் அந்த இளைஞன் தன்வாழ்நாளில் இவர் போன்ற ஒரு உதராண மனிதரை சந்தித்திருக்க மாட்டான். அவருடைய தலைமைப் பண்பால் அவ் இளைஞன் பொலிசாருடன் சிநேகித முறையுள்ளவனானதுடன் அதிகளவில் பொலிசாருக்கு உதவியும் புரிந்துள்ளான். இன்று பிரதேசம் பாதுகாப்பானதாகவும் அமைதியானதாகவும் மாறிவிட்டது. அலுவலகர் தனது கடமையின் முக்கியத்துவத்தை ஒரு கற்பிப்பாவராக உணர்ந்ததுடன் சமாதானத்தை மேம்படுத்தியுள்ளதுடன் சமுதாயத்திற்கு மிகவும் நெருக்கமானவராக மாறி கடமையை செய்தது அதில் ஒரு மாற்றத்தையும் உண்டுபண்ணியுள்ளார்.*

**–றோசா அல்மேயிடா, CAPEC, பிரேசில்**

**ஓர் ஐக்கியமான முன்னனியை கட்டியெழுப்புதல்: நாட்டில் மனித உரிமைகள் நிறுவனங்களின் கூட்டிணைவை கட்டியெழுப்புதல் மூலம் துஸ்பிரயோகங்களுக்கு எதிராக ஏகோபித்த குரல் கொடுத்தல்.**

தனிப்பட்ட ஒரு குழு தாமாக செயற்படுவதிலும் பார்க்க மனித உரிமைகள் சார்பான குழுக்கள் அனைத்தும் ஒன்றாக இணைந்து கடமையாற்றும் பொழுது நாட்டின் மனித உரிமைக்கான சூழ்நிலைமைகளை மிக அதிகமாக முன்னேற்ற முடியும். பேருவிலுள்ள மனித உரிமைகளுக்கான தேசிய இணைப்பாளர்கள் இதனை பெரிய அளவில் செய்ய முடியும் என நிருபித்துள்ளார்கள்

மனித உரிமைகளுக்கான தேசிய இணைப்பாளர்கள்(Coordinadora Nacional de Derechos Humanos) நிறுவனமானது ஆனாது பேருவிலுள்ள 63 முன்னனி மனித உரிமைகள் குழுக்களின் கூட்டுறவை வைத்துள்ளது. Coordinadora நிறுவனமானது 1985 இல் ஸ்தாபிக்கப்பட்டதுடன், இந்நிறுவனம் தொடர்ந்து இயங்கிவருவதற்கு காரணம் நிறுவன அங்கத்தவர்களை ஒன்று சேர்க்கும் அதனுடைய திறனும், தொடர்ச்சியாக மாற்றங்களுக்கு உட்படுகின்ற அரசியல் சூழ்நிலைமைகளை பின்பற்றுவதுமாகும். நகர மற்றும் கிராமப்புற அங்கத்தவர்களையும் ஒன்றாக இணைத்து நாடுரீயாகவும், சர்வதேசம் ஊடாக குழுக்களின் ஒழுங்கு நிலையை உயர்த்துவதுடன் அதேவேளை பயனுள்ள ஒரு தொடர்பை அரசாங்க அலுவலகத்துடன் வைத்திருப்பதன் மூலம் தனது அதிகாரத்தை அரசியல் விளையாட்டுகளிலும் பங்கு பெறச் செய்துள்ளது.

ஜெனரல் பிரான்ஸ்கோ மொறேலஸ் பெமுயுடாஸின் இராணுவ ஆட்சியை தொடர்ந்து Sendero Luminosco (ஓளிமயமான பாதை) என்கிற ஆயுத போராட்டத்தாலும் மனித உரிமைகளுக்கு சார்பான குழுவினர் அதிகரித்த அளவில் அட்டுழியங்களுக்குட்படுத்தப்பட்டு திணறடிக்கப்பட்டார்கள். 1983 தொடக்கம் 1984 ஆண்டு காலப்பகுதியில் கிட்டத்தட்ட 6000 அதிகமான பெரூ நாட்டவர்கள் அரசியல் வன்முறை காரணமாக தமது உயிரை இழக்க நேரிட்டது.

இந்த கூட்டிணைப்பின் வெற்றியும் பலமும் எண்ணற்ற காரணிகளில் தங்கியுள்ளது. கீழ் குறிப்பிட்டவை உட்பட:

1. **உள்ளக தொழிற்பாடுகளுக்கான தெளிவான கொள்கை**
   இந்த கூட்டிணைவு தனது முதலாவது கூட்டத்திலேயே எல்லாவிதமான மீறல்களையும் புறந்தள்ளுவதென வாக்குறுதி எடுத்துக்கொண்டது. அத்துடன் அரசியல் கட்சிகள் மற்றும் அரசாங்கத்துடன் சுதந்திரமான முறையில் தங்கியிருப்பதுடன், ஜனநாயக சமூகத்துக்கு விசுவாசமாக இருப்பதுடன், மரண தண்டனையையும் எதிர்க்கின்றது. எனினும் நிறுவனம் இந்த மாதிரியான கொள்கைகளை தன்னுடைய கூட்டினைவின் ஒரு பகுதியாக இருப்பதற்கு அனுமதிப்பதில்லை.

2. **பொதுவான தீர்மானங்களுடன் முடிவுகளை எடுத்தல்**
   தீர்மானம் எடுத்தல் செயற்பாடானது ஒரு பொது உடன்பாட்டையும் ஒருங்கமைப்பையும் உருவாக்குகின்றது. எல்லா குழுவினரும் ஒரு ஒப்பந்ததின் அடிப்படையில் இயங்குவர். அதேவேளை கூட்டுணைப்பிலுள்ள குழுக்கள் எல்லாம் வெவ்வேறுபட்ட மட்டங்களில் நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்தவர்களாகவும் இருக்கின்றார்கள். தீர்மானம் எடுத்தல் என்று வருகிற பொழுதும், பொதுச் சபை அங்கத்தவர்கள் தெரிவினால் பொது சபை உருவாகும் பொழுதும், ஒவ்வொருவரும் ஏகோபித்த குரலிலுடையவர்களாக இருக்கின்றார்கள்.

**3. குழுவை பிரதிநிதிப்படுத்தல்**

உள்ளக செயற்பாட்டிற்கான தெரிவு மற்றும் நிறுவனத்திற்கான பிரதிநிதியின் ஒப்பந்தம் போன்றவை அந்த நபருக்கும் அந்த நிறுவனத்திற்கும் உள்ளக மற்றும் வெளியக அதிகாரத்தை கொடுக்கின்றது.யாராவது ஒருவர் அங்கத்துவ நிறுவனங்களால் தெரிவு செய்யப்பட்டு சர்வதேச கூட்டங்களுக்கு பங்குபற்ற அனுப்பப்படும் பொழுது உதாரணமாக பங்குபற்றும் தனிப்பட்ட ஒருவர் குறிப்பிட்ட ஒரு நிறுவனத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதிலும் பார்க்க அவள் அல்லது அவன் Coordinadora ஐ பிரதிநிதிப்படுத்துகிறார்.

**4. முன்னுரிமை கொடுத்து ஒன்றாக இணைந்து ஓப்பந்தத்தை முன்னெடுத்தல்**

இரண்டு வருடத்திற்கு ஒரு முறை அங்கத்துவ நிறுவனங்கள் தேசிய சபையில் ஒன்றுகூடி முக்கிய தலைப்புக்களை தீர்மானித்து கூட்டிணைவாக உரையாற்றுவார்கள். அவர்களுடைய இந்த தலைப்பு தொடர்பான வேலைகள் கூட்டாகவும் தேசிய அளவிலும் நிறைவேற்று அதிகாரமுள்ள செயலாளரால் நிறைவேற்றப்படுவதுடன், தீர்மானங்கள் நிரந்தர கூட்டமைப்பான தேசிய சபையும் பொதுக் கூட்டமைப்பாலும் நிறைவேற்றப்படுகின்றது. நிறைவேற்று செயலாளர் இரண்டு வருட காலத்திற்கு தெரிவு செய்யப்படுவதுடன் கூட்டிணைப்பிற்கான அலுவலக பேச்சாளராகவும் கடமையாற்றுவதுடன் கூட்டங்களை ஒழுங்குமைத்து உதவுவதுடன் அங்கத்தவர்களையும் ஒன்று சேர்கின்றார். Coordinadora வின் செயற்பாட்டு நடவடிக்கைகளானது எனைய தனிப்பட்ட கூட்டுணைவு நிறுவனங்கள் முக்கியத்துவம் கொடுக்கும் பகுதிகளிலிருந்து வேறுபட்டு நிறைவேற்றி வைக்கப்படுகின்றது.

அதன் இணைந்த முயற்சியினால் Coordinadora திறன்மிக்கதாகவும், பயன்பாடுள்ளதாகவும் தேசிய அளவில் மக்களை ஒன்றுசேர்த்து தனிப்பட்ட நிறுவனங்கள் அல்லது தற்காலிக கூட்டுமைப்பிலும் பார்க்க பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. உதாரணமாக முன்னாள் பேருவின் ஜனாதிபதி அல்பேட்டே புயிமொரி உள்ளக அமெரிக்க சட்ட முறையில் பங்குபற்றுவதை பின்வாங்குமாறு அச்சுறுத்தல் விடுக்கப்பட்ட பொழுது Coordinadora ஒரு கிழமைக்குள் மக்களை நாட்டிற்காக ஒன்றுதிரட்டியது.அதன் எல்லா அங்கத்தவர்களும் அறிக்கைகளில் கையொப்பமிட்டு ஜனாதிபதியின் திட்டத்திற்கு எதிராக பாரிய முயற்சிகளை கொண்டு நடாத்தியது அத்துடன் 400ற்கும் மேற்பட்ட நிறுவனங்களை ஒன்று இணைத்து செயற்பட்டது.ஓவ்வொரு நிறுவனங்களும் தமது சொந்த சமூகங்களுக்காக ஆதரவை கட்டியமைத்து சூழ்நிலைக்கெதிராக மக்களை இணைத்து பேச வைக்கும் முயற்சிகளை எடுத்தது. Coordinadora வின் தெளிவான நிலைமை, நம்பிக்கை மற்றும் கட்டமைப்பு போன்றவை இல்லாவிடில் இவை சாத்தியமில்லை. Coordinadora உருவான சூழ்நிலையானது வன்முறை மற்றும் பாரியளவிலான மனித உரிமைகள் துஸ்பிரயோகங்கள் இடம்பெற்ற நேரமாகும். கூட்டுழைப்பு கட்டமைப்பு யுக்தியானது பிரதிகூலமான ஒரு சூழ்நிலையில் அமுலாக்கக் கூடியது என்பதை நீரூபித்துள்ளது. இதுவரை இந்த கூட்டுழைப்பின் உண்மை வெற்றியானது மிக நெருக்கடியான நேரங்களில் மிக அதிகளவில் ஒன்று இணைந்து செயற்படுவதின் அவசியத்திலேயே தங்கியுள்ளது. தெளிவான நோக்கம், உறுதியான வேலைத்திட்டம் மற்றும் கூட்டுறவிற்கான கொள்கைகள் மற்றும் வன்முறைக்கெதிரான உறுதிப்பாடு போன்றவையே நிறுவனத்தை சிறந்த அதிகாரமுள்ளதாக்கியது. இந்த கொள்கைகள் கூட சர்வதேச சமூகத்தின் ஆதரவைப் பெற்றதுடன் கூட்டுழைப்பின் நீண்ட கால வெற்றியை உறுதிப்படுத்த சேவையாற்றியுள்ளது.

**அடுத்த தலைமுறையினருக்கு கல்வியறிவூட்டல்: அரசாங்கத்துடன் ஒன்றிணைவதன் ஊடாக அரசாங்க பாடசாலைகளுக்குள் மனித உரிமைகள் பற்றிய கல்வியை புகுத்துதல்.**

மனித உரிமைகள் கலாசாரத்தை கட்டியமைப்பதற்கு முக்கியத்தவம் வாய்ந்த அமைவிடமாக அரசாங்க பாடசாலைகள் விளங்குகின்றன. அல்பேனியாவிலுள்ள குழுவினர் அரசாங்கத்துடன் இணைந்து தொழிற்படுவதன் மூலம் கம்பூனிச ஆட்சியின் பின்னரான ஜனநாயகம் ஆட்சி பற்றி பிரஜைகளை தயார்படுத்துகின்றது.

அல்பேனியாவின் மனித உரிமைகள் நிலையமானது (ACHR) அல்பேனியாவின் கல்வி அமைச்சுடன் இணைந்து செயற்படுவதன் ஊடாக நாட்டிலுள்ள எல்லா அரசாங்க பாடசாலைகளிலும் மனித உரிமைகள் பற்றிய கல்வியை நடைமுறைக்கு கொண்டு வந்தது. இந்த குழுவானது பொதுவுடமை கொள்கைக்கு பின்னரான நிலைமாற்று காலப்பகுதியில் சில நன்மைகளை பெற்றுக்கொண்டதுடன் புதிய ஜனநாயக அரசாங்க அலுவலர்களுடன் கலந்து பேசி புது முயற்சிகளை மேற்கொள்வதன் ஊடாக நீண்ட கால மற்றும் மேன்மைகளை ஏற்படுத்தக் கூடிய செயற்பாடுகளின் மூலம் அல்பேனியாவின் இளம் பிரஜைகளை ஜனநாயகத்தில் முழுமையாக பங்குபற்ற செய்கின்றது.

1991 இல் 45 வருடகால கொடுங்கோலாட்சி மற்றும் பிறநாடுகளின் விவகாரங்களில் தலையீட முடியாத பொதுவுடமை சர்வாதிகார ஆட்சியின் பின்னர் அல்பெனியா புதிய உலகத்தின் ஜனநாயத்தின் நன்மைகளை எதிர்நோக்கியது. அத்துடன் அதிகளவிலான மரபுரீதியான அரசியல், பொருளாதார சமூக பிரச்சனைகள் மற்றும் நிறுவன கட்டமைப்பு போன்றவற்றின் தயார்படுத்தப்படுத்தப்படாத தன்மைகளையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது. அவர்களுடைய புதிய ஜனநாயகத்தை உருவாக்குவதற்கும், திறனாய்வு வாய்ந்த சிந்தனைகளை தூண்டடுவதற்கும் மற்றும் அரசியலில் பங்குபற்றுவதற்கு ஊக்குவிக்குவிற்பதற்குமான கல்வி முறைமையை பிரஜைகளுக்கு வழங்குவது அல்பேனியா நாட்டவர்களுக்கு அவசியமானதொன்றாக இருந்தது.

ACHR மிக உயர்ந்த ஒரு திட்டத்தின் ஊடாக மனித உரிமைகள் கல்வியினை நாட்டின் எல்லா அரசாங்க பாடசாலைகளின் அலுவலக பாடவிதானத்திலும் இணைத்துள்ளது. இந்த குழுவானது கம்பூனிசிய மாற்றத்திற்கு பின்னராக அளிக்கப்பட்ட ஒப்பற்ற அரசியல் நடவடிக்கையின் போது மனித உரிமைகள் கல்வி திட்டத்தை எல்லா அரசாங்க பாடசாலைகளிலும் நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான நன்மையை பெற்றுக்கொண்டது.

ACHR வழிகாட்டி திட்டங்களை ஸ்தாபிக்க ஆரம்பித்தது. அதிகளவிலான பயிற்சி நெறிகளை பல்வேறுபட்ட குழுக்களை சேர்ந்த ஆசிரியர்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்ததுடன் அல்பேனிய வகுப்புக்களில் சர்வதேச மனித உரிமைகள் கல்வி ஆவணங்களை பின்பற்றுவதுடன் செயற்பாட்டு புத்தகங்களை ஒவ்வொரு தரமட்டத்திலும் அபிவிருத்தி செய்கின்றது.

தசாப்தகால முடிவின் பின்னர் சிறப்பான ஒரு பாடவிதானப் பகுதியை எல்லா பாடங்களிலும் எல்லா வயது பிரிவினருக்காகவும் அபிவிருத்தி செய்துள்ளது. அத்துடன் ஆயிரத்திற்கும் அதிகமான ஆசிரியர்களை பாடவிதானத்தை பயன்படுத்துவதற்கு பயிற்சியளித்துடன் 42 வழிகாட்டி பாடசாலைகளை நாட்டிலே நிறுவி அதன் ஊடாக ஆசிரியர் கல்லூரிகளில் பாடவிதானமொன்றை தொடக்கி வைத்துளளது. அத்துடன் மனித உரிமைகளை அவர்களின் முன்னேற்பாடுகளுக்கேற்ப கற்பித்தலில் இணைத்துள்ளது.

ACHR ஆனாது அல்பேனியாவிற்காக ஒரு உயர்வான தூர நோக்கை கொண்டு இருந்ததுடன் தூர நோக்கை உண்மையாக மாற்றுவதற்காக அரசியல் நன்மைகளை பயன்படுத்தியது.

அரசாங்கம் மாற்றத்திலிருந்ததுடன் சர்வதேச சமூகத்திற்கு மனித உரிமைகள் பற்றிய தமது அர்ப்பணிப்பை காட்டுவதற்கும் விருப்பம் கொண்டது. ( அல்பேனியா 1993 இல் சிறுவர் உரிமைகள் பிரகடனத்தை உறுதி செய்தது.) ACHR யினாது அரசாங்கத்திற்கு பிரகடனத்தின் கீழ் அதன் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கான பங்களிப்பு மற்றும் உதவிகளை பரிந்துரை செய்வதுடன் இந்த வகையில் அதன் கூட்டுறவையும் பாதுகாக்கின்றது. அத்துடன் சர்வதேச ஆதரவு மற்றும் கல்விசார் விற்பன்னர்களை கொண்டு வருவதன் ஊடாக தனது இயக்க ஆற்றலை மெய்பித்து வருகின்றது.

**கிராமப்புறங்களும் சட்ட ஒழுங்கு முறைகளை பெற்றுக் கொள்ள வழிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்: மனித உரிமைகளுக்கான சாதனங்களாகவும் மத்யஸ்த்தர்களாகவும் உள்ளூர் தலைவர்களை பயிற்றுவித்தல் .**

சட்ட ஒழுங்கு முறைகளை அணுகுதல் மற்றும் பிரச்சனைகளுக்கான தீர்வை பெற்றுக் கொள்ளும் சேவைகளானது பல கிராமப்புறங்களிலும், மாகாண பிரதேசங்களிலும் மிகவும் வரையறுக்கப்பட்டதாகவுள்ளது. இவற்றை மாற்றி அமைப்பதற்காக உகண்டாவில் உள்ள குழுவொன்று மத்யஸ்த்தம் செய்வதற்கான திறன்களை உள்ளூர் மக்களுக்கு பயிற்றுவித்து வருகின்றது.

உகண்டாவிலுள்ள மனித உரிமைகள் திட்டங்களுக்கான மன்றம்(IFHRI) உள்ளூர் தலைவர்களுக்கு பிரச்சனைகளையும், ஏமாற்றங்களையும் தவிர்ப்பதற்கான வழிவகைகளை முறையான நீதி ஒழுங்கு முறைகள் மூலம் பயிற்றுவிப்பதன் வாயிலாக சட்டரீதியான குற்றச்சாட்டுக்களுடன் வரும் சமூக அங்கத்தவர்களுக்கு உதவி செய்து வருகின்றது. இத் தலைவர்களுக்கு எவ்வாறு அவருடைய சமுகத்தவர்களுக்கு அவர்களின் அரசியலமைப்பு மற்றும் மனித உரிமைகள் தொடர்பாக அறிவூட்ட வேண்டும் என்பதை IFHRI கற்பிக்கின்றது.இது துணைச்சட்டத் திறனையும், மத்யஸ்த்தம் செய்வதற்கான அதிகாரம், மற்றும் ஆலோசனைகள், அறிவுரைகள் போன்றவற்றை அவர்களுக்கு வழங்குவதால் பிரஜைகள் முழுமையாக தமது மனித உரிமைகளை அனுபவிப்பதுடன் துஸ்பிரயோகத்திற்கான பரிகாரங்களைப் பெற்றுக்கொள்ளமுடிகின்றது.

உகண்டாவின் கிராமப்புறங்களில் வசிக்கின்ற பெரும்பாலான மக்கள் தமது அரசியலைமைப்பு சட்டத்தை பற்றி முழுமையாக அறியாதவர்களாக இருப்பது மட்டுமல்லாமல் தமது உரிமைகள் மீறல்களுக்கு உட்படும் பொழுது என்ன செய்யவேண்டும் என்பது கூட தெரியாதவர்களாக இருக்கின்றார்கள்.சட்ட ஒழுங்கு முறைகள் நகரப்புறங்களில் நிர்வகிக்கப்பட்டு வருவதுடன், செலவு மிக உயர்வானதாகவும், பழக்கமில்லாதா பாஷைகளையும், நடவடிக்கைகளையும் கொண்டதாக காணப்படுவதால் அவற்றை பெற்றுக்கொள்ளதல் கடினமானதொன்றாக உணர்கின்றனர்.

இப்பயிற்சி நெறியில் பங்குபற்றக் கூடியவர்களாக முன்மாதிரியான தலைமைத்துவ பண்புகளுடையவர்களையும், பிரபலமுடைய நபர்களையுமே IFHRI ஆனாது தெரிவுசெய்கின்றது.உதாரணமாக ஆசிரியர்கள், வியாபாரத் தலைவர்கள், சமூகத்தின் மூத்த பிரஜைகள், மருத்துவ சேவையாளர்கள் போன்றவர்களைக் குறிப்பிடலாம். இப்பயிற்சியானது தொடர்பாடல் வலையமைப்பை உருவாக்குவதற்கான வழிமுறைகள், கலந்துரையாடல் முறைகள், சட்டச் செயற்பாடுகள் போன்ற ஒரு கிழமைக்கும் அதிகமான பாடத்திட்டங்களை கொண்டுள்ளது.அது மட்டுமின்றி பங்குபற்றுபவர்களுக்கு மனித உரிமைகளுக்கான துஷ்பிரயோககளை கண்காணிப்பதற்கும், ஆவணப்படுத்துவதற்கும், அறிக்கைகளை தாயாரிப்பதற்கு அவசியமான திறன்களையும் வழங்குகின்றது. இதன்பின்னர் தொண்டர்கள் சிலர் சமூகத்தின் சில குழுக்களுக்கு பொறுப்புடையவர்களாகின்றார்கள். உதாரணமாக பெண்கள், சிறுவர்கள், முதியோர்கள் மற்றும் எனையவர்கள் ஆவார்.

பயிற்சி நெறி முடிவடைந்த பின்னர் இந்த துணைச்சட்ட தொண்டர்கள் கலந்துரையாடல் நிலையங்களை அமைப்பதன் மூலம் சமூதாயத்திற்கு ஏற்ற வகையில் பிரச்சனைகளை தீர்த்து வைக்க முனைகின்றனர். இது மாற்றுவழியிலான தீர்வுகளை ஊக்குவிக்கின்றது. உதாரணமாக ஆலோசனைகள், மத்யஸ்த்தம் மற்றும் செயற்பாட்டிலிருக்கும் நிறுவனங்களுக்கு சிபாரிசுகளையும், ஆவண வடிவிலான ஆலோசனைகளையும் பெற்றுக்கொடுகின்றது. எனவே மக்கள் நீதி ஒழுங்கு முறைகளால் உண்டாகும் சாவல்களையும், செலவுகளையும் தவிர்த்துக்கொள்ள முடிகின்றது.

IFHRI 1000ற்கும் மேற்பட்ட துணைசட்ட தொண்டர்களை பயிற்றுவித்ததுடன் *துணைச்சட்ட ஆலோசனைகள்* என்கிற கையெடு ஒன்றையும் பிரசுரித்துள்ளது.(இதனை IFHRI நிறுவனத்திடம் பெற்றுக்கொள்ளமுடியும்).

இந்த யுக்தியானது நீதியை அணுகும் தன்மையை அதிகரித்துள்ளது. சமூகத்திற்கு வெளியிலிருந்தே அதிக பட்சமான மனித உரிமைகளுக்கான அழைப்பு வருகின்றது. அத்துடன் இந்த உரிமைகளுக்கான உள்ளூர் ஆதரவையும் இது அதிகரித்துள்ளது. (தாய்லாந்திலுள்ள Thongbai Thongpao Foundation (TTF) யானது கிராமவாசிகளுக்கு சட்ட கல்வியை கொண்டு வருகின்றது. ஆனாலும் சமூகத்தலைவர்களிலும் பார்க்க சட்டத்தின் சேவைகள் அவசியப்படுகின்ற சமூக அங்கத்தவர்களை இலக்காக வைத்தே பயிற்சிகளை வழங்குகின்றது). IFHRI's வேறுமாதிரியான ஒரு சூழ்நிலையை கடைப்பிடிக்கின்றது அதாவது சட்டத்தின் உதவி தேவைப்படும் மக்களை தேர்வாக கொள்ளாமல் விருப்பத்துடன் பங்கேற்று பங்களிப்புச் செய்ய வருகின்ற சமூகத்தலைவர்களை தெரிவாக கொள்கிறது.

வெளியிலிருந்து இனங்கணப்பட்ட தலைவர்கள் தங்களுடைய சமூகத்தில் உண்மையான, நம்பிக்கையான அதிகாரமுடையவர்களாகவும், தங்களுக்கு வழங்கப்பட்ட புதிய மத்தியஸ்த்த திறன்களை பயன்படுத்தக்கூடியவர்களாக இருப்பதன் உறுதிப்பாட்டிலேயே இந்த யுக்தியின் வெற்றியானது தங்கியுள்ளது. அத்துடன் இக்குறுங்கால பயிற்சியில் நீண்டகால தொடர் செயல் நடவடிக்கை மற்றும் ஆதரவு போன்றவற்றை சேர்த்துக்கொள்ளுதலும் அவசியமாகும்.

**இந்த மாதிரியான யுக்தி உங்களுடைய சமூகத்திற்கு தேவைப்படுகின்றதா?**
**உள்ளூர் தலைவர்கள் யாரால் இந்த பயிற்சியை பெற்றுக்கொண்டு இந்த யுக்தியை தொடர்ந்து நடாத்திச் செல்ல முடியும்?**

**மனித உரிமைகளுக்காக போராடுபவர்கள் மேலும் ஊக்கத்துடன் செயற்படுவதற்கு உதவுதல்.: மனித உரிமைகளுக்காக போராடுபவர்கள் செயல்திறனுடன் தொழிலாற்றுவதற்கு தகவல் நிபுணர்களையும், முறைமைகளையும் பயன்படுத்தல்**

மனித உரிமைகளை நடைமுறைப்படுத்துபவர்கள் நிறுவன பலப்படுத்தல் என்னும் யுக்தியின் ஊடாக புதிய திறன்கள், தொழிநுட்பம் அல்லது நிறுவன முறைமை எனப்படும் நன்மைகளை அடிக்கடி பெற்றுக்கொள்கின்றார்கள்.

சரேஜுவோ பல்கலைக்கழகத்தின் மனித உரிமைகள் நிலையமானது மனித உரிமைகளை ஆதரிப்பவர்களுக்கான தகவல் அணுகு முறையை முன்னேற்றுவதில் கவனம் செலுத்தி வருகின்றது. பலம் மிக்க தகவல் முறைமையை அலுவலக அங்கத்தவர்களுக்காக கட்டியெழுப்பியுள்ளதுடன் தகவல் நிபுணருக்கு முக்கிய பங்கையும் வழங்கியுள்ளது. இந்த முறைமையின் பயன்பாடும், நிபுணத்துவரின் திறனும் எனைய அலுவலகர்களை அதிக வினைத்திறனுடன் சிறப்பாக தொழிற்பட அனுமதிப்பதுடன் அவர்களுடைய வேலைத்திட்ட இலக்குகளின் மையத்தில் அதிக கவனம் செலுத்த முடிகின்றது.

மனித உரிமைகள் ஸ்தாபனங்களுக்குள் ஒரு நூலகத்தை அல்லது ஆவணப்படுத்தல் நிலையத்தை ஸ்தாபித்தல் ஆனாது கடமையாற்றும் ஊழியர்களுக்கு உதவியாக இருப்பதுடன் தகவல் சுற்றோட்டம், நம்பகமான ஆவணங்களை கையாளுதல், நிறுவன வரலாறு மற்றும் நாளாந்த நடவடிக்கைகளை செம்மைப்படுத்தல் போன்றவற்றை இலகுபடுத்துகின்றது. இந்த யுக்தியின் முக்கிய பகுதிகளாக உள்ளடக்கப்படுவன திறன்மிக்க நூலகர் அல்லது தகவல் நிபுணரின் பங்களிப்பு, ஒழுங்கமைக்கப்பட்ட பௌதீக இடம், முக்கியமான ஆவணங்களின் சேர்க்கைகள் பொறுத்தமான மென்பொருள் மற்றும் எனைய தகவல் தொழிநுட்பங்கள் போன்றனவாகும்.

மனித உரிமைகள் நிறுவனங்களுக்கு வழங்குவதற்கென மனித உரிமைகளுடன் தொடர்புபட்ட நூலகர்களிடம் சிறப்பான திறமைகள் உள்ளது. அவையாவன தொழிநுட்பம் பற்றிய அறிவு, மனித உரிமைகள் பற்றிய தகவல்கள் மற்றும் ஆவணங்களை் அவை உள்ளடக்குகின்றன. நூலகரின் பங்கானது நிறுவன வேலைத்திட்டங்களுக்கு பொருத்தமான ஆவணங்களை தேடிப்பெறுதல், மதிப்பாய்வு செய்தல், போதிய பயன்பாட்டை பெறும் வகையில் ஒழுங்குபடுத்தல், நிறுவனத்திற்குள் பகிர்ந்தளித்தல். இறுதியான பங்களிப்பாக முதன்மையான தகவல்களை வகைப்படுத்த ஊழியர்களுடன் நேரடியாக தொடர்புபட்டு கடமை புரிதலாகும்.

ஆவணங்களை ஒழுங்குபடுத்துவதற்கு போதிய இடமும், ஊழியர்களுக்கிடையில் தொடர்பாடலும் மிக அவசியமான ஒன்றாக இருக்கின்றது. குறைந்த பட்சம் ஒரு ஆவணப்படுத்தல் நிலையமானது ஒரு நூலக அலுவலகத்ததுக்கு தேவையான அளவு இடத்தையும், உள்ளக வலையமைப்பை உடைய கணனியையும், கோப்புகளை ஒன்றாக வைப்பதற்கான ரக்கைகளை உள்ளடக்கியதாக இருக்கவேண்டும். முக்கியமான நூல்களின் சேர்க்கைகளும் வளங்களும், நிறுவனத்தின் அளவிற்கும் அதனது வேலைத்திட்டங்களுக்கும் சார்பானதாகவும் இருக்க வேண்டும். பொதுவாக நிறுவனமானது தனது எதிர்கால, நிகழ்கால திட்டங்களுக்கு பொருத்தமான தகவல்களையும் உள்ளடக்க முயலவேண்டும்.

இறுதியாக, செயல்திறன்மிக்க ஆவணப்படுத்தல் நிலையமானது பொறுத்தமான மென்பொருட்களை கொண்டிருப்பதுடன்(பட்டியலாக்கத்திற்கான, பகுப்பாக்கங்கள், சுட்டிகள் போன்ற எனையவைகள்) நூலகர் தகவலை தங்குதடையின்றி இலகுவில் பெற்றுக் கொள்ளக் கூடிய வகையில் இணையத்தள இணைப்பை ஏற்படுத்திக் கொடுத்தல அவசியமாகும்.

இது பற்றி மேலும் அறிவதற்கு இவ்யுக்தி பற்றிய சிறுகையேடு எமது இணையத்தளமான www.newtactics.org யில் செயற்பாடுகளுக்கான கருவிகளின் கீழ் தரப்பட்டுள்ளது.

சரஜுவோவிலுள்ள மனித உரிமைகள் நிலையத்தில் கடமையாற்றும் நூலகர்கள் மனித உரிமைகளுக்காக போராடுபவர்கள் தங்களுக்கு தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளும் போது நேரத்தையும், சக்தியையும் வீண்விரயம் செய்யமால் சிறந்த முறையில் பெற்றுக்கொள்வதில் கூடிய கவனம் செலுத்துகின்றனர். இந்த நிலையமானது ஒரளவு பெரியதும், நல்ல நிதி வளமுள்ள ஒரு நிறுவனமெனினும் அநேகமான மனித உரிமைகளின் வேலையானது சரியான நேரத்தில் பூரணமான சரியான தகவலை வழங்குவதிலேயே தங்கியுள்ளது. நிறுவனத்தில் அவசியமான வளம் இருக்கின்ற பொழுது பகுதி நேர ஊழியரோ அல்லது அர்ப்பணிப்புள்ள தொண்டரேனினும் அந்த தகவலை அணுகுவதற்கு தகவல் நிலையம் உதவி செய்கின்றது. நிறுவனத்தாலும் அவ்நிறுவன ஊழியர்களாலும் தமது இலக்குகளுக்கு இரண்டராம் தரமான கடமைகளாக கருதிய வேலைகளை நூலகர் அல்லது தகவல் நிபுணர் தங்களாகவே முன்வந்து தூண்டுதல் யுக்தியின் மூலம் அவைகளும் முக்கியமான கடமைகள் என நம்பச் செய்தல்.

***மனித உரிமைகள் நிலையத்தின் யுக்தியை மீளவும் கொண்டுவருவதுமட்டுமல்ல அதனுடைய பயன்பாடு பற்றியும் எனக்கு தெரியும். இதற்காக நான் பலமணிநேரங்களை நிர்வாக அலுவலர்கருடன் செலவிட்டு உள்ளேன. ஒழுங்கற்று கிடந்த நூலகத்தை சரியான வழியில் ஸ்தாபிப்பதற்கு கொண்டுவருவதற்கு மூன்று மாதங்கள் பிடித்தது. அது ஒரு மிகப்பெரிய வேலை கோடை காலம் முழுவதும் தொழிற் புரிந்தோம். எனக்கு அது மிகப் பெரிய உதவியை செய்தது.***

***—பியா பொட்ரொகி, NEKI, Hungary***

**சித்திரவதைகள் பற்றியதான பதிவுகளை ஆவணப்படுத்தல்: துறைசார் நிபுணர்கள் வலையமைப்பை உருவாக்குதன் மூலம் சித்திரவதைகள் பற்றியதான பதிவுகளை ஆவணப்படுத்தலும், பாதிப்பிற்குட்பட்டவர்களை ஆதரித்தலும்.**

கென்யன் குழுவானது சட்டத்தை அமுல்படுத்தும் ஸ்தாபனங்களால் இழைக்கப்படுகின்ற மனித உரிமைகள் மீறல்களை வெளிக்கொண்டு வருவதை நோக்கமாவும் மற்றும் சித்திரவதைகளை குறைப்பது தொடர்பான விழிப்புணர்வை அதிகரிப்பதற்காகவும் வைத்தியர்களையும் சட்டத்தரணிகளையும் இணைக்கின்றது.

சுயாதீனா வைத்திய சட்ட பிரிவு(IMLU) ஆனாது சட்டத்தரணிகள் மற்றும் வைத்தியர்களின் வலையமைப்பை கொண்ட ஒரு பதிவு செய்யப்பட்ட அரசசார்பற்ற நிறுவனமாக இருப்பதுடன் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் தமது சேவையை வழங்குகின்றது. அவர்களுடைய சேவைகளில் உள்ளடங்குவனவாக சட்டத்தை அமுல்படுத்தும் ஸ்தாபனங்களால் மேற்கொள்ளப்பட்ட சந்தேகத்தை தரக்கூடிய மரணங்களை சுதந்திரமான முறையில் பிரேத பரிசோதனைகளுக்கு உட்படுத்தல், சித்திரவதையுடன் தொடர்பட்ட சந்தேகத்திற்குரிய வழக்குகளை ஆவணப்படுத்தல், சித்திரவதையிலிருந்து தப்பிப்பிழைத்தவர்களுக்கும் மற்றும் கைதிகளுக்கும் சட்ட வைத்திய உதவிகளை வழங்குதல் போன்றனவாகும்.

IMLU முதலில் தனது வலையமை ஒழுங்கமைப்பதனூடாக துறைசார் செயற்குழுவின் ஆதரவை உருவாக்கியது.அதன் பெயர் கென்யாவின் வைத்திய சங்கங்களின் மனித உரிமைகளுக்கான கண்ணியமான செயற்பாட்டுக்குழு என்பதாகும். அது குறிப்பாக கருணையுள்ளங்கொண்ட சட்டத்தரணிகள் குழுவானது சித்திரவதைகளை முடிவுக்கு கொண்டு வருவதற்கான முயற்சி ஈடுபட்டது. இந்த செயற்பாட்டுக்குழு ஆரம்பிக்கப்பட்டவுடன் IMLU அபிவிருத்தி செய்யப்பட்ட தொடர்ச்சியான பயிற்சிப்பட்டறைகளை நடாத்தி வருவதன் மூலம் சித்திரவதைகள் தொடர்பாக கடமையாற்றி மருத்துவ சேவையாளர்களையும் சட்டத்தரணிகளின் ஆற்றலை பலப்படுத்தியது.இந்த பயிற்சிப்பட்டறையியானது நாடு முழுவதும் நடாத்தப்பட்டு வருவதுடன் இதன் தலைப்புகளாக மனித உரிமைகளின் முக்கியத்துவம், கைதிகள் திணைக்களத்துடன் தொடர்புகளை ஏற்படுத்தல் மற்றும் துறைசார் நிபுணர்களுக்கும் அரசாங்க அலுவலர்களுக்கும் மனித உரிமைகளுக்கான சட்டங்கள் மற்றும் வன்முறை தொடர்பாக கல்வியறிவூட்டுதல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

சித்திரவதைகளால் பாதிக்கப்பட்டவர்களையும் அவர்களுடைய குடும்பங்களையும் தொடர்பு கொள்ளுவதற்கான IMLU தமது வலையமைப்பை பல்வேறுபட்ட சமய குழுக்கள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள், மற்றும் கென்யாவிலுள்ள அரசசார்பற்ற நிறுவனங்கள் போன்றவற்றுடன் ஏற்படுத்தியுள்ளது. குறிக்கப்பட்ட கட்சிக்காரர் குடும்ப அங்கத்தவர்கள் சார்பாக பிரேத பரிசோதனை தொடர்பாக விண்ணப்பிக்கும் பொழுது அதன் முடிவுகள் சட்ட மற்றும் வைத்திய வழிமுறைகளுக்கேற்ப கவனமாக ஆவணப்படுத்தப்படுகின்றது.

IMLU ஆனாது சித்திரவதைக்கான சாட்சியங்கள் கண்டுபிடிக்கப்பட்டவுடன் கட்சிக்காரர்கள் சட்ட பரிகாரங்களை தேடிக்கொள்வதற்கு ஊக்குவிக்கின்றது. சட்ட உதவிகளை பெற்றுக்கொள்ள முடியாத கட்சிக்காரர்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகளை வழங்குகின்ற சட்டத்தரணிகளின் வலையமைப்பிற்கும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் வழிகாட்டி விடுகின்றது. இதன் இலக்காக பொது மக்கள் ஆர்வத்தை துாண்டும் வழக்குகளாக மாற்றிவதன் ஊடாக சித்திரவதைகளைக் குறைப்பதற்கான எடுத்துக்காட்டுக்களாக பயன்படுத்துவதுடன், சித்திரவதைகளை மேற்கொண்ட குற்றவாளிகளுக்கு ஒரு செய்தியையும் வழங்குகின்றது.

IMLU வின் தொடர்ச்சியான முயற்சி காரணமாக கென்யாவில் இடம்பெற்ற சித்திரவதைகளை வெளிக்கொணரமுடிந்ததுடன், பல்வேறுபட்ட வழக்குகளை நீதி மன்றங்களுக்கு எடுத்துச் செல்லக் கூடியதாக இருந்ததுடன் கைதிகளுக்கான நல்வாழ்வு மற்றும் சிகிச்சை தொடர்பான அக்கறையும் அதிகரித்தது. சிறைக்கூட அதிகாரிகள் சித்திரவதைகள் மற்றும் உடல் ரீதியான தண்டனைகளை குறைப்பதன் ஊடாக சிறந்த சிறைச்சாலையாக எடுத்துக்காட்டுவதில் கவனம் செலுத்து வருகின்றார்கள். மேலும் 2002 இறுதியில் புதிய அரசாங்கம் வந்த நாள் முதல் பெருமளவிலான அரசாங்க பொதுப்பணியாளர்கள் அவர்களின் சொந்த மனித உரிமைகளுக்கான செயற்பாடுகளை முன்னேற்ற IMLU வுடன் இணைந்து பணியாற்றத் தொடங்கினார்கள்.

IMLU ஆனாது துறைசார் நிபுணர்களின் வலையமைப்பையும் பயிற்றப்பட்ட அங்கத்தவர்களையும் இணைத்து சித்திரவதைகளை ஆவணப்படுத்துவதன் ஊடாக கென்யாவில் இடம்பெற்ற சித்திரவதைகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரித்தன் பயனாக அவற்றை தடுப்பதற்காக அதிகாரிகாரிகளுக்கு கூடிய அழுத்தங்கள் கொடுக்கப்பட்டது. அத்துடன் வலையமைப்பானது ஆர்வமுள்ள சில வைத்தியர்கள் மற்றும் சட்டத்தரணிகளை ஒன்று திரட்டுவதன் ஊடாக அவர்களுடைய திறன்களை பயன்படுத்தி மனித உரிமைகளை முன்னேற்றுவதுடன், நாடுமுழுவதுமான ஆதரவைப் பலப்படுத்தி சித்திரவதைகளை முடிவுக்கு கொண்டு வர உதவுகிறது..

இந்த வேலைகளை எப்படியும் சாவல்கள் இன்றி செய்துமுடிக்க முடியாது. IMLU ஆனாது அதனுடைய நிதி நிலைமைக்கு அதிகமான கேள்வி அவர்களுடைய பாதிக்கப்பட்டவர்களுகான சேவைக்கு உள்ளது. அத்துடன் கென்யாவின் கிராமப்புறங்களில் வசிக்கும் பாதிக்கப்பட்டவர்கள் அடிக்கடி பிந்தியதான மறுமொழிகளையே சட்டத்தரணிகளிடம் இருந்து பெறமுடிகின்றது.இதற்கு காரணம் சட்டத்தரணிகளில் அநேகர் நைரோபியில் வசிப்பதாலேயாகும். IMLU ஆனாது பிரேத பரிசோதனைகளை ஆவணப்படுத்தல் முயற்சிகளில் ஈடுபடும் பொழுது பொலீசாரின் தலையீடு மற்றும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.இந்த மாதிரியான வழக்குகளின் போது வலையமைப்பிலுள்ளவர்கள் எனைய அரசசார்பற்ற நிறவனங்களுடன் இணைந்து பத்திரிகைகளில் அறிக்கைகளை விடுவதன் மூலம் இந்த பிரச்சனைக்கு அதி முக்கியத்துவம் கொடுப்பதுடன், தலையீடு தொடர்பாக கண்டங்களை தெரிவிப்பதுடன் பொலீசாருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளையும் எடுக்கின்றது

**கிராமப்புறங்களுக்கும் சட்டக்கல்வி: கிராமப்புறத்திலுள்ளவர்களுக்கு அவர்களுடைய உரிமைகள் தொடர்பாக கல்வியறிவூட்டலும், அவர்களுடைய உரிமைகளை பாதுகாத்து கொள்வதற்காக சட்டத்தரணிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்தலும்.**

கலாசாரத்தால் அல்லது சம்பிரதாயத்தால் பூகோள ரீதியில் கைவிடப்பட்ட சமூகங்கள் அவர்களுடைய உரிமைகளின் பூரணமான நன்மைகளை பெற்று கொள்வதற்கு போதிய கல்வியறிவின்மை மிகப் பெரிய தடையாகவுள்ளது. தாய்லாந்திலுள்ள ஒரு அமைப்பானது சிறு கேலிக் கூத்துக்கள் மற்றும் கருத்தரங்குகளை ஏற்பாடு செய்வதன் ஊடாக சட்ட ஒழுங்கு முறைகளை அணுகுவதற்கான ஒரு சமூதாயக் கல்வியை வழங்குவதனுாடாக மக்களுக்கு தமது உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் செயற்திறன் மிக்க வகையில் தமது உரிமைகளை பயன்படுத்துவதற்கான உறுதிப்பாட்டையும் வழங்குகின்றது.

கிராமத்தின் வதிவிட வாசிகளுக்கு இலவச சட்ட உதவிகளுடன், அடிப்படை மனித உரிமைகள் மற்றும் நாளாந்த வாழ்வில் அவர்களுக்கு ஏற்படும் சட்டப்பிரச்சனைகள் தொடர்புபட்ட பயிற்சிகளையும் தாய்லாந்திலுள்ள Thongbai Thongpao Foundation (TTF) அமைப்பு வழங்கி வருகின்றது. 1990 களில் தாய்லாந்து உயர் பொருளாதார வளர்ச்சியுடையதாக இருந்ததுடன் முக்கிய நகரங்களில் மாத்திரமே அதி உயர் வாழ்க்கை தரம் நிலைகொண்டிருந்தது. அதேவேளை கிராமிய சனத்தொகையானது பொருளாதாரரீதியாக பின்தங்கியிருந்ததுடன் நவீன தாய்லாந்து சட்டத்தின் உரிமைகளின் செயற்பாட்டின் உறுதி தொடர்பாக சிறிதளவான விழிப்புணர்வை மாத்திரமே பெற்றிருந்தனர். இதனால் இவர்கள் எளிதில் பாதிப்புக்குட்பட்டதுடன் நேர்மையற்றவர்களாலும் பணம் பறிப்பவர்களாலும் சுரண்டலுக்குட்படுத்தப்பட்டனர்.

TTF அமைப்பின் கிராமப்புறத்தவர்களுக்கான சட்டக் கற்கை நெறியானது ஆசிரியர்கள், மாணவர்கள், சமூகத்தலைவர்கள், ஏழை விவசாயிகள் மற்றும் பெண்களை இலக்காக கொண்டு நடாத்தப்படுகின்றது. வழமையாக அரசாங்க அலுவலர்களால் பிரச்சனைகளை எதிர்நோக்கும் கிராமப்புறத்தவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவே TTF அலுவலர்களும் சட்டத்தரணிகளுக்கான தொண்டர் குழுக்களும் வார இறுதியில் பயிற்சிபட்டறைகளில் பயிற்சிகளை வழங்கி வருகிறது. இரண்டு நாட்களுக்கும் அதிகமான ஒரு முழுமையான பயிற்சியின் ஊடாக அரசியலைமைப்பு சட்டம், மனித உரிமைகள், திருமணங்கள், கடன்கள், அடமானம், தொழிலாளர் சட்டம் மற்றும் அவர்களுடன் தொடர்பட்ட ஏனைய சட்டப் பிரச்சனைகள் போன்றன தொடர்பாக பங்குபற்றுபவர்களுக்கு கற்பிக்கப்படுகின்றது. கலந்துரையாடப்படுதலும் கற்பித்தலும் நாடகபாங்கிலமைந்த நீதிமன்ற வழக்குகளுடன் பூர்த்தி செய்யப்படுகின்றது.

பங்கு பற்றிய ஒவ்வொருவரும் கற்கைநெறியின் முடிவில் தமது தனிப்பட்ட சட்டத்தரணியின் பெயர், கையெழுத்து, புகைப்படம் அடங்கிய அடையாள அட்டைகளை பெற்றுக்கொள்வர். அட்டையின் பின்புறத்தில் சந்தேகத்திற்குள்ளான நபர் ஒருவருக்குரிய உரிமைகள் பட்டியல்படுத்தப்பட்டுள்ளது. அவையாவன மௌனமாக இருப்பதற்கான உரிமை, சட்ட உதவிகள், பிணைக்கு பின்னரான உரிமைகள், அவர்களுக்கெதிராக சுமத்தப்பட்ட குற்றம் தொடர்பாக அறிந்து கொள்ளும் உரிமை போன்றனவாகும். இத்திட்டத்தின் இறுதியில் ஐந்து அல்லது எழு பேர் கொண்ட உள்ளூர் துணைசட்ட செயலக்குழுவை கிராமத்தில் நியமிப்பதன் மூலம் மனித உரிமைகளுக்கான தரம் பின்பற்றப்படுகின்றதா என்பதையும், கற்கைநெறிகளை ஒழுங்கு செய்து கொடுப்பதற்கான உதவியும் செய்து வழங்கப்பகின்றது.

தொலைதுார கொள்கை ரீதியான எண்ணக்கருக்களிலும் பார்க்க TTF ஆல் கிராமத்தவர்களுக்கு கற்பிக்கப்படுகின்ற நடைமுறைப்படுத்த கூடிய தகவல்கள், மற்றும் செயற்திறன்களை பயன்படுத்துவதன் மூலம் தமது உரிமைகளை உறுதிப்படுத்திக்கொள்ள முடிகின்றது.

ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுகின்ற வியாபார அட்டையின் மதிப்பை தரக்குறைவாக எண்ணிவிடக் கூடாது. துஸ்பிரயோகம் நடைபெறும் பொழுது யாரோ ஒருவரை அழைப்பதனால் உளரீதியான ஊக்கத்தை மட்டுமல்லாது யாரேனும் ஒருவர் எமது உரிமைகளை பறிப்பதை முதலிலேயே முற்றாக தடுக்க உதவுகின்றது.

இந்த யுக்தியானது உலகத்தில் காணப்படுகின்ற கிராமங்கள் அனைத்திலும் அல்லது கைவிடப்பட்ட பிரதேசங்களில் தமது உரிமைகள் பற்றி அறியமாலும் நீதி முறைமைகளை அணுக வலுவற்றவர்களாகவும் வாழ்ந்து வருகின்ற மக்களுக்கு பெறுமதிமிக்க ஒன்றாகக் காணப்படுகின்றது. இது துஸ்பிரயோகத்திற்கு உள்ளனாவர்களுக்கு பொறுத்தமான பரிகாரத்தை சட்டநடவடிக்கைகள் மூலம் வழங்குகின்றது. இதை ஒத்ததான யுக்தியானது உகண்டாவிலுள்ள பின்தங்கிய பிரதேசத்திலுள்ள மக்களுக்கு அவர்களுடைய உரிமைகளை அடைவதற்கான மத்தியஸ்த்த வழிமுறைகளை கற்றுக்கொடுகின்றது.

**மக்கள் தமது உரிமைகளை அனுபவிப்பதற்கும், பாதுகாப்பதற்கும் பயன்படக்கூடிய எனைய *அடையாள சக்திகள்* (இவ் உதாரணத்தில் குறிப்பிடப்பட்ட வியாபார அட்டை போல) என்ன?**

**சமூக நீதியினை அறிவதற்கான புதிய வழி முறை : நிறுவனங்களை பயிற்றுவிப்பதன் ஊடாக அவர்களின் சமூக நியாயங்களுக்கான வேலைகளை மனித உரிமைகளுடன் தொடர்புபட்டதாக மாற்றுவதுடன் அதன் மூலம் புதிய நுட்பங்கள் மற்றும் புதிய நேச உடன்பாடுகளை அணுகக் கூடியவாறு ஆதரவு வழங்குதல்.**

அபிவிருத்தியடைந்த நாடுகளிலுள்ள அநேகமான மக்கள் "மனித உரிமைகள்" என்ற சொற்பதத்தை உலகத்தின் அபிவிருத்தியுடன் தொடர்பு படுத்தியே பார்ப்பதுடன், மனித உரிமைகள் பற்றிய எண்ணக்கருக்கள் மற்றும் சிந்தனைகள் அலட்சியப்படுத்தப்பட்டவொன்றாகவும் பரிட்சயமற்றதாகவுமே காணப்படுகின்றது. இத்தகைய மனோபாவமானது பாதிப்பை தரக் கூடிய திருப்தி என்னும் தன்மையை ஏற்படுத்துகின்றது. ஐக்கிய அமெரிக்காவிலுள்ள ஒரு குழுவானது இந்நிலைமையை ஒழிக்க போராடி வருகின்றது.

மனித உரிமைகள் கல்விக்கான தேசிய நிலையமானது (NCHRE)அமெரிக்காவிலுள்ள நிறுவனங்களுக்கு பயிற்சியை வழங்குகின்றது. சமூக நீதி விடயங்களை மனித உரிமைகள் விடயங்களாக இணைத்து வெளியிடுகின்றது. அதேவேளை அமெரிக்காவிலுள்ள பல நிறுவனங்கள் சமூக விடயங்கள் தொடர்பாக தொழிற்பட்டாலும் அவற்றில் ஒரு சிலவே மனித உரிமைகளுடன் தொடர்புபட்டு தொழிற்படுகின்றது.

1997 ல் NCHRE ஆல் மேற்கொள்ளப்பட்ட வாக்கெடுப்பில் 90 வீதத்திற்கும் அதிகமான அமெரிக்கர்கள் மனித உரிமைகள் பற்றியும் உலக பிரகடனத்தைப் பற்றியும் அறிந்திருக்கவில்லை. அமெரிக்காவில் மனித உரிமைகள் தொடர்பாக புரிந்து கொள்வதில் காணப்பட்ட குறைப்பாட்டின் காரணமாக NCHRE யானது மனித உரிமைகள் கல்வி பற்றிய பாடதிட்டத்தை அடிமட்ட சமூக நீதி நிறுவனங்களுக்காக உருவாக்கியுள்ளது.

மாநாடுகள், கூட்டங்கள், சமூக நிகழ்வுகள் போன்றவற்றை NCHRE நடாத்தியுள்ளதுடன் கிட்டத்தட்ட அரை மில்லியனுக்கு அதிகமான மனித உரிமைகள் பற்றியும் உலகப்பிரகடனம் தொடர்பான பிரதிகளையும் பகிர்ந்தளித்துள்ளது.

NCHRE யானது அவர்களுடைய பயிற்சிக் கூட்டத்தின் போது மனித உரிமைகளின் உலகரீதியான தோற்றத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதன் மூலம் யாரும் குற்றவாளியாகவோ மாறவோ அல்லது துஸ்பிரயோகத்தால் பாதிக்கப்படவோ முடியும் என்பதை விளக்குகின்றது. மேலும் NCHRE யானது மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான வழிகளை குறிப்பாக சட்டக்கல்வி மற்றும் மனித உரிமைகளின் தொழிற்நுட்ப பார்வைகள் ஊடாக கற்பிப்பிகின்றது. பயிற்றுவிப்பாளர்கள் பங்குபற்றியவர்களுடன் சேர்ந்து தொழிற்பட்டு மனித உரிமைகள் செயற்பாட்டு திட்டத்தின் அபிவிருத்தியை தமது சொந்த சமுகத்தில் பயன்படுத்துகின்றார்கள்.

பயிற்சிக்கூட்டத்தில் பங்குபற்றியவர்கள் பயிற்சிப்பட்டறையில் தாங்கள் கற்றுக்கொண்ட சிந்தனைகள் மற்றும் திறன்களை தமது நிறுவனங்களுக்களில் பயன்படுத்துவதன் மூலம் NCHRE இன் வேலைகள் மிக அதிகளவில் எல்லோரையும் சென்றடைகின்றது. இந்நிறுவனம் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து 16,000ற்கும் அதிகமான சமுக நியாயத்திற்கான மனித உரிமைகள் ஆதரவாளர்களை பயிற்றுவித்துள்ளது. NCHRE யின் பயிற்றப்பட்ட குறிப்பிட்ட எண்ணிக்கையான குழுக்கள் மனித உரிமைகள் கட்டமைப்பை தமது சமூகங்களில் பயன்படுத்துவதன் மூலம் உறுதியான ஒரு மாற்றத்தை கொண்டு வந்துள்ளது. ஜொர்ஜியாவிலுள்ள பிரஜைகளுக்களின் பசிக்கான கூட்டமைப்பு உதாரணமாக மனித உரிமைகள் சம்பந்தமான விவாதங்களை பயன்படுத்தி முதல் குறைந்த பட்ச வேதனங்களை 30 வருடங்களுக்கு மேற்பட்டதெனில் அதிகரிக்க வேண்டும் என அரசாங்க சட்டமன்றங்களினால் நிறைவேற்றியுள்ளது.

ஐக்கிய அமெரிக்காவின் மனித உரிமைகள் கோட்பாடுகள் பொருத்தமற்றவை என்பதையும் விளக்கவும், மனித உரிமைகள் பிரச்சனைகள் அங்கு கிடையாது என்கின்ற உறுதியான மனோபாவங்களை மக்கள் மத்தியிலும் அரசாங்கம் மத்தியிலும் ஒழித்துக் கட்ட NCHRE உதவுகின்றது.

பசி, வறுமை, வீடு இன்மை போன்ற பிரச்சனைகளுக்காக ஏற்கனவே போராடி வருகின்ற குழுக்களுக்கு NCHRE யானது புதிய முறையான யுக்தியை வழங்குகின்றது. இந்த குழுக்கள் இந்த வழியில் தமது வேலைகளை வடிவமைக்கும் பொழுது அவர்கள் புதிய பங்காளிகளை பெற்றுக்கொள்வதுடன் அதன் மூலம் புதிதானவர்களை கவரந்து கொள்ள முடிகின்றது.

ஐக்கிய அமெரிக்காவில் கடிமையான சில பிரச்சனைகள் காணப்படுகின்றது. உதாரணமாக சுகாதார குறைபாடுகள், நல்வாழ்வு சீர்திருத்தம், நிறவேறுபாடு போன்றன. இந்த மாதிரியான பகுதிகளுக்கு அரசியல் யாப்பானது பிரஜைகளுக்கு தேவையான பாதுகாப்பை வழங்கவில்லை. எங்களுடைய ஒரே தெரிவு பூகோள கட்டமைப்பு மனித உரிமைகளை இந்த மாதிரியான பிரச்சனைகளுக்கு ஏற்றவாறு சரியான படிமுறைக்கு மாற்றுதலாகும். அதன் மூலம் நாட்டின் அரசியல் தொடர்பாடல் தோற்றப்பாட்டை மாற்றுதல்.

**லோறட்டா ரொஸ்**
**மனித உரிமைகள் கல்விக்கான தேசிய நிலையம**

**மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம்**

இலங்கையில் மனித உரிமைகளைப் பாதுகாத்து அதை முன்னேற்ற அயராது உழைத்த சட்டத் தரணிகளாலும் செயற்பாட்டாளர்களாலும் மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் 1997 இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

2000ஆம் ஆண்டு முதற் கொண்டு இந்நிலையம் இலவச சட்ட சேவைகளை அரசியல் கைதிகளுக்கும், மனித உரிமைகள் மீறல்கள் வழக்குகளில் பாதிக்கப்பட்டவர்களுக்காக சட்ட பிரதிநிதித்துவமும் காணாமற் போனவர்களுக்கான வழக்குகளில் காணாமற் போனவர்களின் குடும்பத்தினரின் சார்பாக சட்ட தலையீடுகளை மேற்கொண்டும் வருகின்றது. மேலும் பயங்கரவாதத் தடைச் சட்டமானது எவ்வாறு மனித உரிமை மீறல்களுக்கு வழிவகுத்து இந்நாட்டின் ஜனநாயகத்திற்கு ஒரு சவாலாக அமைகின்றது என்பதனை ஆராய கருத்தரங்குகள், பயிற்சி பட்டறைகள், பிரசாரங்கள் மற்றும் வெளிக்கள ஆய்வுகளையும் நடாத்தி வருகின்றது. அத்துடன் இவ்வாய்வுகள் அடங்கிய ஓர் நூலையும் வெளியிடவுள்ளது.

இதைவிட மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம் இலங்கையின் வடக்கு கிழக்கு மற்றும் மலைநாட்டில் தனது வலையமைப்பின் அரச சார்பற்ற மற்றும் சமூகம் சார்ந்த அமைப்புகளுக்கு ஆற்றல்களை பெருக்கும் வலுவூட்டல் திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது. சமூகம் சார்ந்த நிறுவன முகாமைத்துவமும் சமூக ஊக்கவியலும் இப்பயிற்சிக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்நிலையத்தின் வலையமைப்பில் மேற்குறிப்பிட்ட பிரதேசங்களிலிருந்து சுமார் 350 அமைப்புகள் உள்ளடங்குகின்றது.

தற்பொழுது வடகிழக்கில் அதிகரித்து வரும் காணாமற் போனவர்களின் விபரங்களை ஆவணப்படுத்தி ஆட்கொணர்வு மனுக்களை தாக்கல் செய்வதில் இந்நிலையம் ஈடுபட்டு வருகின்றது.

2003ஆம் ஆண்டு தகவல் சேகரிப்பதற்காக மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் சட்டத்தரணிகளும் வேறு சில அமைப்புகளும் யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை மேற்கொண்டு அங்கு 1996 மற்றும் 1997ம் ஆண்டுகளில் காணாமற் போனவர்களின் குடும்பங்கள் கையளித்த 160 மனுக்களின் விளைவாக 2004ல் இந்நிலையம் யாழ் குடாநாட்டின் நாவற்குளி, கைதடி, பாலையூர், அரியாலை, குருநகர் போன்ற பிரதேசங்களில் காணாமற் போனவர்கள் குடும்பத்தினரின் சார்பில் 45 ஆட்கொணர்வு மனுக்களை யாழ்ப்பாண மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தது. இவ்வழக்குகள் யாழ் மற்றும் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் 1996ஆம் ஆண்டின் பிற்பகுதியில் யாழ் குடாநாட்டில் இடம்பெற்ற பல சுற்றிவளைப்புகள் மற்றும் தேடுதல்களில் பலர் கைது செய்யப்பட்டு பின்னர் காணாமல் போனதற்கு இராணுவத்தினரே காரணமென்பதற்கு போதிய ஆதாரங்களிருப்பதாக சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி அண்மையில் தீர்ப்பளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்க ஓர் விடயம்.

© Copy Right Reserved

**மனித உரிமைகளுக்கும் அபிவிருத்திக்குமான நிலையம்** (CHRD)
இல.6 அலோ சாலை, கொழும்பு 3.

தொலைபேசி இல. 0094 11 4710273, 0094 11 2372246
தொலைநகல் இல: 0094 11 2564269
மின் அஞ்சல்: chrd@sltnet.lk,chrdhealth@sltnet.lk